
# ஆரம்பக்கல்வி

## ELEMENTARY EDUCATION




JANUARY 1954



CONNEMARA PUBLIC LIBRARY
11 JAN 1956
MADRAS

தமிழ் மாநில ஆட்சிமொழி மாநாட்டின்
தலைவர்

திரு. A. கஜபதி நாயக்கர் B.A.; B.L.; M.L.C.

ஆரம்பக்கல்வி ஆபீஸ்
94--95, புது தெரு
மண்ணடி, சென்னை-1

புதிய வெளியீடு ! எழில்மிகு ஏடு !

# எவரெஸ்டு ஏற்றம்

மன்னும் இமயமலை எங்களது மலையே என்று எக்காளத்துடன் கவி பாடினார் கவிஞர் பாரதியார். அந்த மாமலையின் உன்னத சிகரம் எவரெஸ்ட். பற்பல நூற்றாண்டுகளாக மனிதனின் காலடிச் சுவட்டையே காணாமலிருந்த உச்சியை உடையது எவரெஸ்ட். வெளி நாட்டு மலை ஏறும் குழுவினர் பலரின் பெரு முயற்சியையும் தோற்கடித்த பெருமை படைத்தது எவரெஸ்டு. அந்த மாபெரும் மலையின் உச்சியைக் காண 1924—ஆம் ஆண்டு முதல் செய்யப்பட்ட முயற்சிகள் அத்தனையையும் எழிலும் சுவையும் ததும்பும் முறையில் எடுத்து விளக்கும் ஏடு இது. 1953—ல் எவரெஸ்டு மலையின்மீது ஏறிய டென்சிங் – ஹில்லேரி குழுவினர் செய்த முயற்சிகளும் பட்ட பாடுகளும் தெள்ளத் தெளிய விளக்கப்பட்டிருக்கின்றன.

**படிக்கப் படிக்கத் தெவிட்டாத நடை**

**உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் உணர்ச்சி மிக்க நிகழ்ச்சிகள்**

**மாணவர் உலகிற்கு மிகவும் பயன்படும் புத்தகம்.**

*இயற்றியவர் :*

**த. சே. உமாபதி, எம். ஏ. எல். டி.**

*விலை அணா 14.*

**அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்**

94–95, புதுத்தெரு :: மண்ணடி, சென்னை–1.




ஆரம்பாசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை மானேஜர்கள்
முன்னேற்றத்திற்கு உழைக்கும் இதழ்

ஆசிரியர் : **பி. வீரராகவன்**

**வருட சந்தா ரூ. 3.]** **[தனிப் பிரதி 4 அ.**

மலர் 15 { **ஜனவரி 1954** } இதழ் 1

# பதினைந்தாவது ஆண்டு

"எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும்"—இந்தப் பழமொழியை எடுத்துக்காட்டி விரிவுரை ஆற்றாத அரசியல் தலைவர்கள் யாரும் இல்லை.

"கல்லார் நெஞ்சில் நில்லார் ஈசன்"—இந்தக் கருத்துரையை விளக்கிக்கூறி இதன் உட்பொருளைக் காணீர் காணீர் என்று மகிழ்ச்சியுடன் முழங்காத ஆட்சி முதல்வர்கள் கிடையாது.

"யாதானும் ஊராமல்—நாடாமல்—என் ஒருவன் சாந்துணையும் கல்லாதவாறு"—இந்தத் திருக்குறளை மேற்கோள் காட்டி கல்விப் பொருளின் அருமை பெருமையை அழகுற மொழியாத மேடைப் பேச்சாளர் ஒருவரும் இல்லை.

"மன்னனுக்கும் தன் தேசம் அல்லால் சிறப்பில்லை. ஆனால் கற்றவர்க்கோ சென்ற இடமெல்லாம் சிறப்பு" என்கிற பழம் பாட

னுக்குப் புது உரை கூறிப் பூரிப்படையாத எழுத்தாளர்கள் எவரும் கிடையாது.

அரசியல் மேடையானாலும் சரி, இலக்கிய அரங்கானாலும் சரி, நாடக உலகமானாலும் சரி, திரைப்படக் காட்சியானாலும் சரியே, எங்கு நோக்கினாலும், எந்தத் திசையில் திரும்பினாலும், எவருடைய சொற்பொழிவைச் செவிமடுத்தாலும், யாருடைய கட்டுரைகளில் கண்ணோட்டம் செலுத்தினாலும், கல்விப் பொருளின் சிறப்பு—செல்வாக்கு, அதனைப் பெற்றுத் தீரவேண்டியதன் அவசியம்—அவசரம், அது இல்லாவிட்டால் ஏற்படக்கூடிய துக்கம்–துயரம் ஆகியவற்றைப் பற்றிய விளக்கவுரைகளை நாம் காணாமல் இருக்க முடிவதில்லை.

நாட்டு மக்கள் அத்தனை பேரும் எழுத்தறிவு பெற்றவர்களாக மாறினால்தான் நாடு முன்னேறும் என்பதை இன்றைய தினம் நாட்டு மக்கள் அத்தனை பேரும் நன்கறிந்து கொண்டிருக்கிறார்கள்.

கல்லாத பேர்களே நல்லவர்கள் நல்லவர்கள் என்று சொல்லிக் கொண்டிருந்த காலம் மலையேறி விட்டது.

“வீணாக ஏனப்பா புத்தகங்களைக் கட்டிக்கொண்டு மாரடிக்கிறாய்? போய் ஏதாவது வேறு வேலையைப் பார்—நாலு காசு கிடைக்கும்”— இப்படிப் பேசப்பட்ட நாட்களும் பொய்யாய்ப் புராணமாய்ப் பழங் கதையாய்ப் போய்விட்டன.

“கல்வியாம் கல்வி! என்னத்திற்கப்பா உதவும் அது! காதல் கடிதம் எழுதவும் பெரியோர்களை மதிக்காமல் ஒதுக்கவும் தானே கற்பிக்கும் அது?”—இத்தகு வீண் மொழிகளும் இன்றைய தினம் புறப்படுவது கிடையாது.

கல்வி என்னும் மூன்றெழுத்துக்களால் மிகச் சுருக்கமாகக் குறிப்பிடப்படும் அந்தப் பெரும் பொருளின் மேன்மையை, பிற நாட்டினர் மட்டுமல்ல,—நம் நாட்டினரும், கற்றறிந்த பெருமக்கள் மட்டுமல்ல—படிப்பறிவற்ற பாமர மக்களும் கூட இன்றைய தினம் தெள்ளத் தெளிவாகத் தெரிந்துகொண்டு விட்டனர்.

நாடாளும் அமைச்சரும் மன்றம் ஏறும் வழக்கறிஞரும் மட்டுமல்ல, கீரை விற்கும் கருப்பாயியும் கட்டை வெட்டும் கந்தசாமியும் கூட தத்தமது குழந்தைகளுக்கு எப்பாடு பட்டாவது கல்வியறிவைத் தந்தாக வேண்டும் என்கிற உள்ள உறுதியையும் அறிவுத் தெளிவையும் பெற்றுவிட்டார்கள்.

வீதி கூட்டும் வேலப்பன், கூடை முடையும் குழந்தைவேலு, தோட்டி வேலை செய்யும் துரைசாமி, ப்யூன் வேலை புரியும் புண்ணிய கோட்டி, சாத்துக்குடி விற்கும் சண்பகவல்லி—அத்தனை பேரும்

இன்றைய தினம் கல்வியறிவின் மேன்மையைக் கசடறக் கற்றிருக் கிறார்கள்.

மகிழ்ச்சிக்குரிய செய்தி இது. நம் நாட்டின் எதிர்காலம் நறகால மாக இருக்கும் என்பதை எழில்பட விளக்கும் முன் அறிவிப்பு இது.

ஆமாம்—இது உண்மைதான்—கல்வித் துறையின் சிறப்பையும் செல்வாக்கையும் ஒரு நாடு தெள்ளத் தெளிய அறியத் தொடங்கி விட்டது என்றால், அந்த நாடு முற்போக்குப் பாதையில் முனைந் தோடத் தொடங்கி விட்டது என்றுதான் பொருள். மெய்தான்.

ஆனால் கல்வித் துறையின் அருமை பெருமைகளைப்பற்றி அந் தாதியும் உலாவும் பரணியும் பத்துப் பாட்டும் பாடப்படுகிற இந்தக் காலத்திலேயும், அந்தக் கல்வியறிவை இளங் குழந்தைகளின் உள்ளத் தில் ஊன்றுகிற ஆரம்ப ஆசிரியர்களின் நிலை நம் நாட்டில் எந்த வகை யில் உள்ளது என்பதை எண்ணும்போதுதான், வேதனை, நம் உள் ளத்தை முற்றுகையிடுகிறது; கண்ணீர், நம் கன்னத்தை நனைத்து ஓடுகிறது.

கல்வி கல்வி என்று காது செவிடுபடும் அளவுக்குப் பேச்சு எழுகிறது நாட்டிலே.

ஆனால் அதே நேரத்தில் கல்வியை வளர்க்கும் கருத்துள்ள பணிபுரியும் ஆரம்ப ஆசிரியர்களைப் பற்றியோ அலட்சியப் போக்கு அதன் முழு அளவில் காட்டப்படுகிறது அதிகாரம் படைத்த அனைவ ராலும்.

இதைவிட வேதனை கலந்த விசித்திரம் வேறென்ன இருக்க முடியும்?

கல்வியின் சிறப்பை அறியாத நாட்டிலே கல்வியை வளர்க்கும் ஆசிரியர்கள் அலட்சியப் படுத்தப் பட்டால் அதனை நம்மால் புரிந்து கொள்ள முடியும். ஆனால் கல்வியின் மேன்மையை நாட்டு மக்கள் அனைவரும் முழங்குகிற இந்த நாட்டில், அந்தக் கல்வியை ஊட்டுகிற கண்ணியவான்களுக்கு அலட்சியத்தையே பரிசாக அளிக்கிறார்கள் ஆட்சியாளர்களும் பிறரும் என்றால், இந்த வேதனையை எப்படித் தாங்கிக்கொள்ள முடியும் நம்மால்? எவ்வாறு பொறுத்துக்கொள்ள முடியும் நம் உள்ளத்தால்?

ஆகவேதான், நாம், பதினான்கு ஆண்டுகளுக்கு முன்னால், ஆரம்ப ஆசிரியர்களுக்குக் காட்டப்படுகிற இந்த அலட்சிய உணர்ச் சியை அழித்தொழிக்க வேண்டும் என்கிற ஒரே குறிக்கோளை முன் னால் வைத்து, "**ஆரம்பக்கல்வி**" என்னும் இவ்விதழை நாட்டு மக்கள் முன் நடமாடவிட்டோம்.

இந்த மாதம் முதல் இந்த ஏட்டிற்குப் பதினைந்தாவது வயது தொடக்கமாகிறது.

அனைவருக்கும் தெரியும்—சென்ற பதினான்கு ஆண்டுகளாக நம்முடைய ஏடு ஆரம்ப ஆசிரியர்களின் முன்னேற்றத்திற்காக ஓயாது பாடுபட்டு வந்திருக்கிறது.

அவர்களுக்கு வேதனை ஏற்பட்ட நேரத்தில் எல்லாம் அந்த வேதனையைப் போக்க விரைந்து பணியாற்றியிருக்கிறது.

அவர்களுடைய முன்னேற்றத்திற்கு முட்டுக் கட்டைகள் போடப்பட்ட காலத்திலெல்லாம் அந்த முட்டுக்கட்டைகளைத் தூள் தூளாக உடைத்தெறிந்திருக்கிறது.

ஆட்சியாளர்களும் அரசியல் வாதிகளும் ஆரம்ப ஆசிரியர்களை மறந்துவிட்ட சமயங்களில் எல்லாம் அந்த மறதியைப் போக்கி, அலட்சியத்தை அகற்றி, ஆசிரியர்களின் பக்கம் ஆட்சியாளர்களின் கவனத்தை இழுத்து வந்து நிறுத்தி, இணையற்ற பணி புரிந்திருக்கிறது.

ஆரம்ப ஆசிரியர்களின் ஊதியம் உயரவேண்டும், வறுமை அகல வேண்டும், வாட்டம் குறையவேண்டும், மகிழ்ச்சி பெருக வேண்டும் என்பதற்காக, ஓய்வு ஒழிவு இன்றி, கொஞ்சம் பொறுப்போம் பிறகு பார்ப்போம் என்கிற எண்ணம் இன்றி, நம்மால் என்ன ஆகும்—நாமென்ன நாடாளும் அமைச்சர்களா என்கிற விரக்தி உணர்ச்சி இன்றி, இடையீடின்றிப் பணியாற்றி வந்திருக்கிறது "ஆரம்பக்கல்வி."

ஆரம்ப ஆசிரியர்களின் மாத ஊதியம் குறைந்தது நூறு ரூபாயாகவாவது உயர்த்தப்பட வேண்டும் என்பது நம்முடைய ஆசை. அத்தகு நன்னிலை ஏற்பட்டாலொழிய தொடக்கக் கல்வி விரைந்து பரவாது என்பது நம்முடைய முடிவு. தொடக்கக் கல்வி விரைந்து பரவினாலொழிய இந்த நாட்டிற்கு ஏற்றம் இல்லை என்பது நம்முடைய கருத்து.

நாடு செழிக்கவேண்டுமானால் கல்வி செழிக்க வேண்டும். கல்வி செழிக்க வேண்டுமானால் ஆசிரியர்கள் செழிக்க வேண்டும். ஆசிரியர்கள் செழிக்கவேண்டுமானால் அவர்களின் ஊதியம் உயரவேண்டும். ஆகவே ஆசிரியர்களின் ஊதியம் உயர்வு பெறு முன்னர் இந்த நாடு முன்னேறும் என்று எண்ணுவது, மூன்றாவது வகுப்புப் படிப்புக்கும் ஏழு வயது முத்துசாமி அடுத்த ஆண்டிலேயே பி. ஏ. வகுப்பை அடைந்துவிட முடியும் என்று கருதுவதைப் போன்ற பேதமையே தவிர வேறில்லை.

பயிர் வளரவேண்டுமானால் போதுமான அளவு தண்ணீரை வயலுக்குப் பாய்ச்சித்தான் ஆகவேண்டும். கல்வி செழிக்க வேண்டு

மானல் தேவையான அளவு ஊதியத்தை ஆசிரியர்களுக்குக் கொடுத்துத்தான் தீரவேண்டும்.

இதனை நன்ருக அறிந்திருக்கிருர்கள் பிரிட்டன்—ரஷ்யா—அமெரிக்கா—சீஞ போன்ற நாடுகளின் ஆட்சித் தலைவர்கள்.

அறிந்த காரணத்தால்தான் அவர்கள், தத்தம் நாட்டு ஆரம்ப ஆசிரியர்களுக்கு, வறுமை, அவர்களை எட்டிப் பார்க்கவும் அஞ்சி ஒதுங்குகிற அளவில், உயர்ந்த நிலை ஊதியம் கொடுத்திருக்கிருர்கள்.

ஆனல் நம்முடைய நாட்டிலோ? இந்த முக்கியமான உண்மையை ஆட்சியாளர்கள் இன்றளவும் உணர்ந்ததாகத் தெரியவில்லை. உணர வைக்க வேண்டும் என்பதே நம்முடைய ஆர்வம்; ஆசை; ஆவல்; கோட்பாடு.

வாடிய முகமும் வதங்கிய உள்ளமும் படைத்த சோக சித்திரங்களாக இருக்கக் கூடாது ஆரம்ப ஆசிரியர்கள். ஒளி பொருந்திய கண்களும், உற்சாகம் ததும்பும் நெஞ்சமும் படைத்த அஞ்சா நெஞ்சர்களாகப் பவனிவர வேண்டும் அந்த எழுத்தறிவிக்கும் இறைவர்கள்.

நாளை வாழ்வுக்கு என்ன செய்வோம் என்று ஏங்கித் தவிக்கிற ஏழைகளாகக் காட்சி அளித்தல் ஆகாது ஆசிரிய உலகினர். குடும்பத்திலே நிம்மதியும், மனைவி மக்களிடத்திலே மகிழ்ச்சியும் ஒளி வீசும் காட்சியைக் கண்டு கருத்து மகிழ்ந்து வாழும் கட்டிளங் காளைகளாக உலவவேண்டும் அந்தக் கல்வியறிவை வளர்க்கும் கருத்துச் செல்வர்கள்.

தான் உண்டு தன் பெண்டு பிள்ளை குடும்பம் உண்டு என்று இந்த அளவிலே சுருண்டு சுருண்டு மடங்கிப் போகிற குறுகிய நிலையினராக இருத்தல் கூடாது அந்த அறநெறிப் பணியினர். சமுதாயப் போராட்டங்களிலும், அரசியல் மேடைகளிலும், பொருளாதார உலகிலும் தலைநிமிர்ந்து நிற்கும் தன்னிகாற்ற தொண்டர்களாக விளங்க வேண்டும் அந்த எழில்மிகு செயலினர்.

ஆரம்ப ஆசிரியர்கள் என்ருல், அவர்களைக் கண்டதும ஆட்சியாளர்கள் பெருமதிப்பு அளிக்கவேண்டும். அரசியல் வாதிகள் மகிழ்ச்சியுடன் குலவவேண்டும். சமுதாயத் தலைவர்கள் அவர்களுடன் பழகுவதைத் தங்களுக்கு ஒரு பெருமை என்று கருத வேண்டும். பெற்ருேரும் மற்ருேரும், ஆரம்ப ஆசிரியர்களுடன் உலவுவதை, அவர்களுடன் உரையாடுவதை, அவர்களின் உரைகளைச் செவிமடுப்பதைத் தங்களுக்குக் கிடைத்திருக்கிற கிடைக்தற்கரிய ஒரு பேறு என்று கருதவேண்டும். வேறு பல தொழில்களிலே ஈடுபட்டிருப்

பவர்கள் நாமும் ஓர் ஆசிரியராக இல்லாமற் போனேமே என்று ஆசிரியர்களைப் பார்த்துப் பெருமைப்படுகிற நிலைமை உருவாக வேண்டும். ஒரே வார்த்தையில் சொல்வதானால், ஆரம்ப ஆசிரியர்கள், வெறும் ஆரம்ப ஆசிரியர்களாக மட்டும் இருந்தால் போதாது. நாட்டு மக்கள் அனைவராலும் கவனித்துத் தீரவேண்டிய முக்கியமான தொரு சக்தியாக விளங்க வேண்டும்.

இப்படிப்பட்ட செல்வாக்கும் சிறப்பும் ஆரம்ப ஆசிரியர்களின் காலடியில் வந்து கொஞ்ச வேண்டுமானால், முதலில் ஆரம்ப ஆசிரியர்களின் மாத ஊதியம் உயர்ந்தாக வேண்டும்—ஆமாம்—நிச்சயமாக உயர்ந்தாக வேண்டும்—ஆனால் அது மட்டும் போதாது.

ஆசிரியர்களின் ஊதியம் உயர்வதால் மட்டுமே அவர்களுடைய செல்வாக்கு உயர்ந்து விடும் என்று நாம் நம்புவதில்லை. ஊதிய உயர்வால் அவர்களின் செல்வாக்கு ஓரளவு உயரும். உண்மைதான். ஆனால், அந்த செல்வாக்கு, அதன் முழு வளர்ச்சியை அடைய வேண்டுமானால், ஆசிரியர்கள், பள்ளிப் பிள்ளைகளுக்கு மட்டுமல்ல, இந்த நாட்டின் மனித சமுதாயத்திற்கே ஆசிரியர்களாக மாறியாக வேண்டும். அர்த்தமற்ற சடங்குகளாலும் அவசியமற்ற சம்பிரதாயங்களாலும் கட்டுண்டு கிடக்கும் நம் சமுதாயத்திற்குப் பகுத்தறிவு ஒளியைக் காட்டிப் புத்துலகப் பாதையில் அதனை அழைத்துச் செல்ல வேண்டும் ஆரம்ப ஆசிரியர்கள். தொட்டதற்கெல்லாம் சாஸ்திரத்தையும் எடுத்ததற்கெல்லாம் புராணத்தையும் புரட்டிப் பார்த்துக்கொண்டிருக்கும் பழமை உணர்ச்சியை ஒதுக்கித் தள்ளிவிட்டு, விஞ்ஞான அறிவின் துணைகொண்டு முன்னேற்றப் பாதையில் விரைந்தோடும் பண்பினை நம் மக்கள் உள்ளத்தில் உருவாக்கவேண்டும் ஆரம்ப ஆசிரியர்கள். புது உலகத் தூதுவர்களாக, பகுத்தறிவின் சின்னங்களாக, விஞ்ஞான வாழ்க்கையின் வழிகாட்டிகளாக ஒளி வீசத் திகழவேண்டும் அந்த அறிவின் செல்வர்கள். நாட்டின் முன்னேற்றத்திற்கான நற்பணிகள் அத்தனையிலேயும் அவர்கள் முதல் இடம் பெறவேண்டும்; முன்னணியில் நிற்க வேண்டும்; எதிர்காலம் போற்றும் வகையில் எழில்மிகு பணி புரியவேண்டும்; நாட்டின் நன்மைக்காகப் பாடுபடும் நல்ல தம்பிகளாக விளங்க வேண்டும்.

இதுதான் நம்முடைய இலட்சிய கீதம். இதுவேதான் நம்முடைய இதய ஆர்வம்.

இத்தகு எழில் நிலையை ஆரம்ப ஆசிரியர்கள் அடைய வேண்டும் என்பதற்காகச் சென்ற பதினைந்து ஆண்டுகளாக ஓய்வறியாது பாடுபட்டிருக்கிறது நம்முடைய ஏடு. இந்த ஆண்டு முதல் அந்த அரும்பணி மேலும் பல மடங்கு விரைவுடனும் வன்மையுடனும் நடத்தப்படும் என்கிற உறுதிமொழியைத் தென்னாடு எங்கணுமுள்ள

ஆயிரமாயிரம் ஆரம்ப ஆசிரியர்களுக்கும் ஆசிரிய மானேஜர்களுக்கும் பதினைந்தாவது ஆண்டைத் தொடங்குகிற இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம்.

இந்தப் பதினைன்கு ஆண்டுகளில், "ஆரம்பக்கல்வி"யின் வளர்ச்சிக்கு உறுதுணை புரிந்தவர்கள் எண்ணற்றவர்கள். ஆரம்ப ஆசிரியர்களின் எழுச்சி முரசமும் உரிமைக் குரலுமாகிய இந்த இதழுக்குச் சந்தாதாரராகச் சேர்ந்தும், பிறரைச் சந்தாதாரராகச் சேர்த்தும், தாங்கள் கட்டுரைகள் பல தீட்டியும், பிறரைத் தீட்டும்படி செய்தும், தங்கள் பள்ளிகளில் எங்கள் பாட புத்தகங்களை வைத்தும், பிற பள்ளிகளில் வைக்கும்படி செய்தும், வேறு பற்பல துறைகளில் எங்களுக்கு உதவிபுரிந்தும் கைகொடுத்து ஆதரித்தும் பணிபுரிந்த ஆயிரமாயிரம் நண்பர்களுக்கும் எங்கள் அன்பையும் வணக்கத்தையும் உரிமைப்படுத்துகிறோம்.

ஆரம்ப ஆசிரியர்காள்! அருமைத் தோழர்காள்! உங்களுடைய இதழ் "ஆரம்பக்கல்வி", உங்களுடைய முழு ஆதரவும் ஒத்துழைப்பும் என்றென்றும் தனக்கு நிச்சயமாக உண்டு என்கிற பூரிப்போடும் பெருமிதத்தோடும், இந்த [illegible] முதல், தன்னுடைய பதினைந்தாவது ஆண்டைத் தொடங்குகிறது.

**வாழ்க "ஆரம்பக் கல்வி"!**

**ஓங்குக ஆரம்ப ஆசிரியர்கள் நிலை!**

---

## அறிஞர் வாயுறை

உன்னுடைய பெரிய ஆஸ்தியை விட உன் மனதில் தோன்றக்கூடிய சிறந்த நோக்கங்களே உலகுக்கு இன்றியமையாதன. மக்களின் நல் நோக்கங்களே உலகைத் திருத்தி அமைக்கக் கூடியவை.


**—பிரமஹம்சா.**

நாம் செய்த தவறை உடனே ஒத்துக் கொள்வது போன்ற கண்ணியமான குணம் வேறொன்றுமில்லை.

**—அன்னேன்.**

நான் பிறரைப்பற்றிப் பேசுவதென்றால் அவர்களின் நல்ல குணங்களை எடுத்துரைப்பேனே யன்றிக் குறைகளை ஒரு போதும் கூறுவதில்லை.

**—பிராங்லின்.**



## ஆட்சி மொழியும் ஆளும் வழியும்

சென்ற சில ஆண்டுகளாகவே செந்தமிழ் நாட்டிற்கு நல்ல காலம் பிறந்திருக்கிறது. தமிழ் நாட்டைத் தாக்குகிற பொதுப் பிரச்சினைகள் உருவாகிற நேரத்தில் எல்லாம், தமிழ் நாட்டில் உள்ள பல்வேறு கட்சிகளின் தலைவர்களும், தத்தமது கொள்கை வேற்றுமைகளை மறந்துவிட்டு, ஒரே மேடையில் தோன்றி ஒரே அணியில் கூடி ஒத்த முறையில் பணியாற்றுகின்ற உன்னதமான காட்சியை, தமிழகம், இப்போதெல்லாம் கண்டு வருகிறது. தமிழ் நாட்டின் எதிர்காலம் ஒளி பொருந்தியதாக இருக்கும் என்பதற்கு நல்லதோர் அடையாளம் அல்லவா இது?

சென்ற ஆண்டில் செந்தமிழ் நாட்டை விட்டு சென்னை நகரம் அகன்றுவிடுமோ என்கிற ஆபத்தான நிலைமை உருவாகிய நேரத்தில், தமிழ் நாட்டில் உள்ள எல்லாக் கட்சித் தலைவர்களும் ஒன்றுகூடி நின்று உயரிய முறையில் பணியாற்றினர். அப்படிப் பணியாற்றியதன் விளைவாக சென்னை செந்தமிழுக்கே சொந்தம் என்கிற உரிமைக்குரல் முழு வெற்றி பெற்றது. அது போலவே ஐந்து ஆண்டுகளுக்கு முன்னால் அப்போது கல்வி அமைச்சராக இருந்த அன்பர் அவனாசிலிங்கனார் கட்டாய இந்தியைத் தமிழ் மாணவர்கள் மீது திணித்தபோது எல்லாக் கட்சித் தமிழர்களும் சீறி எழுந்தனர் சிங்க ஏறுகளெனப் போரிட்டனர். அந்த ஒன்றுபட்ட போராட்டத்தின் விளைவாகக் கட்டாய இந்தி தவிடுபொடியாயிற்று. தமிழின் சிறப்பு காப்பாற்றப்பட்டது. இந்த இரண்டு பிரச்சினைகளில் தமிழ் மக்கள் ஒன்றாகக் கூடி நின்று ஒத்த முறையில் பணியாற்றியதைப் போலத்தான் இப்போதும் ஒன்றுகூடி இருக்கிறார்கள். எனவே இந்த முறையும் வெற்றி தமிழ் மக்களின் காலடியில் வந்து தஞ்சமடையும் என்பதில் நமக்குத் துளியும் ஐயமில்லை. இந்த முறை தமிழர்கள் ஒன்று கூடி இருப்பது, தமிழ் மாநிலத்தில் தமிழ் மொழியே ஆட்சி மொழியாக இருக்கவேண்டும் என்கிற பிரச்சினையில் ஆகும்.

சென்னை மாநிலத்தைவிட்டு ஆந்திரப் பகுதிகள் பிரிந்து தனி மாநிலம் அமைத்துக்கொண்டு விட்டபடியால் மிச்சமிருக்கும் சென்னை மாநிலம் தமிழ் மாநிலம் என்றே அழைக்கப்பட வேண்

டும். இந்த மாநில வட்டாரத்திற்குள் கன்னட ஜில்லா ஒன்றும், மலையாள ஜில்லா ஒன்றுமாக தமிழல்லாத ஜில்லாக்கள் இரண்டு இருக்கின்றன என்ற போதிலும் இவற்றின் பரப்பளவும் ஜனத்தொகையும் மிகவும் கொஞ்சம். ஏனைய பன்னிரண்டு ஜில்லாக்களும் தமிழ் ஜில்லாக்கள். இன்றைய சென்னை மாநிலத்தின் மிகப் பெரும் பகுதி தமிழ்ப் பகுதி. மிகப் பலர் மக்கள் தமிழ் மக்கள். ஆகவே ஆந்திரப் பகுதி நீங்கிய இன்றைய சென்னை மாநிலத்தைத் தமிழ் மாநிலம் என்று அழைப்பதே பொருத்தமும் தகுதியும் உடையது ஆகும்.

இந்தப் பகுதியைத் தமிழ் மாநிலம் அல்லது தமிழ் மாகாணம் என்று அழைத்துவிட்டால் மட்டும் போதாது. இந்த மாநிலத்தின் சட்டசபை, நீதிமன்றம், ஆட்சியாளர்களின் அலுவலகங்கள் அத்தனையிலேயும் தமிழ் மொழியே இனி இடம் பெற வேண்டும். ஜில்லா கலெக்டரிடமிருந்து மாகாண மந்திரிக்குக் கடிதம் வருகிறது என்றால் அந்தக் கடிதம் தமிழ் மொழியிலேயே இருக்க வேண்டும். அது போலவே மாநிலக் கல்வித்துறை அதிகாரியிடமிருந்து ஆரம்பப் பள்ளிகளுக்கு ஒரு தாக்கீது வருகிறது என்றால் அந்தத் தாக்கீதும் தமிழிலேயே இருக்க வேண்டும். ஒரே வார்த்தையில் சொல்ல வேண்டுமானால், இன்றைய சென்னை மாநிலத்தில் இனி, செந்தமிழ் மொழியே ஆட்சி மொழியாகத் திகழவேண்டும்.

இது மிகவும் நியாயமான கருத்து. நியாய புத்தி படைத்த யாரும் மறுத்துக்கூற முடியாத கருத்து. இத்தகு சிறந்த கருத்தை உடனடியாக ஒப்புக்கொண்டு நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டும் என்று ஆட்சியாளர்களுக்கு அறிவிப்பதற்காக சென்னையில் 20-12-53 அன்று, தமிழ் மாநில ஆட்சி மொழி மாநாடு திரு. கஜபதி நாயகர், B.A.; B.L; M. L. C., முன்னாள் ஜில்லா நீதிபதி அவர்கள் தலைமையில் சிறப்புடன் நடைபெற்றது. அந்த மாநாட்டில் தான் கட்சி வேற்றுமை—கொள்கை வேற்றுமை – ஜாதி வேற்றுமை எந்த வேற்றுமையையும் கருதாது தமிழ் நாட்டுத் தலைவர்கள் அனைவரும் ஒன்று கூடி நின்று தமிழ் மொழியே ஆட்சி மொழியாக வேண்டும் என்ற உரிமைக் குரலை இடியோசையென எழுப்பினர். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நெடுஞ்செழியன் – அன்பழகன், – நடராஜன், திராவிட சட்டசபைக் கட்சியின் தலைவர்கள் டி. சண்முகம், சுயம்பிரகாசம், இ. எல். இராகவன், கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் ஜீவாநந்தம், தமிழரசுக் கட்சியைச் சார்ந்த கா. மு. ஷெரீப், பிரஜா கட்சி உறுப்பினர் கே. விநாயகம், காங்கிரஸ் எம்.எல்.ஏ கணபதி, பிரசண்ட விகடன்

ஆசிரியர் நாரணதுரைக் கண்ணன், தமிழ்ப் புலவர் தலைவர் மயிலை சிவமுத்து, திருச்சி விசுவநாதம் ஆகிய பல்வேறு தலைவர்களும் சென்னை மாநிலத்தில் தமிழ்மொழியே ஆட்சி மொழியாக வேண்டும் என்பதை வற்புறுத்திச் சொற்பொழிவாற்றினர்.

சென்னை மாநிலத்தின் ஆளும் வழி சிறந்ததாக இருக்கவேண்டுமானால் இம் மாநிலத்தில் ஆட்சி மொழி தமிழாகத்தான் இருக்க வேண்டும். தமிழ் நாட்டின் ஆட்சி தமிழ் ஆட்சியாக இல்லாத வரையில் அது எப்படி சிறந்த ஆட்சியாக இருக்க முடியும்? ஆகவே உடனடியாக தமிழ் மொழியை இம் மாநிலத்தின் ஆட்சி மொழியாக ஆக்க வேண்டும் ஆச்சாரியார். ஆனால் ஆக்குவாரா? இதுதான் இன்றைய தினம் தமிழ் மக்கள் அனைவரும் ஒரே குரலில் கேட்கும் ஒரே கேள்வி.

## நமது பாதையில் கல்வி அமைச்சர்

ஆச்சரியம்! ஆனால் உண்மை! கல்வி அமைச்சர் கனம் சுப்பிரமணியனார் நமது பாதையில் நடக்கத் தொடங்கி இருக்கிறார். ஆசிரியர்கள் கூறுவதா அதை நாங்கள் கேட்பதா என்கிற முறையிலேயே ஆட்சியாளர்கள் இதுவரை நடந்து வந்திருக்கிறார்கள். ஆனால், இதுபோது கனம் சுப்பிரமணியனார் நாம் அடிக்கடி கூறி வந்திருக்கிற ஒரு முக்கியமான கருத்தை மனமார ஒப்புக்கொண்டிருக்கிறார். பள்ளிக்குச் செல்ல வேண்டிய வயதுடைய பிள்ளைகள் எண்பது லட்சம் பேரில் ஏறத்தாழ நாற்பது லட்சம் பேருக்கு இன்றையதினம் பள்ளிக்கூடம் செல்ல வாய்ப்பு இல்லை. இந்த நிலையில் அவர்கள் அனைவரையும் பள்ளிக்கூடம் செல்லும்படி செய்வதுதான் அரசியலாரின் அவசரமான கடமையே தவிர முதியவர் கல்வி என்கிற பெயரால் ஒரு பெருந்தொகையை வீணாக்குவது முறையாகாது என்று நாம் அடிக்கடி எழுதியிருக்கிறோம் ஆரம்பக் கல்வி இதழில். முதியவர் கல்வி கூடாது என்பது அல்ல நம்முடைய கருத்து. இளைஞர் தம் கல்விக்கே வழி இல்லாத நிலையில் முதியவர் கல்விக்காகப் பணிபுரிவது வெற்றியைத் தராது என்பதே நம்முடைய எண்ணம். முதியவர் கல்விக்காக முயற்சி செய்ய வேண்டியதுதான். ஆனால் அந்த முயற்சி, இளைஞர்தம் கல்விக்கான எல்லா ஏற்பாடுகளும் குறைவற்ற முறையில் செய்து முடிக்கப்பட்ட பிறகே தொடங்கப்பட வேண்டும். அப்படி இல்லாமல், ஒரு புறம், இளங் குழந்தைகளைக் கல்வி அறிவு அற்றவர்களாக வளர விட்டுக் கொண்டே, மற்றோர் புறம், முதியவர் கல்விக்காகப் பாடுபடுவது என்று சொன்னால், அது, ஓட்டைக் குடத்தைக்கொண்டு கிணற்றிலிருந்து தண்ணீர் இறைக்க முயன்ற பண்டைப்

பழங்கதையாகவே முடியும். வெள்ளிடை மலையென விளங்கும் உண்மை இது. என்றாலும் ஏனோ தெரியவில்லை இதனை இது வரை விளங்கிக்கொள்ள மறுத்தனர் இந்த நாட்டு ஆட்சியாளர்கள். ஆனால் கனம் சுப்ரமண்யம் அண்மையில் இதனை ஒப்புக்கொண்டிருக்கிறார். ஆமாம்—அத்தகு முயற்சி பயன் படாதுதான் என்று வெளிப்படையாகக் கூறி இருக்கிறார். "கல்வித் துறையில் முதலில் கவனிக்கப்பட வேண்டியது ஆரம்பக் கல்விதான். அந்தத் துறையில் போதுமான அளவு கவனம் செலுத்தப்பட்ட பிறகு தான், முதியவர் கல்வியின் பக்கம் நாம் திரும்பிப் பார்க்க முடியும். எல்லாக் குழந்தைகளையும் படிக்க வைக்கவே நம்மால் முடியாமல் இருக்கிறபோது முதியவர் கல்விக்காகப் பணத்தைச் செலவழிக்க முயல்வது எந்த வகையில் அறிவுடைமையாகும்?'' என்று கேட்டிருக்கிறார் அமைச்சர் சுப்ரமண்யம். தென் இந்திய முதியவர் கல்விக்கழகத்தினர் சென்னை உட்லண்ட்ஸ் ஓட்டலில் அவருக்கு அளித்த விருந்து விழாவின்போதுதான் கனம் சுப்ரமண்யம் இந்த மருந்தை அளித்திருக்கிறார் அந்நண்பர்களுக்கு! அளிக்கத்தானே வேண்டும்! அளிப்பதுதானே முறை? ஏராளமான இளைஞர்களைக் கல்வியறிவற்ற முதியவர்களாக மாறும்படி விட்டு விட்டு அதன் பிறகு முதியவர் கல்விக்காகப் பாடுபடுகிறேன் என்று முன் வருவது எந்த விதத்தில் சிறந்த வழியாகும்?

## அது சரி!
## ஆனால் இது?

முதியவர் கல்வியை பற்றி கனம் சுப்ரமண்யம் கூறியுள்ள கருத்தை அனைவரும் ஒப்புக்கொண்டே தீரவேண்டும். ஆனால் புதிய கல்வித் திட்டத்தைப் பற்றி அவர் தெரிவித்துள்ள ஓர் கருத்து, எவராலும் ஒப்புக்கொள்ள முடியாத விசித்திரத் தன்மை வாய்ந்ததாக இருக்கிறது. ஆச்சாரியாரின் கல்வித் திட்டத்தை உடனடியாக நிறுத்திவிட வேண்டுமென்று சென்னை சட்டசபை சில மாதங்களுக்கு முன்னால் ஒரு தீர்மானம் நிறைவேற்றியது அல்லவா? அந்தத் தீர்மானத்தை ஏன் இன்னமும் அமுலுக்குக் கொண்டு வரவில்லை —அந்தத் தீர்மானத்தின்படி ஏன் இன்னமும் புதிய திட்டத்தைப் பள்ளிகளிலிருந்து அகற்றவில்லை—இப்படியெல்லாம் சட்டசபையின் தீர்மானத்தைப் புறக்கணிப்பது எந்த வகையில் ஜனநாயகம் ஆகும் என்றெல்லாம் பல சட்டசபை உறுப்பினர்கள் கொதித்தெழுந்து கேட்டிருக்கிறார்கள் இந்த மாதம். இதற்கு என்ன விடை அளித்திருக்கிறார் தெரியுமா கனம் சுப்ரமண்யம்? கேளுங்கள் அந்த வேடிக்கையை. "திட்டத்தை நிறுத்திவைக்க வேண்டும் என்பதே தீர்மானம். அதாவது இருக்கிற நிலையிலேயே திட்டத்தை நிறுத்தி வைக்க

வேண்டும், மேற்கொண்டு அதனை விஸ்தரிக்கக் கூடாது என்பது தான் அந்தத் தீர்மானத்தின் பொருளே தவிர திட்டத்தைக் கைவிடவேண்டும் என்று பொருளில்லை. திட்டத்தை நிறுத்தி விடவேண்டும் என்றால், அதனை அப்போது இருந்த நிலையிலேயே வைத்திருக்க வேண்டும் என்று தான் கருத்து. அந்தக் கருத்தின்படியேதான் நாங்கள் திட்டத்தை அன்று இருந்தபடி அமுலில் வைத்திருக்கிறோம். மேற்கொண்டு விஸ்தரிக்கவில்லை. இந்த நிலையில் தீர்மானத்தை நாங்கள் புறக்கணித்து விட்டதாகக் கூறியது எப்படிப் பொருத்தமாகும்?" என்று பேசியிருக்கிறார் கனம் சுப்ரமண்யம். நிறுத்திவிடு என்ற வார்த்தைக்கு தொடர்ந்து அமுலில் வைத்திரு என்று பொருளாம். எப்படி இருக்கிறது வேடிக்கை? யார் ஒப்பமுடியும் இந்த விபரீதத்தை? டேய் ராமசாமி, உன் முட்டாள்தனத்தை நிறுத்துடா என்றால், உன் முட்டாள் தனத்தைக் கைவிடு என்று தான் பொருளே தவிர, உன் முட்டாள்தனத்தை மேலும் விஸ்தரிக்காமல் இருந்த நிலையிலேயே தொடர்ந்து நடத்து என்று ஒரு நாளும் பொருள் ஏற்படாது. அதுபோலவேதான் கல்வித் திட்டத்தை நிறுத்துக என்று கூறினால் திட்டத்தைக் கைவிடுக என்று தான் பொருளாகுமே யன்றி தொடர்ந்து நடத்துக என்று பொருள் தோன்றாது.

நாட்டு மக்களிடத்திலேயும் சரி, சட்ட சபை உறுப்பினர்கள் இடையேயும் சரி, புதிய திட்டத்திற்கு மாபெரும் எதிர்ப்பு உருவாகி இருக்கிறது என்பதை எத்தரும் பித்தரும் தவிர வேறெவரும் மறுக்க முடியாது. இந்த நிலையில் திட்டத்தைக் கைவிடுவதுதான் ஜனநாயகப் பண்பாடு ஆகுமே அன்றி, இப்படிப்பட்ட குதர்க்க வாதங்களாலும் சட்ட நுணுக்க உரையாடல்களாலும் மக்கள் மன்றத்திற்கு மதிப்பளிக்க மறுப்பது ஒரு நாளும் முறை ஆகாது. அது நல்லாட்சியின் அடையாளமும் ஆகாது.

## ஏன் இந்தப் பிடிவாதம்?

ஆம், அப்படித்தான் கேட்கத் தோன்றுகிறது நமக்கு, அன்பர் ஆச்சாரியாரின் அண்மைக் கால நடவடிக்கைகளைக் கவனிக்கும் போது.

இனியும் ஆச்சாரியார் இம் மாநிலத்தின் முதலமைச்சராக இருக்கக்கூடாது என்கிற கருத்து, சட்டசபை காங்கிரஸ் உறுப்பினர்கள் உள்ளத்தில் ஆழப்பதிந்துவிட்டது. ஆகையால்தான் அவர்கள் சென்ற மூன்று மாத காலமாக ஆச்சாரியாரை வெளியேற்றுவதற்கான முயற்சியை அடிக்கடி தொடங்கி வருகிறார்கள்.

ஜில்லா போர்டுகளைக் கலைப்பது என்று முடிவு செய்த போதும் சரி, புதிய கல்வித் திட்டத்தை நுழைப்பது என்று திட்டமிட்ட நேரத்திலும் சரி,

ரெவின்யூ போர்டை எடுத்துவிடுவது என்று தீர்மானம் செய்த வேளையிலும் சரி, புதிய அமைச்சர்கள் மூவரை நியமனம் செய்த சமயத்திலும் சரி, ஆச்சாரியார் அவருடைய கட்சி எம்.எல்.ஏக்களைத் துளியளவும் கலந்து ஆலோசிக்க வில்லை. அப்படிக் கலந்து ஆலோசிக்க வேண்டியது ஜனநாயக முறை ஆயிற்றே என்கிற எண்ணம் அவருடைய உள்ளத்தில் உருவாகவுமில்லை. ஆகவேதான் சட்ட சபை காங்கிரஸ் உறுப்பினர்களில் பெரும்பாலோர் அவருடைய தலைமையை மாற்றிவிட வேண்டுமென்று துடிதுடிக்கிறார்கள். பொதுக் கூட்டங்களிலும் பத்திரிகைகள் மூலமும் சட்டசபைக் காங்கிரஸ் கூட்டத்திலேயும் இந்தக் கருத்தை அடிக்கடி எடுத்துக் கூறுகிறார்கள். அனைத்திந்தியக் காங்கிரசின் தலைவர் பண்டித நேருவுக்கும் தங்களுடைய இந்த எண்ணத்தை அறிவித்திருக்கிறார்கள்.

ஆமாம்—எந்தக் காங்கிரசின் எம். எல். ஏக்கள் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் முதலமைச்சராக இருக்க வாருங்கள் என்று ஆச்சாரியாரை வேண்டி அழைத்தார்களோ அதே உறுப்பினர்கள்தான் இப்போது ஆச்சாரியாரின் தலைமை தங்களுக்கு வேண்டாம் என்று தெரிவிக்கிறார்கள்.

முதல் முறை தெரிவித்தார்கள். பண்டித நேரு தலையிட்டார். ஆச்சாரியாரின் தலைமை காப்பாற்றப்பட்டது.

இரண்டாம் முறை தெரிவித்தார்கள். மீண்டும் நேருவின் தலையீடு ஏற்பட்டது. மறுபடியும் ஆச்சாரியாரின் தலைமை காப்பாற்றப்பட்டுவிட்டது.

இப்போது மூன்றும் முறையாகக் காங்கிரஸ் உறுப்பினர்கள் ஆச்சாரியாரின் தலைமையை அகற்ற முன் வந்திருக்கிறார்கள். இந்த முறையும் நேரு தலையிடுவாரா என்பது தெரியவில்லை. அப்படியே அவர் தலையிட்டாலும் அந்தத் தலையீட்டை மீண்டும் ஒரு முறை ஒப்புக்கொள்ள காங்கிரஸ் உறுப்பினர்கள் சம்மதிப்பார்களா என்பதும் தெரியவில்லை.

எது எப்படி இருந்தாலும், வேண்டி வரவழைத்தவர்களே, வேண்டாம்—விலகிச் செல்லுங்கள் என்று வெளிப்படையாகத் தெரிவிக்கிறபோது, ஆச்சாரியாரைப் போன்ற ஒரு மாபெரும் தலைவர் தாமாகவே விலகிக் கொள்வதுதான் அவருடைய கௌரவத்திற்கு ஏற்றது.

இப்போது இங்கு உள்ள சூழ்நிலையில் ஆச்சாரியார் தன் பதவியை ராஜிநாமா செய்வதுதான் நல்லது என்று சென்னை கவர்னர் பிரகாசா காங்கிரஸ் தலைவர் நேருவுக்கு இரகசியக் கடிதம் ஒன்று அனுப்பி இருக்கிறார் என்று பத்திரிகைகள் தெரிவிக்கின்றன.

அப்படி அனுப்பி இருப்பது உண்மையாக இருந்தால் அந்த

ஆலோசனை மிகவும் சிறந்த ஆலோசனை என்றே நாம் கருதுகிறோம்.

ஆச்சாரியாரைப் போன்ற முதுபெரும் தலைவர்கள் அறிவும் ஆற்றலும் படைத்த இளைஞர்களிடம் பொறுப்பை ஒப்படைத்துவிட்டு வெளியே இருந்தபடி ஆலோசனை கூறிக்கொண்டிருப்பதுதான் முறையும் பொருத்தமும். ஆகுமே தவிர, பலத்த எதிர்ப்புக்கிடையே பதவியில் தொடர்ந்திருக்க முயல்வது அத்துணைச் சிறந்த செயல் ஆகாது!

## ஐந்தாண்டுத் திட்டமும் கல்வித் துறையும்

"ஆகா! இது அல்லவா திட்டம்! ஒரு திட்டமென்றால் இப்படி அல்லவா இருக்கவேண்டும்?" என்று அமைச்சர்கள் பலரும் அடிக்கடி பாராட்டுகிறார்கள் இந்திய ஆட்சியாளரின் ஐந்தாண்டுத் திட்டத்தை.

வேறு பல துறைகளைப் பொறுத்த அளவில் திட்டம் சிறந்ததோ அல்லவோ நமக்குத் தெரியாது. ஆனால், கல்வித் துறையைப் பொறுத்த அளவில் திட்டம் மாபெரும் ஏமாற்றத்தையே நமக்குத் தருவதாக அமைந்திருக்கிறது.

1951 முதல் 1956 வரை உள்ள ஐந்து ஆண்டுக் காலத்தில் இந்தியத் துணைக் கண்டத்தின் முன்னேற்றத்திற்காக வென்று 2200 கோடி ரூபாய் என்னும் அளவுள்ள ஒரு பெருந்தொகையைச் செலவழிப்பது என்பது ஐந்தாண்டுத் திட்டத்தின் ஏற்பாடு.

இவ்வளவு பெருந் தொகையைத் தன் பண எல்லையாகக் கொண்டிருக்கிற ஒரு மாபெரும் திட்டத்தில் கல்வித்துறைக்காக வென்று ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை கேவலம் நூற்றி ஐம்பது கோடி ரூபாய்தான். இந்த 150 கோடியிலும், தொழிற் கல்வி, கல்லூரிக் கல்வி, முதியவர் கல்வி, ஆதாரக்கல்வி என்று உள்ள பலவகைத் துறைகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகைகளைத் தள்ளிவிட்டுப் பார்த்தால், ஆரம்பக் கல்விக்காக என்று இருக்கிற தொகை மிகமிகக் குறைவாகவே இருக்கும்.

இந்தப் பரந்து விரிந்த மாபெரும் துணைக்கண்டத்தில் படிப்பறிவு உள்ளவர்களின் தொகை நூற்றுக்குப் பதினைந்துதான். மிச்சமுள்ள எண்பத்தைந்து சத விகிதத்தினரும் எழுத்தறிவு அற்றவர்களே. இவர்கள் அனைவருக்கும், இந்திய அரசியல் திட்டம் அறிவித்துள்ளபடி, 1960-ம் ஆண்டுக்குள் கல்வி அறிவை அளிக்க வேண்டுமானால் அதற்கு ஏராளமான தொகை தேவைப்படும் என்பது வெள்ளிடை மலை. ஆனால் ஐந்தாண்டுத் திட்டத்தில் ஆரம்பக் கல்விக்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகையோ மிகவும் சிறியது. இந்த நிலையில் நாட்டில் எழுத்தறிவு

(16-ம் பக்கம் பார்க்க)

# செய்திக் கதிர்

சென்னை சட்டசபையில் முற்போக்கு சுயேச்சைக் கட்சி என்கிற பெயரால் இதுவரை இயங்கி வந்த எம். எல். ஏக்கள், இந்த மாதத்தில், தங்கள் கட்சி பெயரை **திராவிட சட்டசபைக் கட்சி** என்று மாற்றி அமைத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்தக் கட்சியின் தலைவராக தோழர் சுயம்பிரகாசம் எம். எல். ஏ. தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார். திராவிட, திராவிட முன்னேற்றக் கழகங்களுடன் இந்தக் கட்சிக்கு நேரடித் தொடர்பு இல்லை என்ற போதிலும், திராவிட இயக்கக் கொள்கைகளை அடிப்படையாக வைத்தே இந்தக் கட்சி இயங்கும் என்று தெரிய வருகிறது.

* * *

இந்தியாவில் உள்ள பல்வேறு மாகாணங்களின் அமைப்பு, பிரிட்டிஷ் ஆட்சிக்காரர்களின் வசதிக்கு ஏற்ற முறையில் உருவாக்கப்பட்ட ஏற்பாடே தவிர இந்திய மக்களின் வாழ்க்கையை வளமுள்ளதாக மாற்றி அமைப்பதற்கு ஏற்ற வகையில் அமைக்கப்பட்டது அல்ல என்பது அனைவரும் அறிந்த செய்தி. அந்த மாகாணங்கள் அனைத்தையும் மொழியின் அடிப்படையில் மாற்றி அமைத்தால்தான் அந்தந்த மாகாணங்களின் மொழியும் வாழும் மக்களும் சிறப்படைவர்; மாகாணங்களும் நன்னிலை எய்தும் என்பது பேரறிஞர்கள் அனைவரும் ஒப்பமுடிந்த உண்மை. இந்தப் பிரச்சினையைப் பற்றி அலசி ஆராய்ந்து ஒரு முடிவு கூறுவதற்காக, இந்திய ஆட்சியாளர்களால், டிசம்பர் 22–ம் நாளன்று, ஓர் நிபுணர் குழு அமைக்கப்படிருக்கிறது. இந்தக் குழுவின் தலைவராக ஒரிசாவின் இன்றைய கவர்னர் சையத் பஸல் அலி நியமிக்கப் பட்டிருக்கிறார். மத்திய மேல் சபையின் உறுப்பினர் பண்டிட் குன்ஸ்ருவும், எகிப்து நாட்டில் இந்தியத் தூதுவராக உள்ள சர்தார் பணிக்கரும் குழுவின் ஏனைய இரு உறுப்பினர்கள். இந்தக் குழு, தன்னுடைய ஆலோசனைகளையும், முடிவுகளையும் 1955–ம் ஆண்டு ஜூன் திங்கள் முடிவிற்குள் அறிவித்து விடவேண்டும் என்று பண்டித நேரு அறிவித்திருக்கிறார்.

* * *

டிசம்பர் 20–ம் நாளன்று, சென்னை ஐகோர்ட் கடற்கரையில், தமிழ் முஸ்லிம் சங்கத்தாரால் கொண்டாடப்பட்ட முகமது நபி பிறந்த நாள் விழாவில், திராவிடக் கழகத் தலைவர் பெரியார் ஈ. வெ. ராவும், காங்கிரஸ் முதலமைச்சர் ஆச்சாரியாரும் ஒரே மேடையில் தோன்றி சொற்பொழிவாற்றினர். 25 ஆண்டுகளுக்கு முன்னால் இருவரும் காங்கிரஸ் கட்சியில் இருந்த காலத்தில்தான் இப்படிப் பேசுவது வழக்கம்.

இவ்வளவு காலத்துக்குப் பிறகு இப்போதுதான் முதல் முறையாக இந்த இரு தலைவர்களும் ஒரே மேடையில் தோன்றுகின்றனர்.

* * *

"ஆச்சாரியாரால் கொண்டு வரப்பட்டுள்ள கல்வித் திட்டம் மாணவர்களின் எதிர்கால வாழ்க்கையையே பாழாக்கிவிடும். இப்படிப்பட்ட அரை குறைப் படிப்பை வைத்து மாணவர்கள் முன்னுக்கு வரமுடியாது. மேல் நாட்டு அறிஞர்களுடனும் நம் நாட்டுக் கல்வி நிபுணர்களுடனும் கலந்து ஆலோசித்து ஒரு நல்ல திட்டத்தை வகுத்து நடைமுறைக்குக் கொண்டுவரவேண்டும் அரசாங்கம்" என்று விழுப்புரத்தில் பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் ஐம்பதுக்கு மேற்பட்ட நூல்கள் தீட்டியிருப்பவரும், சிறந்த எழுத்தாளருமாகிய சுத்தானந்த பாரதியார் தெரிவித்திருக்கிறார்.

* * *

சோவியத் ரஷ்யாவில், "நிலமூழ்கி" என்று கூறத்தக்க புதியதோர் போர்க்கருவி கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறதாம். கடலுக்குள் மூழ்கிச் சென்று திடீரென்று நீர் மட்டத்தில் தோன்றி எதிரியின் கப்பல்களைத் தாக்கும் நீர்மூழ்கிக் கப்பல்களைப் போன்றே, இந்த "நிலமூழ்கிகள்," பூமிக்கடியிலேயே குடைந்து சென்று, எதிர்பாரா வகையில் தரைக்கு மேல் கிளம்பித் தாக்கிப் போரிடும் பணியைப் புரியுமாம்.

* * *

"புதிய கல்வித் திட்டத்தைத் தூக்கி எறியவேண்டும். அதற்கு மக்களின் ஆதரவு துளியும் இல்லை. இந்தத் திட்டத்தைத் தேர்தல் பிரச்சனையாக வைத்து தேர்தல் நடத்திப் பார்க்கலாமென்று நான் மந்திரிசபைக்கு அறை கூவல் விடுக்கிறேன். தேர்தலில், புதிய கல்வித் திட்டத்தை ஆதரித்து நிற்பவர்கள் யாராய் இருந்தாலும், அது முதலமைச்சர் ஆச்சாரியாராய் இருந்தாலும் சரி, அல்லது வேறு எந்த அமைச்சராக இருந்தாலும் சரியே, அவர்கள், தங்களுடைய

(62-ம் பக்கம் பார்க்க.)

---

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

விரைந்து பரவ வேண்டுமானால் அது எப்படி முடியும்?

"பத்தாண்டுக் காலத்திற்குள் அனைவருக்கும் ஆரம்பக்கல்வி" என்று இந்திய அரசியல் சட்டம் எக்காள மிடுகிறதே, அதுதான் எப்படி நிறைவேறும்? ஆரம்பக் கல்வி விரைந்து பரவவேண்டுமானால் ஐந்தாண்டுத் திட்டத்தில் அந்தத் துறைக்காக வென்று அதிகத் தொகை ஒதுக்கப்பட்டாக வேண்டும். அதற்கு ஏற்ற முறையில் திட்டம் திருத்தி அமைக்கப்படவேண்டும். விதை போடாமல் சுரை முளைக்காது. பணம் செலவழிக்காமல் ஆரம்பக் கல்வியும் பரவாது.

# ராஜாஜியின் ஆரம்பக் கல்வித் திட்டம்

## பருளேகர் கமிட்டியின் சிபாரிசுகள்

### முக்கியமான 3 அம்சங்கள்

இத் திட்டத்திலுள்ள ஒவ்வொரு அம்சத்தைப் பற்றியும் பரிசீலனை செய்ய நாங்கள் விரும்பவில்லை. ஆனால் இத்திட்டத்தின் முக்கியாம்சங்களைப் பற்றி மட்டுமே ஆராய்ந்து அபிப்பிராயம் தெரிவிக்கிறோம். (1) 3 மணி நேரம் பள்ளிக்கூடம், (2) அதிகப்படியாக மாணவர்கள் சேர்த்தல், (3) பள்ளிக்கூட நேரம் போக பாக்கி வேளைகளில் குழந்தைகளின் வேலைத் திட்டம் ஆகிய மூன்று அம்சங்கள் பற்றி மட்டுமே நாங்கள் கவனித்திருக்கிறோம்.

இவற்றையும் எங்களுடைய சிபார்சுகளையும் சேர்த்துப் பார்க்கையில் இப்புதிய திட்டம் கல்வி விஷயத்தில் சிறப்பாயிருப்பதாகவே கருதுகிறோம். அரசியலில் குறிப்பிட்ட ஆக்ஞையை நிறைவேற்றுவதற்கும் இது அனுபவ பூர்வமான பரிகாரமாயிருக்குமென்பது எங்கள் கருத்து.

புதிய கல்வித் திட்டப்படி பாடசாலைகளின் வேலை நேரம் 3 மணியாகக் குறைக்கப்பட்டாலும் முன்னால் இருந்த மாதிரியே போதனை வேலைகள் நடைபெற்று வரும் என்று கூறப்பட்டிருக்கிறது. பழைய திட்டத்தில் 2 மணி நேரம் தேகாப்பியாசம் கைத் தொழில் வேலை முதலியவற்றிற்காக ஒதுக்கப்பட்டிருந்தது. இப்போது இவ்வேலை பள்ளிக்கூடத்துக்கு வெளியே நடைபெறுவதற்கு வகை செய்யப்பட்டிருக்கிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது நியாயம் என்பதைச்சர்க்கார்கொடுத்திருக்கும் பாடசாலை நேர அட்டவணையிலிருந்து உணரலாம்.

### மாணவருக்குச் சிரமமிராது

பாடசாலையின் வேலை நேரம் குறுக்கப்பட்டதால் மாணவர்களுக்கு அதிக சிரமம் ஏற்படும் என்று இப்புதிய திட்டத்தைப் பற்றிக் குறை கூறப்பட்டிருக்கிறது. பாடசாலைகளில் பெரும்பாலும் பாடங்களே போதிக்கப்படுமாதலின் இதனால் மாணவர்களுக்குச் சிரமமேதுமிராதென்பது எங்கள் கருத்து.

ஆசிரியர்களுக்கும் இத்திட்டத்தால் சிரமமேற்படும் என்று கூறப்பட்டிருக்கிறது. முழுக் கவனத்தோடு பாட போதனை செய்தல், ஒரே பாடத்தை இரு முறை சொல்லிக் கொடுக்க வேண்டியிருப்பது இவை இரண்டும் பழக்கத்தைப் பொறுத்த விஷயங்கள். இதனால் ஏதாவது சிரமம் இருக்குமாயின் அது பழகப் பழக சரிப்பட்டுவிடும். ஆனால் வாரம் $8\frac{1}{2}$ மணி நேரம் அதிகமாகப் போதிக்கும்படி நேருகிறதே யென்று கூறும் விஷயத்தை நாம் கவனிக்கவேண்டும்.

இந்த ராஜ்யத்தில் ஏற்பட்ட கல்வி முறையின் ஆதி வரலாறுகளைப்பற்றிக் கமிட்டி ஆராய்ந்து அபிப்பிராயம் வெளியிட்டிருக்கிறது. உலகமெங்கும் புத்தகப் படிப்பிலேயே மட்டும் கவனத்தை ஈடுபடுத்தாமல் செயலாற்றும் முறைகளிலும் கவனம் செலுத்த வேண்டும் என்ற போக்கு ஏற்பட்டிருப்பதால் நம் நாட்டிலும் குழந்தைகள் நாள் முழுதும் புத்தகங்களைப் படிப்பதோடு நின்றுவிடாமல் பார்த்துக் கொள்வதவசியம் என்று கமிட்டி வற்புறுத்தியிருக்கிறது. பாட போதனைக்கு நாள் பூராவும் வேண்டுவது அவசியமில்லை என்பதற்கான காரணங்களையும் கமிட்டி எடுத்துக் காட்டியிருக்கிறது. மைசூர், ரஷ்யா இவ்விடங்களில் உள்ள குறுகிய நேர பாடசாலைகளின் நிலவரத்தையும் கமிட்டி குறிப்பிட்டிருக்கிறது.

பள்ளிக்கூட நேரத்தைக் குறைப்பதால் குழந்தைகளின் ஆரோக்கியத்துக்கு அனுகூல மேற்படும் என்றே நாங்களும் கருதுகிறோம். நமது பாடசாலைகள் பெரும்பாலும் வசதிகளற்றிருக்கின்றன.

பாடசாலை நேரத்தை 3 மணியாகச் செய்வதால் இரண்டுவேளைகளில் பள்ளிக்கூடங்கள் நடக்க முடியும். கல்வியும் வியாபக முற வசதி பிறக்கும். இதனால் கல்வி பெறும் மாணவர்களின் தொகையும் அதிகரிக்கும்.

## முக்கிய நோக்கம்

தற்போதிருக்கும் பாடசாலைகளில் தற்சமயமுள்ள ஆசிரியர்களைக் கொண்டே அதிகப்படியான குழந்தைகளுக்குச் சுமார் இருமடங்கு கல்வி போதிக்க வேண்டும் என்பது புதிய கல்வித் திட்டத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்று. ஒவ்வொரு ஆசிரியையும் காலையில் ஒரு கோஷ்டி மாணவர்களுக்கும், மாலையில் ஒரு கோஷ்டி மாணவர்களுக்கும் கல்வி புகட்டும்படி செய்வதன் மூலம் இந்த நோக்கத்தை நிறைவேற்ற வேண்டுமென்பது உத்தேசம். இப்புதிய திட்டப்படி இரு வேளைகளிலும் போதனை செய்யும் ஆசிரியர்களிடம் சராசரி 60 மாணவர்களுக்கு மேல் படிப்பார்கள்.

இப்புதிய திட்டம் 'ஷிப்டு முறையை விட மேம்பட்டதாகும். பள்ளிக்கூடம் போன நேரம் போக பாக்கிப் பாதி நாளில் மாணவர்கள் செய்ய வேண்டிய வேலையை வகுத்திருக்கிறது இப்புது திட்டம். இதர இடங்களில் அனுஷ்டிக்கப்படும் 'ஷிப்டு' முறைக்கும் இத்திட்டத்துக்கும் உள்ள வித்தியாசம் இது. இதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

தற்போதுள்ள செல்வ நிலைமையில் ஆரம்பப் பாடசாலைகளையெல்லாம் உடனே ஆதாரக் கல்வி நிலையங்களாக மாற்றுவது அசாத்தியமென்று சென்னை சர்க்கார் உணர்ந்திருப்பதாகக் காண்

கிறது. சாதாரணக் கல்வியை விட ஆதாரக் கல்விக்கு ஆரம்பச் செலவு அதிகமாகும்.

## ஆதாரக் கல்விக்கு அடிகோலும்

சமுதாயத்தின் வாழ்க்கை, நடவடிக்கைகள் இவற்றுடன் பாடசாலைக் குழந்தைகளுக்கு நெருங்கிய சம்பந்தமிருக்க வேண்டுமென்று புதிய திட்டத்தில் வற்புறுத்தப்பட்டிருக்கிறது. ஆதாரக் கல்வியிலுள்ளதைப் போன்றதே இதுவும். எனவே சென்னை சர்க்கார் மேற்கொண்ட தங்களுடைய ஆதாரக் கல்வித் திட்ட நோக்கம் புறக்கணிக்கப்படவில்லையென்பது புலனாகும். புதிய கல்வித் திட்டம் அமுலுக்கு வந்த பிறகு, சமீபத்தில் ஆதாரப் பள்ளிக்கூடங்களை மேற்கொண்டு விஸ்தரிப்பது அபிவிருத்தி செய்யுமாறு உத்திரவுகளைப் பிறப்பித்திருக்கிறார்கள். இந்த ஆதாரக் கல்வித் திட்டத்தைச் சென்னை சர்க்கார் நீண்ட கால வேலைத் திட்டமாக கருதியிருக்கின்றனர், ஆள், பொருள், பலம் மிகுந்து சாதாரண ஆரம்பப் பாடசாலைகளாகவுள்ளவற்றைப் பரிபூர்ணமான ஆதாரக் கல்விப் பள்ளிகளாக மாற்றுவதற்கான காலம் வரக்கூடும். தற்போதைய திட்டம் ஆதாரக் கல்வி அபிவிருத்திக்கு வகை செய்வதாகும். எனவே சென்னை சர்க்காரின் முயற்சி சரியான மார்க்கத்தில் செல்வதாகும். அரசியல் திட்டத்தில் கண்ட ஆக்ஞையை நிறைவேற்றுவதற்கும் இது வழி காட்டியாயிருக்கிறது என்று நாங்கள் திடமாகக் கருதுகிறோம்.

'ஷிப்டு' முறை திருவாங்கூர் ராஜ்யத்தில் சில ஆண்டுகளாக அனுஷ்டானத்திலிருந்து வருகிறதென்று குறிப்பிட்டு அந்த ராஜ்யத்திலுள்ள ஆரம்பக் கல்வி புள்ளி விவரங்களையும் கமிட்டியார் தெரிவித்திருக்கின்றனர். பம்பாய் ராஜ்யத்தில் 'ஷிப்டு' முறை பின்பற்றப்படுவது பற்றிய தகவல்களையும் கமிட்டியார் தெரிவித்துள்ளனர்.

பிலிப்பைன்ஸில் 1951-ம் ஆண்டில் ஆரம்பக் கல்வி முறையைத் திருத்தியமைக்க உத்தரவிடப்பட்டதாயும் இதன்பயனாகத் தினம் ஒன்றுக்கு இரு வேளைகள் வகுப்புகள் நடைபெறும் வழக்கம் அமுலுக்கு வந்ததென்றும், ஒவ்வொரு வேளையிலும் ஒரே ஆசிரியரிடம் 60 மாணவர்கள் பாடம் கற்க வசதி பிறந்ததாயும் கமிட்டியார் தெரிவித்திருக்கின்றனர். ரஷ்யா, டென்மார்க், நார்வே முதலியவிடங்களில் இத்துறையில், செய்யப்பட்ட முயற்சிகளையும் கமிட்டியார் எடுத்துரைத்திருக்கின்றனர்.

## அதிக மாணவர்களுள்ள வகுப்புகள்

அவசியத்தை முன்னிட்டு ஒவ்வொரு ஆசிரியரும் 60-ம் அதற்கும் அதிகமாயுள்ள மாணவர்களைக் கொண்ட வகுப்புகளை நடத்தும்படி செய்தால் அது இந்தியாவில் பிரபலமடையுமென்று சொல்வதற்கில்லை. இங்

தியாவில் சிறிய வகுப்புகளை வைத்து நடத்துவதே லட்சியமாகி அதுவே இந்தியர்கள் மனதில் நிரந்தரமாக ஊறிப் படிந்து விட்டது. எனவே 60 பேர்களுக்கதிகமாக மாணவர்களைக் கொண்ட வகுப்புகளை நடத்த வேண்டுமென்று சொன்னால் அது எதிர்ப்புக்குள்ளாகும். மேலும் பெரிய அளவில் வகுப்புகளை நடத்துவதற்கு வேண்டிய அறைகளும் கிடைக்காது.

நமக்குள்ள வசதிகளுக்கேற்ப தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்கான திட்டங்களை வகுக்கவேண்டும். அரசியல் சட்டத்தில் தெரிவித்தபடி நாம் இலவச ஆரம்பக் கல்வியில் கணிசமான முன்னேற்றம் காண வேண்டுமானால் 30 அல்லது 40 மாணவர்களுள்ள வகுப்புகள் ஒவ்வொன்றையும் ஒரே ஆசிரியரைக் கொண்டு ஷிப்டு முறையில் நடத்துவது ஒன்றே வழி. ஒவ்வொரு ஆசிரியரிடமும் படிக்கும் மாணவர்களின் தொகையையும் இரட்டிப்பாக்க வேண்டினால் தைரியத்துடன் நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு தளராத வேகத்துடன் வேலை செய்தாகவேண்டும். பிலிப்பைன் இதற்குச் சிறந்த உதாரணமாகும். சென்னை சர்க்காரின் இந்தப் புதிய திட்டம் அதற்கான வழியை வகுப்பதாக அமைந்திருக்கிறது. ஆசிரியர் மாணவர் விகிதாசாரம் எவ்வளவு துரிதமாக அதிகரிக்கிறது என்பது பொறுத்துப் பார்க்கவேண்டிய விஷயம்.

இவற்றையெல்லாம் மனதில் கொண்டு பார்க்கையில் சென்னை சர்க்காரின் கொள்கை சரியானதென்றே நாங்கள் கருதுகிறோம். இது வெற்றியடைந்தால் அரசியல் சட்டத்தில் குறிப்பிட்ட ஆக்ஞையை நிறைவேற்றுவது ராஜ்ய சர்க்காருக்குச் சாத்தியமாகும்.

## பின்பற்றத் தகுந்த திட்டம்

சென்னை சர்க்காருடைய இப் புதிய திட்டம் பிறருக்கு வழி காட்ட வல்லதாகும் என்பது எங்கள் அபிப்பிராயம். இந்திய அரசியல் சட்டத்தின் கருத்தை நிறைவேற்ற விரும்புபவர்கள் இதையே அனுஷ்டித்தாகவேண்டும். மாணவர்கள் தொகையை இரட்டிப்பாக்குவதே இதன் முக்கிய நோக்கமாயினும் வேறு நோக்கங்களும் இதற்கு உண்டு. பள்ளிக்கூட நேரம் நீங்கலாகப் பாக்கிப்பொழுதைக்குழந்தைகள் எவ்வாறு செலவிடவேண்டும் என்பதிலும் இத்திட்டம் முக்கிய கவனம் செலுத்துகிறது. இந்தத் திட்டம் புதுமையானது. புத்தகப் படிப்புடனன்றி, சமுதாய வாழ்வில் ஈடுபட்டுச் சேவை செய்யவேண்டும் என்ற அவாவையும் இத்திட்டம் உண்டு பண்ணுகிறது.

இதற்கு முன்னால் 'ஷிப்டு' முறை வெற்றி பெறவில்லை என்றும் ஆகவே அது இப்போது வெற்றி பெறுமென்றும் புதிய திட்டத்தைப் பற்றிச் சிலர் குறை கூறினர். இதுவிஷயத்தில் முந்திய அனுபவத்தை நாம் ஒரு

வழி காட்டியாகக் கருதக்கூடா தென்பது எங்கள் கருத்து. முன்னர் 'ஷிப்டு' முறையைப் பின்பற்றுவதா இல்லையாவென்பது பாடசாலைகளின் இஷ்டத்திற்கு விடப்பட்டிருந்தது. இப்போது இப்புதிய திட்டத்தை எல்லாப் பாடசாலைகளுக்கும் விலக்கே இல்லாமல் கொண்டுவரும்பட்சத்தில் அது வெற்றி பெற இடமுண்டு என்றே நாங்கள் எண்ணுகிறோம்.

## மாணவர் தொகை பெருக வேண்டும்

1. கூடிய சீக்கிரத்தில் பள்ளிக் கூட வயதுள்ள (6–12) குழந்தைகளின் பதிவை அதிகரிப்பது திருந்திய திட்டத்தின் பிரதான நோக்கங்களில் ஒன்று. 1951–ல் பள்ளிக்கூடம் சென்ற அவ்வயதுத் தொகுதியைச் சார்ந்த குழந்தைகளின் தொகை 35.5 லட்சம்; ஆனால் ஜனத் தொகையில் அவ்வயதுத் தொகுதியைச் சார்ந்த குழந்தைகள் 15 சதவீதம், அதாவது 85 லட்சம் பேர் இருந்தனர். 1951–ல் 6–12 வயது தொகுதியைச் சேர்ந்த 100 குழந்தைகளில் 40 பேர்தான் பள்ளிக்கூடம் சென்றனர் என்றே இதிலிருந்து அர்த்தமாகிறது. இத்தொகையில் பிள்ளைகள் 50 சத வீதமும், பெண்கள் 30 சத வீதமுமே இருந்தனர். 1942 முதல் 1951 வரையில் பத்து வருஷங்களில் எலிமெண்டரி பள்ளிக்கூடங்களில் முதல் ஐந்து வகுப்புகளில் மொத்தப் பதிவுகளைக் கணக்கெடுத்துப் பார்த்தால், 8 லட்சமே அதிகரித்துள்ளது. இது ஒரு வருஷத்திற்குச் சராசரி 80,000 என்றே ஆகிறது. முதல் வகுப்பை மட்டும் எடுத்துக்கொண்டால் சராசரி வருஷ அதிகரிப்பு 16,000 தான்.

2. குழந்தைகளின் பதிவில் வருஷ அதிகரிப்பு இவ்வளவு குறைவாக இருப்பதற்குக் காரணம் என்னவாயிருந்தாலும், நிலைமையை உடனே அபிவிருத்தி செய்ய வேண்டும். பள்ளிக் கூடம் செல்லாக் குழந்தைகளைப் பள்ளிக்கூடம் சேர்ப்பதில் ஆண்டுதோறும் அபிவிருத்தி ஏற்படும் பொருட்டு அரசாங்கம் பெரு முயற்சி செய்ய வேண்டும். அரசாங்கம் இப்பிரச்னையில் எதார்த்த நிலையை உணர்ந்து விழிப்படைய வேண்டும்.

3. சென்னை ராஜ்யத்தில் 6 முதல் 10 வரை வயதுடைய குழந்தைகள் ஒரு வருஷத்தில் 53 லட்சம் ஏறக்குறைய இருப்பதாகத் தெரிகிறது. இதில் 26 லட்சம் பேர் பள்ளிக்கூடத்திலும் 27 லட்சம் பேர் வெளியிலும் உள்ளனர். குழந்தைகளைப் பள்ளிக்கூடங்களில் பதிவு செய்ய மும்முரமான முயற்சிகள் எடுத்துக்கொண்டால் 1953 முதல் 1956 வரை நான்கு வருஷங்களில் 6 முதல் 10 வரை வயதுடைய 25 லட்சம் குழந்தைகளைப் பதிவு செய்து விட முடியும். இந்நான்கு வருஷங்களில் பதிவு செய்வதற்கான

கீழ்க்கண்ட திட்டமொன்றை ஆலோசனையாகக் கூறுகிறோம்.

(1) 1953 ஜூனில் பதிவிலுள்ள குழந்தைகள் தொகை 41 லட்சம்; (2) 1954 ஜூன் வரை பதிவாக வேண்டிய குழந்தைகள் 5 லட்சம்; (3) 1954 ஜூலை பதிவிலுள்ள குழந்தைகள் 46 லட்சம்; (4) 1955 ஜூன் வரை பதிவாக வேண்டிய குழந்தைகள் 8 லட்சம். (5) 1955 ஜூலையில் பதிவான குழந்தைகள் 54 லட்சம். (6) 1956 ஜூன் வரை பதிவாக வேண்டிய குழந்தைகள் 12 லட்சம். (7) 1956 ஜூலையில் பதிவான குழந்தைகள் 66 லட்சம். திட்டப்படி பள்ளியில் சேர்க்க வேண்டிய மேற்படியான 25 லட்சம் மாணவரில் பெரும்பாலோர் கிராமங்களைச் சேர்ந்தவராகவே இருப்பர். இப்போதுள்ள நிலையிலும் பட்டணங்களில் பதிவான குழந்தைகளின் தொகை கிராம மாந்திரங்களில் பதிவான வரைவிட மிக அதிகமாயிருக்கும். இதில் மேலும் அதிகரிப்பு எதிர்பார்க்கக் கூடியதல்ல. அடுத்த மூன்று ஆண்டுகளில் 23 லட்சம் அதிகப்படியான மாணவர்களை கிராமாந்திரப் பள்ளிகளில் சேர்த்து விடுவோமாயின் 1956 ஜூலை வாக்கில் பள்ளிக்கூட வயதுள்ள குழந்தைகளில் 80 சத வீதம் பேர்களைப் பள்ளிகளில் காண்போம்.

4. 25 லட்சம் கொண்ட இப்புதிய சேர்க்கையினர் அநேகமாக 6 வயது முதல் 9 வயது வரை உடையவராக இருப்பர். நாம் உத்தேசித்துள்ள இப்பதிவு முயற்சியில் 10 வயதுக்கு மேற்பட்டும் 12 வயதுக்குக் கீழ்ப்பட்டுமுள்ள குழந்தைகளைப் பள்ளிக்குக் கொண்டுவர வேண்டிய அவசியத்தை வலியுறுத்தவில்லை. இக்குழந்தைகள் ஓரிரண்டு வருஷங்களில் 12 வயதடைவர். அது கடைசி எலிமெண்டரி வயது எல்லைக்கு அப்பாற்பட்டதாகும். ஆயினும் 10–12 வயதுள்ள குழந்தைகளைப் பள்ளிக்கு வரச்செய்து ஒரு தனித் தொகுதியாக அவர்களுக்குப் பயிற்சியளித்தால், சிறு குழந்தைகளுக்கு 3, 4 வருஷங்களில் சொல்லிக் கொடுப்பதை இவர்களுக்கு ஓரிரண்டு வருஷங்களில் சொல்லிக் கொடுத்து விடலாம். வயதுடைய குழந்தைகளைக் கண்டுபிடித்து உபாத்தியாயர்கள் அவர்களைச் சேர்த்துத் தனியாகச் சொல்லித்தர வேண்டும். அவர்கள் விஷயத்தில் ஒரு உபாத்தியாயருக்கு இத்தனை மாணவர் என்ற இலாகாவின் விதியைத் தளர்த்தலாம். சொற்ப செலவில் அத்தகைய மாணவர்க்கும் சொல்லித் தந்து எழுத்தறிவில்லா முதியோர்கள் தொகையில் அமிழ்ந்து விடாமலிருக்கச் செய்யலாம். இந்த விசேஷப் பயிற்சி சாத்தியமாயின் இது தேசீய முக்கியத்துவம் கொண்ட ஒரு சோதனையாகும். பள்ளிக்கூடக் குழந்தைகளின் தொகையும் அதிகரிக்கும். ஜனத்

தொகையில் 10–12 வயதுள்ள குழந்தைகளின் தொகை 23 லட்சம். இதில் 10 லட்சம் பேரே பள்ளியில் வாசிக்கின்றனர். குழந்தைகளின் இத் தொகுதியிலுள்ளவர் பலவைப் பள்ளியில் சேர்க்கலாம். இப்பிரச்னையைச் சரியானபடி அணுகினுல் நல்ல பலன் கிட்டும்.

5. 10–11 வயதுகூட ஆகாமல் எழுத்தறிவு பெருமல் பள்ளியை விடுவோர் பலர் உள்ளனர். பெருந்தொகையான இம் மாணவரையும் சேர்க்கலாம். 1950–ல் சென்னைப் பள்ளிகளில் வருஷ முடிவில் 12·8 லட்சம் மாணவர் முதல் வகுப்பில் இருந்தனர். ஒரு வருஷத்திற்குப் பின் 1951–ல் இரண்டாவது வகுப்பில் 8.4 லட்சம் பேரே இருந்தனர். பாக்கி 4.4 லட்சம் பேர்களில் பெருந்தொகையினர் முதல் வகுப்புக்குப் பிறகு பள்ளியை அடியோடு விட்டனர். அரைகுறையாக எழுத்துக்கற்ற 9–10 வயதுக்குக் கீழ்ப்பட்ட இக்குழந்தைகளில் சிலரையேனும் பள்ளியில் சேர்த்தால் தொகை பெருகும்.

## பொருளாதார நிலையே தடை

6. குழந்தைகளைப் பள்ளியில் சேர்க்கும் முயற்சியில் ஈடுபடுவோரின் வேலை கடினமானது. சாமானியனின் உற்சாகம் குலேந்து விடும். எலிமெண்டரி கல்வியில் கட்டாய முறை ஏற்படுத்தப்பட்ட பிரதேசங்களில் கூட பள்ளிக்கூட வயதுடையவரில் 80 சத வீதம் பேர்களுக்கு அதிகமாகச் சேர்க்க முடியவில்லை. கிராமத்திலுள்ள பெற்ருேர் எழுத்தறிவற்றவர்; ஜீவனுேபாயத்தில் தமக்குதவியாகக் குழந்தையை வீட்டோடு வைத்துக்கொள்கிருர்கள். கட்டாயமுறை அமுலிலுள்ள பிரதேசங்களில் பதிவு அதிகமாவதற்குப் பெருந்தடைகள் இவையே. பாதி நாளே பள்ளியில் படிக்கச் செய்து மிகுதியான நேரத்தில் குடும்ப வேலையில் பெற்ருேருக்கு உதவியாக இருக்க விட்டுவிடுவதால் ஒரு தடை நீங்கும். வசதியிருந்தும் பள்ளிக்கூடம் போகாமல் சற்றேறக்குறைய 50 சத வீதம் பேர் இருந்து விடுவதற்குப் பொருளாதார நிலையே காரணமென விஷயத்தைக் கூர்ந்து நோக்கியிருப்பவர் கூறியுள்ளனர்.

7. மூன்று மணி நேரப் பள்ளிக்கூடத்தின் ஒரு பிரதான அனுகூலமென்னவெனில், குழந்தை தன் சௌகரியப்படி அதாவது பெற்ருேர்கள் குறைந்தது மூன்று மணி நேரமாவது பள்ளிக்கு அனுப்ப முடியுமான நிலையில் பள்ளி செல்ல முடிகிறது. காலை நேரத்திலா, மாலை நேரத்திலா என்பதைப் பெற்ருேருடனும் குழந்தையுடனும் ஆலோசிக்க வேண்டும். அவ்விதம் ஆலோசிக்காவிடில், பொருளாதார விஷயத்தில் நல்ல நிலையில் இல்லாத குழந்தைகளைப் பள்ளிக்கூடம் கொண்டு வரும் முயற்சி விரும்பிய பலனைத்

தாது. இவ்வளவு செய்தும், குழந்தைகளைப் பள்ளிக்கு மூன்று மணி நேரம் அனுப்ப முடியாதிருப்பின் இன்னும் குறைந்த நேரத்திற்காவது அனுப்பத் தகுந்த ஏற்பாடு செய்ய வேண்டும்.

8. பள்ளிக்கூடம் வராமலிருக்கும் 6–9 வயதுள்ள குழந்தைகளைப் பள்ளிக்கூடம் வருமாறு தூண்டுவதற்குத் தகுந்த ஏற்பாடுகள் செய்ய வேண்டும். கட்டாய முறையினால் செலவே அதிகமாகும். ஆகவே சட்டத்தின் மூலமாக அல்லாமல் மிருதுவாகச் சொல்லி மனத்தைத் திருப்புவதன் மூலமாகவே முயற்சி நடக்க வேண்டும். இவ்விதமாக முயன்றும் 3, 4 வருஷங்களில் 70 சத வீதமாவது பள்ளியில் பதிவாகாவிடின், ஏதேனுமொரு உருவில் கட்டாயம் செய்தாக வேண்டியதே.

## தொகை பெருக வழிகள்

9. குழந்தைகளை அதிகமாகப் பள்ளியில் கொண்டுவரப் பிரயோகிக்க வேண்டிய வழிகளைப்பற்றி எங்கள் யோசனை பொதுவாக வருமாறு:—

(1) பத்திரிகைகள், ரேடியோ, மேடைப் பிரசங்கம் ஆகிய யாவும், தலைவர்களும் இவ்விஷயத்தில் உற்சாக மூட்டி புத்தி சொல்ல வேண்டும்.

(2) இம்முயற்சியில் அரசாங்க இலாகாக்களும், அரசாங்கத் தொடர்புடைய இலாகாக்களும் திட்டமாகவும் மும்முரமாகவும் ஈடுபட வேண்டும். இதில் ரெவினியூ இலாகாவின் சேவையும் பயன்படும். எப்பதவியிலும் உள்ள அரசாங்க உத்தியோகஸ்தர்கள் கிராமவாசிகளுடன் நெருங்கிப் பழகுவது முக்கியமாகும். இவ்விஷயத்தில் தெளிவான உத்தரவுகள் வேண்டும். இவ்விஷயமாகச் செய்யப்படும் வேலைகள் பற்றிய அறிக்கைகள் அவ்வப்போது வெளிவர வேண்டும். அவை விமர்சனம் செய்யப்படவும் வேண்டும்.

(3) இம்முயற்சியில் உபாத்தியாயர்களே பிரதான ஏஜண்டுகள். கல்வி இலாகா இன்ஸ்பெக்டர்கள் சந்தர்ப்பம் ஏற்படும் போதெல்லாம் உபாத்தியாயர்களையும் பெற்றோர்களையும் சந்தித்து இம்முயற்சியில் ஊக்க வேண்டும். உயர்தரக் கல்வி அதிகாரிகள் இவ்வேலையில் விசேஷ கவனம் செலுத்த வேண்டும். கீழ்த்தர உத்தியோகஸ்தர்களுடனும் உபாத்தியாயர்களுடனும் ஆலோசனை நடத்தி வேலையைத் தீவிரப்படுத்தவும் பலன்களை அடிக்கடி மதிப்பிடவும் வேண்டும்.

(4) இம்முயற்சியில் பள்ளிக்கூடங்களில் வயதான பிள்ளைகள் பெண்களின் உதவியையும் பயன்படுத்த வேண்டும்.

(5) கிராமமக்கள் தம் குழந்தைகளைப் பள்ளிக்கூடம் அனுப்ப ஒரு விருப்பத்தை அவர்களிடம் எழுப்பினால் தான் முயற்சி முற்றும், வெற்றியடையும். ஏழைப்

பெற்றோர்கள் விஷயத்தில் பள்ளிக்கூடத் தேவைகளான புத்தகங்கள், பலகைகள் முதலியவற்றை இனாமாகத் தரலாம். அதனால் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்ப ஒரு தூண்டுதலேற்படும். கிராமத்திலுள்ள பிரதான குடிமக்கள் இவ்விஷயத்தில் அக்கறை கொண்டால் தான் தேவையான உத்சாகம் கிராமத்தாரிடை எழும். சரியானபடி அணுகினால், பல கிராமங்களில் இத்தகையவர் அகப்படுவர்.

10. எலிமெண்டரி பள்ளிக்கூடங்களுடன் தொடர்புடைய டெப்டி இன்ஸ்பெக்டர்களே இவ்விஷயத்தில் அதிகப் பொறுப்பு ஏற்க வேண்டியிருக்கிறது. ஒவ்வொரு டெப்டி இன்ஸ்பெக்டரும் சராசரி 60 எலிமெண்டரி பள்ளிக்கூடங்களைக் கவனிக்க வேண்டியிருக்கிறது. திருத்தப்பட்ட திட்டத்திலிருந்து பலனேற்பட வேண்டுமானால், அவர்கள் பார்வையில் விடப்பட்ட பள்ளிக்கூடங்களின் தொகையைக் குறைக்க வேண்டும். இதனால் டெப்டி இன்ஸ்பெக்டர்களின் தொகையை அதிகரிக்க வேண்டி வரலாம். கலாசாலைகளிலிருந்து வாலிபர்களுக்குத் தற்காலிக உத்தியோகம் அளித்து அவர்கள் சேவையை இத்தகைய வேலைகளில் பயன்படுத்தலாம்.

11. இத்தகைய தேசீய வேலையில் பயன் கருதாமல் பணியாற்ற முன்வருவோர் உத்தியோகஸ்தராயினும் சரி, உத்தியோகஸ்தர் அல்லாதாராயினும் சரி பலர் இருப்பர். இவர்களின் சேவையை அங்கீகரிப்பதற்கு அறிகுறியாக நற்சாட்சிப் பத்திரங்களோ அல்லது வேறு சின்னங்களோ அளிக்கும் விஷயத்தை ஆலோசிக்க வேண்டும்.

12. ஒரு விஷயம் தெளிவாயிருக்கிறது. காலைத்தாமதமின்றி அதிகம் பேர் பள்ளியில் சேர்வதற்கு அனுகூலமான ஒரு சூழ்நிலை ஏற்பட்டாலன்றி திருந்திய திட்டத்தின் நோக்கம் நிறைவேறாது. திட்டத்தை எதிர்ப்போரும் ஓரிரண்டு வருஷங்களில் பள்ளி செல்வோரின் தொகை பெருகினால் திட்டத்தை வரவேற்பர் என்று சாட்சியத்திலிருந்து தெரிகிறது. ஆகவே அரசாங்கம் உடனே தம் வசமுள்ள வசதிகள் யாவற்றையும் பயன்படுத்திப் பள்ளிக்கூடங்களில் அதிகம் பேர் பதிவாகும்படிச் செய்யவேண்டுமெனச் சிபார்சு செய்கிறோம்.

## கழிவும் தேக்கமும்

13. மக்களிடையே எலிமெண்டரி கல்வி விரைவில் பரவுவதற்கான வசதிகளை விஸ்தரிக்க வேண்டும் என்பதே கருத்து. பள்ளிக்கூடம் செல்வோரின் தொகையை அதிகரிப்பதனால் மட்டும் இக்கருத்து நிறைவேறாது. பலவருஷங்களாக நம் கல்வி முறையில் காண்பது என்னவெனில் முதல் வகுப்பில் சேர்ந்த மாணவரில் பலர் பள்ளிக் கூடத்தை அடியோடு விட்

டுப் போய் விடுகின்றனர். இரண்டாவது மூன்றாவது வகுப்புகளில் படிப்பவரும் ஓராண்டுக்குப்பின் அங்ஙனமே பள்ளியினின்று நின்றுவிடுகின்றனர். நிலையான எழுத்தறிவு ஏற்படுமுன் அகலமாக இங்ஙனம் விலகுவது நஷ்டமே. இந்தியா முழுதும் முதல் நான்கு வகுப்புக்களிலிருந்து இங்ஙனம் அக்காலத்தில் விலகுவோர் 50 சதம் வீதம் உள்ளனர். இத்தொகையினரில் சற்றேறக்குறைய 60 சதம் பேர் தம் பொருளாதார நிலை காரணமாகவே இங்ஙனம் செய்கின்றனர். அப்படியானால் மூன்று மணி நேரப் படிப்புத் திட்டம் இந்த நஷ்டத்தைப் பெருவாரியாகக் குறைக்கும்.

இந்த நஷ்ட சம்பந்தமான பிரச்னையை உடனே தீவிரமாக விஞ்ஞான முறையில் ஆராய வேண்டும். பிரச்னை இடத்துக்கு இடம் மாறு படலாம். சென்னை ராஜ்யக் கல்வி இலாகா இந்த மிக அவசரப் பிரச்னையை ஆராய்ந்து தீர்க்கத் தகுந்த வழி காண வேண்டும்.

14. ஒரு குழந்தையை ஒரே வகுப்பில் ஒரு வருஷத்திற்கு மேல் நீடிக்கச் செய்வதே தேக்கம். ஆரம்பப்பள்ளிகளில் இதுவும் ஒரு தீமை.

15. சென்னை ராஜ்யத்தில் எலிமெண்டரி பள்ளியில் 35 சத வீதம் குழந்தைகள் முதல் வகுப்பில் தேக்கப்படுகின்றனர் என்று தெரிகிறது. மற்ற ராஜ்யங்களில் காண்பதைவிடச் சென்னையில் நிலைமை எவ்வளவோ திருப்திகரமாக உள்ளது. எலிமெண்டரி பள்ளிகளில் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் சென்னையில் அதிகமாக இருப்பதே இதற்குக் காரணம்.

16. பிலிப்பைன் கல்விக் கமிஷன் அறிக்கையின்படி எலிமெண்டரி கிரேட் குழந்தைகளில் 33 சதம் பேர் இங்ஙனம் தேக்கப்படுகின்றனர். கமிஷன் இந்தக் கல்வி முறையைக் கண்டித்திருக்கிறது.

17. பிள்ளைகள் கல்வி பெறுமல் நின்று விடுவதைக் கல்வி இலாகா தடுக்க முடியாமல் இருக்கலாம். ஆனால் தேக்கத்தை அவசியம் ஆராய்ச்சி செய்து தடுக்க வேண்டும். சென்னை கல்வி இலாகா தேகப் பிரச்னையையும் பிள்ளைகள் பூர்த்தியாகப் படிக்காமல் நின்று விடும் பிரச்னையையும் தாமதமின்றித் தீர ஆராய வேண்டும். இத்தீமைகளை ஆராய்ந்து இவற்றைப் போக்கத் தகுந்த நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டால், திருந்திய திட்டத்தின் நோக்கம் பெரிதும் நிறைவேறும். பிள்ளைகள் முழுக்கல்வி பெறுமல் இருக்கையில் அதிகம் பேரைச் சேர்ப்பதால் மட்டும் பயனில்லை.

## இவற்றை நீக்க விசேஷ நடவடிக்கை

18. இலாகா விதிகளின்படிக் குழந்தைகள் பள்ளிகளில் பள்ளி வருஷ ஆரம்பத்திலும் நடுவி

லும் தான் சாதாரணமாகச் சேர்க்கப்படுகின்றனர். ஒரு விசேஷ நடவடிக்கையாக, உடனே காலம் பற்றி யாதொரு தடையுமில்லாமல் வருஷ முழுமையும் சேர்க்க வேண்டுமென யோசனை கூறுகிறோம். 1954 ஜூலைக்குள் அதிகப்படி 5 லட்சம் பேர் சேரும் வரையில் இங்ஙனம் செய்ய வேண்டும். தேக்கத்தைக் குறைக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். பள்ளி வருஷத்தின் பின்பாதியில் சேர்ந்தவர்களுக்கு விசேஷ வசதிகள் தந்து அவர்களும் குறித்த தேர்ச்சி பெற்று அடுத்த ஆண்டு உயர் வகுப்புக்குச் செல்ல வகை செய்ய வேண்டும். இதை உடனே செய்யாவிடின் திருந்திய திட்டம் வெற்றி பெறுவதற்கு இடையூறு ஏற்படும்.

19. தேக்க விஷயத்தில் சதவிகிதம் குறையாவிடில், கல்வி அதிகாரிகள் விசாரணை நடத்தித் தேவையானால் பாடத் திட்டத்தை மாற்றியமைக்க வேண்டும். பாடத் திட்டத்தினால் ஏற்படும் கஷ்டங்கள் காரணமாகப் பிள்ளைகள் பரீக்ஷையில் தேருமல் தேங்கி விடலாகாது, ஒரு வகுப்பில் ஒரே வருஷம் தான் படிக்க வேண்டும்.

20. இந்த இரண்டு பிரச்னைகளையும் ஆராய தனி ஏஜன்சி அமைக்கப் படவேண்டும். கல்வி பரிபாலனத்தில், பள்ளியிலிருந்து நின்று விடுவதனாலேற்படும் நஷ்டம், ஒரே வகுப்பில் தேக்கமும், எழுத்தறியாமையில் மீண்டும் மூழுகல். பள்ளிக்கூடம் வரா திருத்தல், ஒழுங்கில்லாமல் வருதல், ஒரே உபாத்தியாயருடைய பள்ளிகள், பாடத்திட்டம், உள்ளூர் தேவைக் கேற்ப அதை அமைத்தல், இவை எழும்பிரச்னைகள். விசேஷப் பயிற்சியுள்ளோரிடம் இவற்றின் ஆராய்ச்சி விடப்பட வேண்டும்.

21. கல்வி டைரெக்டர் ஆபீசுடன் இவ்வாராய்ச்சியாளரை இணைக்க வேண்டும் என்பதே எங்கள் சிபாரிசு. இவர்கள் புள்ளி விவரங்களையும் சேகரிப்பர்.

22. சர்வகலாசாலை ஆதரவில் கல்வியாராய்ச்சிக் கழகமொன்று அமைப்பது விரும்பத் தக்கது. அரசாங்கம் இதற்கென மான்யம் தரவேண்டும்.

## உபாத்தியாயர்கள் சம்பள உயர்வு

23. திருத்தப்பட்ட திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வருவதில் உபாத்தியாயர்களுக்குப் பெரும் பங்குண்டு. வெற்றி அவர்களைப் பொறுத்தே உள்ளது. திருத்தப்பட்ட திட்டம் சில விஷயங்களில் உபாத்தியாயர்களுக்கு சிரம மேற்படுத்துகிறது என்பதை மொத்தத்தில் ஒப்புக்கொள்ள வேண்டும். உபாத்தியாயர்களுக்கு இப்போதிருப்பதைவிட அதிகச் சம்பளம் கொடுக்கப்படும் தொகை அரசாங்கத்தின் சக்தியைப் பொறுத்துள்ளது.

24. உயர் தகுதியுடைய உபாத்தியாயர்கள் எலிமெண்டரி பள்ளிகளில் வேலை செய்வதனால் குறைந்த சம்பளம் பெறுவது கூடாது. உயர் தகுதிகள் உடைய வர்கள் எலிமெண்டரி பள்ளிகள் வேலை செய்ய உற்சாக மூட்ட வேண்டும்.

25. உபாத்தியாயர்களின் குழந்தைகளுக்கு அரசாங்கம் விசேஷ வசதிகள்' அளிப்பதற்காக நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். அவர்களுக்குக் கிடைக்கும் சௌகரியங்களில் அபி விருத்தி ஏற்பட வேண்டும். வீட்டு வசதிகள் சிபார்சு செய்கிறோம்.

26. வேலையில் ஊக்கமளிக்க உபாத்தியாயர் சம்பளங்கள் உடனே அதிகரிக்க வேண்டும் என்பதே எங்கள் திடமான அபிப்பிராயம். பண நிலை அனுமதிக்கும் அளவு கூடுமானதை உபாத்தியாயர்களுக்குச் செய்தாக வேண்டும்.

27. மாணவர் தொகை இரட்டிக்க இப்போது பிடிக்கும் செலவும் இரட்டிக்க வேண்டும் என்றால் அத்திட்டத்தால் பயனில்லை. ஒரு உபாத்தியாயருக்குரிய மாணவர் தொகை அதிகரிக்க வேண்டும்? இது தவிர்க்க முடியாத விஷயம்.

28. இப்போது ஸ்தல ஸ்தாபனங்கள் 35 மாணவர்க்கு ஒரு உபாத்தியாயர் வீதம் நியமிக்கிறது. இனி ஒரு உபாத்தியாயர் 60 மாணவருக்குப் பொறுப்பேற்க வேண்டும். ஆனால் ஒரே சமயத்தில் 30 மாணவர் வீதமே படிப்பர். இத்திட்டப்படி மிகுதியுள்ள உபாத்தியாயர்களை புதுப் பள்ளிகளுக்கு அனுப்ப வேண்டும்.

29. பள்ளிகள் குறைவாக உள்ள இடங்களில் பள்ளிகள் திறக்கப்பட வேண்டும். குழந்தைகளுக்கு அருகாமையில் பள்ளிகள் ஏற்பட வேண்டும். பள்ளிக்கூடங்கள் இல்லாத பிரதேசங்கள் குறைந்து வருகின்றன. மேலும் குறைய வேண்டும்.

30. ஜனத்தொகை குறைவாயுள்ள இடங்களில் ஒரு பள்ளிக்கு ஒரு உபாத்தியாயர் போதும்.

31. சர்க்கார் உதவி பெற்றுத் தனி நபர் நிர்வகிக்கும் பள்ளிகள் நம் ராஜ்யத்தில் முக்கிய இடம் பெறுகின்றன. தொகையில் இவை சரி பாதி. சர்க்காரின் மான்யத்தைக் கொண்டு உபாத்தியாயர் சம்பளங்களையும் நிலை நிறுத்த அலவன்சையும் நிர்வகிக்கலாம். அரசாங்கம் ஏற்றுள்ள பொறுப்பு பாராட்டற்குரியதே. ஆனால் பலனும் ஏற்றபடி இருக்க வேண்டும்.

32. 1953 ஜூனில் சர்க்கார் உதவி பெறும் பள்ளிகளில் வேலை செய்யும் உபாத்தியாயர்கள் வேலையினின்று அனுப்பப்படமாட்டார்கள். ஆனால் நிலைமை எப்போதுமே இப்படிக்கு இருக்காது. 1954 ஜூனுக்குள் ஒரு உபாத்தியாயருக்கு காலையில் 30

மாணவர், மாலையில் 30 மாணவர் என்றிருக்க வேண்டும். 1955 ஜூனின் அளவில் 40 மாணவரும், 1956 ஜூனின் அளவில் 50 மாண வரும் என விகிதம் இருக்க வேண்டும்.

33. மேலே சொன்ன சிபார்சுகள் ஒப்புக்கொள்ளப்பட்டால், அடுத்த சில வருஷங்களுக்கு வருஷந்தோறும் எவ்வளவு புதிய உபாத்தியாயர்கள் தேவையாயிருக்கும் என்பதை ஆராய வேண்டும்.

## பட்டணங்களில் திருத்தப்பட்ட திட்டம் விஸ்தரித்தல்

34. 1954 ஜூனில் திருத்தப்பட்ட திட்டத்தை அரசாங்கம் முனிசிபல் பிரதேசங்களிலும் விஸ்தரிக்குமெனத் தெரிகிறது. இந்த விஸ்தரிப்பு விரும்பத்தக்கது ஆனால் அப்பிரதேசங்களுக்குரிய விசேஷ பிரச்னைகளை ஆராயவேண்டும். பட்டணங்களில் ஏற்கனவே அதிகப் பேர் படிக்கின்றனர். பதிவுத்தொகை மேலும் அதிகரிக்காது. பட்டணங்களில் ஷிப்ட்முறை ஏற்படுத்தினால் பல உபாத்தியாயர்கள் மிகுதிப்படுவர். அவர்களுக்கு வேறு வேலை கொடுக்கலாம். பள்ளிக்கூடத் திட்டத்துக்குப் புறம்பான திட்டங்களுக்கும் இடம் கிடைக்கும்.

## பள்ளிக்கூடத்திற்குப் புறம்பான திட்டம்

1. திருத்தப்பட்ட திட்டத்தில் பள்ளிக்கூட நேரங்களுக்குப் புறம்பான குழந்தைகள் அலுவல்களுக்கு ஒரு வடிவம் தர முயற்சி செய்யப்படுகிறது. இது வெற்றிகரமாக நடந்தால், விளைவு பிரமாதமாக இருக்கும்.

2. பள்ளிக்கூடத்திற்குப் புறம்பான திட்டத்தின் நோக்கங்கள் சுருக்கமாக வருமாறு:—

(1) பள்ளி வகுப்பில் குழந்தைகள் பெறும் கல்வியின் ஓரம்சமே பள்ளிக்கூடத்திற்குப் புறம்பான திட்டம். இத்திட்டம் குழந்தையின் உடல், உணர்ச்சி, அறிவு, ஒழுக்க அபிவிருத்தி முற்றும் ஏற்பட உதவ வேண்டும்.

(2) வகுப்பில் கல்வி சம்பந்தமான விஷயங்களே சொல்லித்தரப்படும். பள்ளிக்கூடத்துக்குப் புறம்பான திட்டத்தில் உடல், உள்ள வளர்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

(3) குழந்தை சமூகத்தில் நடக்கும் பயனுள்ள உற்பத்தி வேலைகளுடன் தொடர்பு படுத்தப்படும்போதே இந்த ஏற்பாடு பயனளிக்கும்.

(4) குழந்தை கூர்ந்து நோக்கும் விவசாயம், காய்கறித் தோட்டப் பயிர், கைத்தொழில் சுகாதாரம், விளையாட்டு, கலைப் பண்பாடு இவை சம்பந்தமான அலுவல்களில் பங்கெடுத்துக் கொள்ளும்.

(5) ஒரு பக்கம் வளரும் குழந்தைக்கும் சமூகத்துக்கும், மற்றொரு பக்கம் பள்ளிக்கும் சமூகத்துக்கும் பூரண பரஸ்பரத் தொடர்பு ஏற்படும்.

3. திருத்தப்பட்ட திட்டத்தால் இந்நோக்கங்கள் எவ்வளவு தூரம் நிறைவேறக்கூடும் என்பதை ஆராய்வோம். நோக்கம் நல்லவை என்பதில் ஐயமில்லை. நிறைவேறின் பெருந் தொகையினரான குழந்தைகளுக்கு பூரணக் கல்வி கிடைக்கும். இந்நோக்கங்கள் நிறைவேற திருந்திய திட்டத்தில் உருப்படியான யோசனைகளும் வழிகளும் உண்டா என்பதே பிரச்னை.

4. திட்டத்தின் வழிகாட்டும் நூலில் பள்ளிக்கூட நேரத்துக்குப் புறம்பான திட்டம் குறிக்கப்படுகின்றது. பக்கங்கள் 8, 9, 10–ல் பாரா 13, 14, 15, 22, 23 காண்க.

5. முதலிரண்டு வகுப்புக் குழந்தைகளுக்கு விளையாடலும், நோக்குதலுமே வலியுறுத்தப்பட்டுள்ளன. உயர்வகுப்புக் குழந்தைகள் விஷயத்தில் நேரக் குறிப்புத் திட்டம் தாராளமாக இருக்கும். ஐந்து வருஷம் பூராவும் ஒரே தொழிலைக் கற்பதில் செலவழிக்கப்படத் தேவையில்லை தான். ஆனால், ஒரு தொழிலிலிருந்து மற்றொரு தொழிலுக்கு ஓடாமல், “எடுத்துக் கொள்ளும் ஒரு தொழிலில் முழுக் கவனம் செலுத்த வேண்டும் என்பதே எங்கள் கருத்து. சுகாதாரம் திட்டத்தில் ஒரு முக்கியமான விஷயம். வளரும் குழந்தை சுகாதார உணர்ச்சி பெறுவர்.

6. பெற்றோர்களில் சிலர் குறித்த ஒரு தொழிலில் ஈடுபட்டவராக இருப்பர். தம்முடன் குழந்தைகளை வைத்துக்கொள்ள அவர்கள் பிரியப்படுவர். அக்குழந்தைகளுக்கு விசேஷ ஏற்பாடுகள் தேவையில்லை. குழந்தைகளைத் தம்முடன் வைத்துக் கொள்ளப் பிரியப்படாதவர் சிலர் இருக்கலாம். தொழிலில் ஈடுபடாத பெற்றோர் இருக்கலாம். இவர்கள் குழந்தைகள் விஷயத்தில் எளிய, இனிய, உபயோகமான வேலையைக் கண்டுபிடிக்க வேண்டும். கிராமக் குழந்தைகளின் பெற்றோர்களில் பெரும்பாலோர் விவசாயிகள். மற்ற குழந்தைகள் காய் கறித் தோட்டப் பயிர், சுகாதாரம் பயிலலாம். குழந்தைகளை இங்ஙனம் ஈடுபடுத்த முடியும்.

## திட்டம் எளிதன்று; நிறைவேற சில யோசனைகள்

7. இன்றுள்ள நிலையில் கிராமாந்தரங்களில் மேலே குறித்த திட்டத்தையெல்லாம் அமுல் நடத்துவது எளிதன்று. பள்ளிக்கூடத்திற்குள் காணும் திட்டத்தைவிட பள்ளிக்கூடத்திற்கு வெளியே நடக்கவேண்டிய திட்டம் பல வகையானது. கிராமப் பள்ளிக்கூட ஆலோசனை சபைகள் இவற்றில் கவனம் செலுத்தலாம். ஆனால் இச்சபைகள் திருப்திகரமாக வேலைசெய்வதில்லை. பிரஜா உணர்ச்சி வலுப்படவில்லை. கிராமச் சிற்பிகள் எவ்வளவு தூரம் திட்டத்தில் ஒத்துழைப்பரோ தெரியாது. மக்கள் பெரும்பாலும் அசட்டை

யாயிருப்பர். தொழில் செய்வோர் வறுமையில் உழல்பவர். கல்வியற்றவர். ஆகவே, இந்த நிலையில் பள்ளிக்கூடத்திற்குப் புறம்பான திட்ட விஷயத்தில் தகுந்த ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

8. பள்ளிக்கூடப் பதிவை அதிகரிக்கச் சில யோசனைகள் கூறினோம். பள்ளிக்கூடத்துக்கு புறம்பான வேலைகள் விஷயத்திலும் இதே ஏற்பாடுகள் செய்ய வேண்டும். உத்தியோகஸ்தர் உத்தியோகஸ்தரல்லாதார் அனைவரும் பூரணமாக ஒத்துழைக்க வேண்டும். இவர்கள் அகப்படாத இடங்களில் ஏதாவதொரு ஏற்பாடு செய்ய வேண்டும். மேற்பார்வையிட, சிலர் வேண்டும். இவர்கள் குறித்த கிராமம் அல்லது கிராமங்களில் திட்டம் ஒழுங்காக நடத்த உதவ வேண்டும். இதுவும் முடியாவிடில், உபாத்தியாயர் மாற்றி மாற்றி இவ்வேலையில் ஈடுபடவேண்டும். அரசாங்கம் உடனே ஆவன செய்ய வேண்டும்.

9. போதுமான தொழிற் சிற்பிகளின் கூட்டுறவைப் பெறும் பிரச்னையையும் ஆலோசிக்க வேண்டும். குழந்தைகள் சிற்பிகளிடம் சென்று கற்பது நல்லதே.

10. பள்ளிக்கூடத்திலேயே பல தொழில்களைக் கற்பிக்க ஏற்பாடு செய்வது மிகவும் கஷ்டம். பணம் கண்டுபிடிப்பது சிரமம். இடம் வேண்டும். முஸ்திப்பு வேண்டும். தொழில் உபாத்தியாயர்களுக்குச் சம்பளம் தர வேண்டும். தொழில் செய்வோரிடம் குழந்தைகள் சென்றால் குழந்தைகள் பல விஷயம் கற்பர். தகுந்த உதவியோ, தூண்டுதலோ அளித்தால் தொழிற் சிற்பிகள் திட்டம் வெற்றிபெறத் தங்களால் ஆன முயற்சி செய்யலாம்.

11. வேறொரு கஷ்டம் உள்ளது. கிராமச் சிற்பிகள் விஞ்ஞானத் தொழில் முறை அறியாதவர். குழந்தைகளைச் சமாளிக்க அறியாதவர். குழந்தைகள் கேட்கும் பல கேள்விகளுக்கு அவர் பதில் சொல்ல முடியாமல் திகைக்கலாம். இவ்விஷயத்தில் அவர்களுக்குப் பயிற்சியளிக்க வேண்டும். ராஜாங்க அபிவிருத்தி இலாகா அவர்களுக்குக் குறுகிய காலப் பயிற்சி அளிக்கவேண்டும். தொழிற் சிற்பிகள் பள்ளிக்கூடங்களில் நடைபெறுவதையும் அறிய அழைக்கப்பட வேண்டும்.

12. தொழிற் சிற்பிகளுக்குப் பயிற்சியும், பண உதவியும் அளித்தால்தான் அவர்கள் கூட்டுறவு பயனுடையதாக விளங்கும். குழந்தைகள் தம் சூழ்நிலேயே உரியதொழில்களில் மெல்ல மெல்லப் பயிற்சி பெறுவர். கிராம உற்பத்தியில் உத்சாகம் பெறுவர்.

13. குழந்தைகள் பள்ளிக்கூடத்திற்கு வெளியே பெறும் பயிற்சியில் மரங்கள் நடும் வேலையையும் சேர்க்கலாம். பல

வகைச் செடிகள் மரங்கள், பயிர்கள், கிராமத்தில் இவற்றின் வளர்ச்சி நீர்ப்பாசன வசதி, முதலிய விஷயங்களைக் கற்கலாம்.

குழந்தைகள் ஜூனியர், சீனியர் என்று இரு தொகுதிகளாக வயதையொட்டிப் பிரித்து ஜூனியர்கள் கூட்டு விளையாட்டுகள், கிராமத்தைச் சுற்றி உல்லாசப் பிரயாணங்கள் ஆகியவற்றில் ஈடுபடச் செய்யலாம். சாரணர் பயிற்சியும் அளிக்கலாம். மாணவிகள் தாய்மார்களின் வீட்டு வேலைகளில் பயிற்சி பெறலாம். அப்பளாம், வடாம், முதலிய உணவுப் பண்டங்கள் செய்யக் கற்கலாம். மாதத்திற்கு இருமுறை எல்லாக் குழந்தைகளையும் கிராமத்திலுள்ள பண்ணைகள், தோட்டங்கள், பட்டணங்கள் ஆகியவற்றிற்கு அழைத்துச் செல்லலாம்.

14. குழந்தைகள் கலைப் பண்பாடுகளிலும் ஈடுபட வேண்டும். குழந்தைகள் நல்ல நடிகர். தம் திறமையைக் காட்ட அவர்களுக்கு வாய்ப்பு அளிக்க வேண்டும். சிறுவர் பெரியோருடன் கலந்து இன்பமளிக்கும் இக்கூத்துக்கள் விளையாட்டுக்களில் ஈடுபடலாம்.

பள்ளிக்கூடத்திற்குப் புறம்பான வேலைத் திட்டம் நல்ல திட்டம். சமூகம் அதில் தனக்குரிய பங்கு செலுத்த வேண்டும் சமூகம் இதில் ஈடுபட வாய்ப்பு அளிப்பது முக்கியம். (சு. மி.)


## "ஆரம்பக் கல்வி" ஆபீஸ்

**94–95, புதுத் தெரு, மண்ணடி. சென்னை–1.**

**மாதாந்திரக் கணக்கு அனுப்பும் பாரங்கள்**
(ஆங்கிலம்) **100 ரூ 2–8**
**ரிகார்ட் ஷீட்டுகள்** (ஆங்கிலம்) **100 ரூ. 2–0**
**பிராவிடண்ட் பண்டு கட்டும் பாரங்கள்**(ஆங்கிலம்)**100 ரூ. 2–0**
**பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும் விண்ணப்பத்தாள்கள்**
(ஆங்கிலம்) **100 ரூ. 1–0**
**வருடாந்திர பிராவிடண்ட் பண்டு (சரிபார்த்தனுப்பும் பாரங்கள்**
(ஆங்கிலம்) **100 ரூ. 2–0**

(தபால் செலவு உட்பட)

ஒவ்வொன்றிலும் 25 பாரங்களுக்குக் குறையாமல் முன்பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.

# கல்வித்திட்டத்தின் லக்ஷணம் பார்த்து நாடே சிரிக்கிறது

## 'மெயில்' நிருபர் இடித்துக் காட்டும் குறைகள்

ராஜாஜியின் புதிய கல்வித் திட்டம் எந்த லக்ஷணத்தில் அமுல் நடக்கிறது என்பதை 'மெயில்' நிருபர் சேலம் ஜில்லாவில் நேரில் பார்வையிட்டு எழுதியிருக்கிறார். பள்ளிக்கூடங்களில் வகுப்புகள் நடக்கும் போது நேரில் சென்று கவனித்திருக்கிறார். பள்ளி ஆசிரியர், இத்திட்டத்தால் என்றைக்கு தங்கள் வேலைக்கு சீட்டு வருமோ என்ற பீதியும் நடுக்கமும் கொண்டிருக்கிறார்கள் என்றும், வகுப்பு நேரம் போகத் தொழில் கற்றுக் கொள்ளுவது பற்றி யாரும் திருப்தி அடையவில்லை என்றும் கூறியிருக்கிறார்.

'மெயில்' நிருபர் கூறுவதைச் சுருக்கமாகக் கீழே தருகிறோம்:—

"புதுக் கல்வித் திட்டம் எப்படி வேலை செய்கிறது என்பதைக் கிராமங்களில் சென்று பார்த்தேன். பெற்றோர்களைச் சந்தித்துப் பேசினேன். பள்ளிகளை வகுப்பு நேரத்திலும், வகுப்பு இல்லாத நேரத்திலும் பார்த்தேன். மாணவர்களையும் சந்தித்தேன்.

"திட்டம் அமுலாவதற்கு முன் சென்ற வருடம் சேலம் ஜில்லாவில் 735 ஜில்லா போர்டு ஆரம்ப பாடசாலைகள் இருந்தன. இத்துடன் 100 எயிடெட் பள்ளிகளும் இருந்தன. ராசிபுரம், சேலம் முனிசிபாலிடி நீங்கலாக ஜில்லாவில் 166563, பையன்கள் 130404, சிறுமிகள் பள்ளிக்குப் போகும் வயதுடையவர்கள். இவர்களில் 1952-53-ம் வருஷத்து நிர்வாக அறிக்கையின்படி 99792 பையன்களுக்கும், 83680 சிறுமிகளுக்கும் பள்ளிக்கூட வசதி அளிக்கப்பட வேண்டியிருந்தது. புதுத் திட்டம் இப்பொழுதுள்ள ஆசிரியர்கள் அத்தனை பேருக்கும் வேலை தர வேண்டுமென்றால் இந்தப்பையன்களையும், சிறுமிகளையும் உடனடியாகப் பள்ளிக்கு வர ஏற்பாடு செய்தாக வேண்டும். இல்லையென்றால் இந்த ஆசிரியர்கள் வேலை இழக்க நேரிடும்.

மேலும் இந்த நிருபர் கூறுவதாவது :—

என்றைக்குத் தங்கள் வேலைக்கு சீட்டுக் கிழியுமோ வென ஆசிரியர்கள் நடுங்கிக்கொண்டிருக்கின்றனர். சில கிராமங்களில் மாணவர்களின் தொகை ஓரளவுக்கு அதிகரித்திருக்கிறதென்றாலும் தேவைப்பட்ட அளவுக்கு மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கவில்லை. ஒரு ஆசிரியருக்கு 80 மாணவர்கள் இருக்க வேண்டும் என்பது எதிர்பார்க்கப் படுகிற அளவு.

சேலம் ஜங்ஷனுக்கு அருகில் உள்ள சூரமங்கலத்தில் மாணவர்களின் தொகை 475–ல் இருந்து இந்த வருடம் 600 ஆக உயர்ந்திருக்கிறது. அதாவது சென்ற வருடம் 475–பேர் இருந்தனர். இப்பொழுது 125–பேர்கள் அதிகமாயிருக்கிறார்கள். அங்குள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை 13 ஆகும். இவர்களில் 11 பேர் பெண்கள். பள்ளிக்கூடம் ஷிப்ட் முறையில் நடக்கிறதல்லவா? ஒரு ஷிப்ட்டிற்கு 300 பிள்ளைகள் வீதம் வருகிறார்கள். இவர்கள் அத்தனைபேரும் தவறாமல் வந்தாலும் கூட தேவைப்பட்ட அளவுக்கு மிகக் குறைவாகப் பிள்ளைகள் இருக்கிறார்கள்.

## ஊக்கம் இல்லை

ஜலகண்டாபுரத்தில் கட்டாயப் படிப்பு அமுலில் உள்ளது. புதிய திட்டம் அமுலுக்கு வந்ததின் பிறகு மாணவர்கள் எண்ணிக்கை அதிகரிப்பு மிகச் சொற்பம். இன்னும் பிள்ளைகள் சேர்க்கப்பட்டு வருகிறார்கள். இன்னும் ஜனவரி மாதம் வரை சேர்க்கப்படுவார்களாம். போர்டு பாடசாலை யில்லாமல் மற்றொரு எய்டெட் பள்ளிக்கூடமும் இங்கு உள்ளது. இங்குள்ள போர்டு பாடசாலையில் 13 ஆசிரியர்கள் இருக்கிறார்கள். இன்னொரு ஆசிரியர் ஸ்தானம் காலியாக உள்ளது. ஆனால் ஒரு ஷிப்டுக்கு வருகிற பிள்ளைகளின் எண்ணிக்கை 300.

## இன்னும் வேடிக்கை!

வனவாசி, கட்டாயக் கல்வி அமுலில் உள்ள மற்றொரு இடம். இங்கு என்ன வேடிக்கை யென்றால் சென்ற வருடம் இருந்த மாணவர்கள் தொகை 420. ஆனால், இந்த வருடம் 380 ஆகக் குறைந்துள்ளது. ஆனால், இதற்குக் காரணம் சொல்லுகிறார்கள். 7000க்குப் பக்கமாக இருந்த நெசவாளர் குடும்பங்களில் 2000 குடும்பங்கள் ஊரை விட்டு வெளியேறிவிட்டனர். அதனாலேயே இந்த சரிவு என்று கூறப்படுகிறது. இதுதான் இதற்குக் காரணமே ஒழிய புதிய திட்டமல்ல என்று சொல்லப்படுகிறது. ஆனால், தசரா சமயத்தில் 50 புதிய மாணவர்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றனர். சென்ற வருடம் 20 மாணவர்கள்தான் சேர்க்கப்பட்டனர் என்று கூறப்படுகிறது.

வனவாசி கிராமத்திலுள்ள தோழர் ஸ்ரீ ஷண்முகம் என்பவர் ஏழ்மையில் வாடும் மக்கள் தங்கள் ஏழ்மையின் காரணமாகவே பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்ப முடியவில்லை என்றும் இன்றுள்ள முறைப்படி சிறுவர்களுக்கு 2 மணி 40 நிமிஷப் படிப்பு போதாது என்றும் கூறினார்.

முதல் நாள் காலையிலும், மறுநாள் மாலையிலும் மாறிமாறிப்பிள்ளைகள் பள்ளிக்குப் போவது என்ற முறை மிகவும் குழப்பத்தை ஏற்படுத்தி யிருக்கிறது.

பலமுறை பிள்ளைகள் பள்ளிக்குப் போனதும் அவர்களைப் பிற்பகல் வரும்படி. கூறுகிறார்கள். அவர்கள் ஊர் சுற்ற ஆரம்பித்து விடுகிறார்கள். இந்த மாதிரி பழக்கத்திற்குப் புதிய திட்டம் ஊக்கமளிக்கிறது.

பிள்ளைகளுக்கு முன்பு வழங்கப்பட்டதைப்போல மத்தியான உணவு தந்து கட்டாயக் கல்வி முறை அமுலுக்கு வரவேண்டும் என்று ஸ்ரீ ஷண்முகம் யோசனை கூறினார்.

காங்கிரஸ்காரர்களான ஸ்ரீமான்கள் கந்தசாமி செட்டியார், மல்லி செட்டியார், சி. எஸ். ஓபுலி செட்டியார் முதலியோர் கிராம வாசிகளுக்குப் புதிய கல்வித்திட்டத்தைப்பற்றி நன்கு கூறப்படவில்லை என்றும், ஸ்தல எம். எல் ஏ.க்களோ காங்கிரஸ்காரர்களோ இது பற்றி நன்கு கிராம வாசிகளுக்கு விளக்கிக் கூறவில்லை என்றும் கூறினார்கள். ஸ்தல எம். எல். ஏ.க்கள் அந்தந்த ஊர்களுக்கு வந்து மக்களுக்கு இதை விளக்க வேண்டுமென்ற அக்கறை எடுத்துக் கொள்ளுவதில்லை என்று தெரிவித்தார்கள். காங்கிரஸ் கமிட்டிகளும் எந்த விதமான பிரசாரமும் செய்யவில்லை என்றும், எதிர்க்கட்சிக்காரர்களான கழகத்து ஆட்கள் தான் திட்டத்திற்கு விரோதமாகப் பிரசாரம் செய்து வருகிறார்கள் என்றும் இவர்கள் கூறினார்கள்.

எல்லா வகுப்பாருமே 6 முதல் 8 வயதுடைய பிள்ளைகளுக்குத் தொழில் சொல்லித் தருவது பொருந்தாது என்றும் அவர்களுக்காவது இரண்டு நேரமும் பள்ளிக்கூடம் வேண்டும் என்றும் அவர்களுக்காக அதிக ஆசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்றும் அபிப்பிராயப்படுகிறார்கள். சர்க்கார் கல்வி விஷயத்தில் இப்படி கருமித்தனமாக இருக்கக்கூடாது என்று அவர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள்.

சமீப வாரங்களில் பள்ளிக்கு ஆஜராகும் பிள்ளைகளின் எண்ணிக்கை திடீரென்று இறங்கியிருக்கிறது. இந்தப் பிள்ளைகள் எல்லாம் பெற்றோர்களோடு நிலக்கடலை வெட்டுக்குப் போய் விடுகிறார்கள் என்று சொல்லப்படுகிறது.

மழை பெய்ததை யொட்டி நிறைய பிள்ளைகளுக்கு ஜுரம் கண்டிருப்பதாகவும் இதனால் பல கிராமங்களில் பள்ளிக்கு ஆஜராகும் பிள்ளைகளின் எண்ணிக்கை ரொம்பவும் குறைந்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

இந்த மாதிரி சூழ்நிலையில் பாவம் ஆசிரியர்கள் எந்த விதமான புள்ளி விவரங்களைக் காட்ட முடியும். அவர்கள் தருகிற புள்ளி விவரங்களுக்கும், உண்மை நிலைக்கும் நிறைய வித்தியாசம் இருப்பதாக சகஜமாகப் பேசப்படுகிறது.

சில கிராமங்களில் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை இரண்டு நேரமும் பள்ளியில் அனுமதிக்க

வேண்டுமென்று வற்புறுத்துவதாகவும், அதற்குத் தலைமை ஆசிரியர்கள் மறுப்பதாகவும் ஒரு தலைமை ஆசிரியர் கூறினர். சில கிராமங்களில் ஷிப்ட் முறையை அனுசரித்துப் பிள்ளைகளை அனுப்புவதில் பெற்றோர்கள் சரியாக ஒத்துழைப்பதில்லை என்றும், அவர்கள் மாறி மாறிப் பிள்ளைகளை அனுப்புகிறார்கள் என்றும் கூறப்படுகிறது.

ஒரு கிராமத்தில் பிள்ளைகள் பள்ளிக்கு வருவது 200–ல் இருந்து 160 ஆகிவிட்டது. அதிகாரிகள் ஒரு ஆசிரியரைக் குறைத்துக்கொள்ளும்படி கேட்டிருக்கிறார்களாம். மற்றொரு பள்ளிக்கூடத்தில் ஆசிரியர்களின் எண்ணிக்கை 5–ல் இருந்து 2 ஆக குறைக்கப்பட இருக்கிறது.

## ஆசிரியர்களின் பயம்

சென்ற வருடம் ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை இருந்து வந்தது. தேவைக்கு அதிகமான மாணவர்கள் இருந்தார்கள். இந்தப் புதியதிட்டம் அமுலுக்கு வந்ததில் தேவைக்கு மேல் ஆசிரியர்கள் இருக்கிறார்கள்.

இந்த வருடம் புதியதாக நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள் வேலையிலிருந்து ஏற்கெனவே நீக்கப்பட்டு விட்டார்கள். 1953–ம் வருஷம் பயிற்சி பெற்று வந்த ஆசிரியர்களில் பெரும் பகுதியினர் வேலையின்றி இருப்பதாக நம்பகமான இடங்களில் சொல்லப்படுகிறது. இவர்களுக்கு எதிர் காலத்திலும் வேலை கிடைக்கும் சந்தர்ப்பம் ஒன்றுமில்லை.

இன்று ஆசிரியர்களுக்கு, நங்களுக்கு 80 மாணவர்கள் வீதம் எண்ணிக்கையை உயர்த்திக் கொள்ளவில்லை யென்றால் வேலை போய்விடும் என்ற நிலைமை இருக்கிறது. இப்பொழுதுள்ள ஆசிரியர்களில் 40 சத விகிதத்தினர் இந்த பிரச்னையை சமாளித்தாக வேண்டும்.

ரிடயர் ஆன ஆசிரியர்கள் திரும்பவும் தற்காலிகமாக வேலை பெறுவது என்பது இனி முடியாத காரியம்.

நவம்பர் 23–ந் தேதி ஆசிரியர்களின் சம்பளத்தை உயர்த்த முடியாது என்று மங்களூரில் முதல் மந்திரி பேசியிருப்பது ஆசிரியர்களிடம் இருந்த நம்பிக்கையை இழக்கச் செய்துவிட்டது. 5 மணிக்கு பதில் 6 மணி நேரம் வேலை செய்து, $5\frac{1}{2}$ நாட்களுக்கு பதில் 6 நாட்கள் வாரத்தில் வேலை செய்து, 220 நாட்களுக்குப் பதில் வருஷத்தில் 235 நாட்கள் வேலை செய்ய வேண்டியிருக்கிறது. சில ஆசிரியர்கள் தபாலாபீஸுகளில் பிராஞ்ச் போஸ்ட் மாஸ்டர்களாக இருந்தனர். அவர்களும் இனி அப்படிப்பட்ட வேலைகளில் ஈடுபடுவது கஷ்டம்.

## பொருத்தமற்றது.

அதுவும் போக ஆசிரியர்களையும் நோட்டிகளையும் ஒன்றுபடுத்திப் பேசியிருப்பது பொரு

த்தமற்றது என்று கூறப்பட்டது. ஒரு ஆசிரியரது குடும்பத்தில் ஆசிரியர் தான் சம்பாத்தியமுள்ளவராக இருக்கிறார். ரொம்பவும் அபூர்வமாக கணவன் மனைவி இருவரும் ஆசிரியர்களாக உள்ள குடும்பங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு ஆசிரியரும் சராசரி 6 நபர்களைக் காப்பாற்ற வேண்டியிருக்கிறது. ஆனால், தோட்டிகள் விஷயம் அப்படியல்ல. அவர்கள் குடும்பத்தில் உள்ள அத்தனை பேரும் சம்பாதிக்கிறார்கள். 8 வயதுக்குக் குறைந்த குழந்தைகளைத் தவிர. சாதாரணமாக சேலம் நகரத்தில் உள்ள நகர சுத்தித் தொழிலாளர் குடும்பம் மாதம் ஒன்றுக்கு ரூ. 200 வீதம் சம்பாதிக்கிறார்கள். துன்பப்படும் ஆசிரியர்களையும் குறைந்த சம்பளம் பெறும், என். ஜி. ஓக்களையும் தோட்டிகளுடன் ஒப்பிட்டுக் கூறுவது பொருத்தமற்றதாகும் என்று கூறப்படுகின்றது. 2 மணி 40 நிமிஷப்படிப்பு உயர் நிலைப் பள்ளிக்குப் போகிற மாணவர்களுக்குப் போதாது; அங்கு தரம் அதிகம் என ஒரு அனுபவ மிக்க தலைமை ஆசிரியர் கூறினர்.

## தொழில் எப்படி ?

ஆறுமணி நேரம் 'பள்ளிக்கூடத்தில் பணியாற்ற வேண்டியுள்ள ஆசிரியர்களுக்குப் பிள்ளைகள் தொழில் செய்வதை கவனிக்க நேரம் கிடையாது. அவர்கள் பெற்றோர்களிடமும், தொழிலாளர்களிடமும் கேட்டுத் தெரிந்துகொள்வதுதான். நெசவாளர்களைப்போல சில தொழிலில் உள்ளவர்கள் பள்ளிப்பிள்ளைகளை நேரிடையாகத் தொழில் செய்வதில் ஈடுபடுத்திக் கொள்வதில் திருப்திப்படவில்லை. மாணவர்களுக்கு எப்படிப்பட்ட பொருத்தமான பயிற்சியளிக்கலாம் என்பதில் தீவிரமான சிரத்தை எடுத்துக்கொண்டிருப்பதாகத் தோன்றவில்லை.

பள்ளிக்கூடத்திலேயே 'தொழில் சொல்லித்தர ஏற்பாடு செய்து சம்பளம் தந்து ஆசிரியர்களை நியமித்து தலைமை ஆசிரியரின் மேற்பார்வையில் தொழில் கற்றுக் கொடுப்பது நல்லதென தலைமை ஆசிரியர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். இதற்குப் பதிலாக மற்றொரு யோசனையும் கூறப்படுகிறது. அதாவது தொழிற்பயிற்சி நிலயத்தை ஒரு மத்திய இடத்தில் ஏற்படுத்துவது. சரியான மேற்பார்வையின் கீழ் மூன்று மைல் அல்லது இரண்டு மைல் சுற்றளவில் உள்ள மாணவர்கள் இங்கு வந்து தொழிற் பயிற்சி பெறுவது என்று ஏற்படுத்தினால் நல்ல பலனளிக்கும் என்று கூறப்பட்டது.

விவசாயம், நெசவு முதலிய தொழிலில் ஈடுபட்டுள்ள குடும்பங்களில் உள்ள எட்டு வயதுக்கு மேற்பட்ட பிள்ளைகள் திட்டம் அமுலுக்கு வருவதற்கு முன் பிருந்தேகூட பெற்றோருடன் ஒத்தாசையாக வேலை செய்து

(39–ம் பக்கம் பார்க்க,)

# ஆர்க்கிமிடீஸ்

**(தண்ணீரில் சில பொருள்கள் மிதக்கும் தன்மையுடையன. அதன் தத்துவம் என்னவென்று (ஆர்க்கிமிடிஸ்) கண்டறிந்தார்.)**

சிசிலி நகரம் அன்று மாலை குதூகலமாகக் காணப்பட்டது. கப்பலிலிருந்து இறங்கிய மாலுமிகள் மதுபானக் கடைகளை நோக்கிச் செல்கின்றனர். மக்கள் அழகாக உடையணிந்து செல்கின்றனர். நாட்டில் இன்பம் பொங்கி வழிகிறது என்பது போன்ற சூழ்நிலை. மதுபானக் கடைகள் நிறைந்து காணப்பட்டன. மாட்டு வண்டிகளை ஓட்டிச் செல்வோரின் குரலும், 'கடகட' என்று சக்கரங்கள் சுழலும் ஒலியும் கேட்பதற்கு இன்பமாக இருந்தது.

திடீரென்று அங்கே ஒரு பரபரப்பு ஏற்பட்டது. வண்டிகள், கோச்சுகள் அனைத்தும் நின்று விட்டன. மதுபானக் கடைகளில் குதூகலமாகப் பேசிக் கொண்ட மக்கள் தெருவை நோக்கித் திரும்பினர். மக்கள் நடமாட்டமே நின்று விட்டது. 'என்ன? என்ன?' என்று அனைவரும் கேட்கின்றனர். யாராலும் பதில் சொல்ல முடியவில்லை. அந்த நிலை நீண்ட நேரம் நீடிக்கவில்லை. அதோ ஒரு மனிதன், பைத்தியக்காரனோ என்னவோ, நிர்வாணமாக ஓடுகிறான். மாலை நேரத்தில் நிர்வாணமாய் ஓடுகிறான். 'எருகா, எருகா' என்று கூறிக்கொண்டே ஓடுகிறான். எருகா என்றால் கண்டு பிடித்து விட்டேன் என்று பொருள். அந்த மனிதன் யாரென்பது உடன் தெரிந்து போயிற்று. மக்கள் அந்த மனிதரின் பெயரைக் கேட்டதும் ஆச்சரியத்தில் மூழ்கிப் போயினர். 'அவரா இப்படிச் செய்தார்?' இதுதான் அவர்கள் கேட்டது. ஆம், அவர் தான் இப்படிச் செய்தார். நிர்வாணமாக ஓடியவர், கிரேக்க நாட்டின் மிகப்பெரிய கணித நிபுணர், ஆர்க்கிமிடிஸ் என்பவர். மக்கள் மன்றத்தில் மதிப்புப் பெற்ற அந்த மனிதர் தான் அன்று மாலை அப்படி ஓடினார். மேதைகள் என்போர் விசித்திர மானவர்கள் என்ற கூற்றுக்கு ஆர்க்கிமிடீசின் போக்கு அன்று ஒரு உதாரணமாக விளங்கியது.

சைரகஸ் (Syracuse) என்ற கிரேக்கத்தின் பகுதியை ஆண்டு கொண்டிருந்த மன்னன் ஹியரோ புதிய கிரீடம் ஒன்றைச் செய்யுமாறு பொற்கொல்லர் ஒருவரிடம் கூறினான். மகுடம் தயாராயிற்று. கண்களைப் பறிக்கும் வண்ணம் ஜ்வலித்தது. ஆனால் மன்னனுக்கு ஒரு சந்தேகம் ஏற்பட்டது. கிரீடத்தில் உள்ளது அவ்வளவும் தங்கம் தானா அல்லது பொற்கொல்லர் அதிலே வேறு உலோகத்தைக்

கலந்து விட்டாரா என்று மன்னன் அறிய விரும்பினன். இது பற்றி மன்னன் தன் அவையில் இருந்த விஞ்ஞானிகளைக் கேட்டான். அன்று அவன் நாட்டில் மிகப்பெரிய கணித மேதையான ஆர்க்கிமிடீசிடம்அப்பொறுப்பை ஒப்புவித்தான். 'எப்படிக் கண்டு பிடிப்பது?'—இப்போது மிகவும் சுலபமான பிரச்சினை அது. அன்று ஆர்க்கிமிடீசிற்கு அது புலப்படவில்லை. சிந்தித்தார். தான் போகுமிடங்களிலெல்லாம் சிந்தித்தார். ஒரு நாள் மாலை, ஊர் நடுவில் உள்ள தொட்டி ஒன்றில் குளித்துக் கொண்டிருந்தார். தண்ணீருக்குள் மூழ்கி மூழ்கி

---

(37-ம் பக்கத் தொடர்ச்சி)

வருகிறார்கள். மற்றத் தொழில்களில் திருப்திகரமாக இல்லை. இப்பொழுது உள்ள முறைப்படி பிள்ளைகள் தொழிலில் நல்ல பயிற்சி பெறுவது சிரமம்.

## பெரும் பயம்

மாணவர்களின் எண்ணிக்கையின் பேரில் சம்பளம் என ஒரு திட்டம் ஸ்ரீ நாச்சியப்ப கவுண்டர் ஜில்லா போர்டு தலைவராக இருந்த நாளில் இருந்தது. அது பிறகு நீக்கப்பட்டுவிட்டது. ஆனால் இன்று பள்ளிக்கு வரும் மாணவர்களின் எண்ணிக்கை குறைந்து வருவதில் இருந்து மீண்டும் அம்மாதிரி நிலை வந்து விடுமோவென ஆசிரியர்கள் பயப்படுகிறார்கள்.

(பேரிகை.)

எழுந்தார். இவர் உள்ளே மூழ்கும்போது தொட்டியின் தண்ணீர் மட்டும் உயருகிறது. இதையும் கண்டார் அவர். மன்னனின் மகுடத்தில் கலப்பு உலோகம் எவ்வளவு என்ற கேள்வியையும் கேட்கிறார். ஏதோ இவர் கேள்விக்குப் பதில் கிடைத்தது போன்ற உணர்ச்சி அவருக்கு ஏற்பட்டது. அவ்வளவுதான். எழுந்தார். உடைகளை அணிய வேண்டுமென்ற எண்ணமே தோன்றவில்லை அவருக்கு. 'கண்டு பிடித்து விட்டேன்!' இப்படிக் கத்திக்கொண்டே தன் வீடு நோக்கி ஓடினார். வீடு அடைந்ததும் சோதனை செய்தார். ஒரு உண்மை புலன் ஆயிற்று. 'ஒரு பொருள், தண்ணீரிலோ அல்லது வேறு எந்தத் திரவத்திலோ மூழ்கும்போது, அப்பொருள் தான் உள்ளே மூழ்கும்போது வெளியேற்றும் திரவத்தின், அல்லது தண்ணீரின் எடை அளவுக்கு, தன் எடையை இழந்துவிடுகிறது என்னும் உண்மையைக் கண்டு பிடித்தார். இது இன்று 'ஆர்க்கிமிடிஇன் தத்துவம்' என்று அழைக்கப்படுகிறது. இப்படித் தன் பரிசோதனையைத் துவங்கி, மன்னனின் பொற்கிரீடத்தில் எவ்வளவு தூய தங்கம் உள்ளதென்று கண்டு மன்னனிடம் கூறினார்.

இப்படித் தன் திறமையைக் காட்டிய அவர், பௌதீக சாஸ்திரத்தில் ஹைட்ரோ ஸ்டாட்டிக்ஸ் என்னும் புது அத்தியாயம் ஒன்றைத் துவக்கினார்.

## பிறப்பு

ஆர்க்கிமிடிஸ் கி. மு. 287—ல் சிசிலி (Sicilly) என்ற கிரேக்க நாட்டு நகரமொன்றில் பீடியஸ் (Phedias) என்பவரின் மகனாய்ப் பிறந்தார். இவரது தந்தை ஒரு வான ஆராய்ச்சிப் புலவர். அந்த நாட்டு மன்னன் ஹியரோவின் உறவினன். ஆர்க்கிமிடிஸ் இளமையில் எகிப்திய நகரான அலெக்சாண்டிரியாவில் கல்வி பயின்றார். எகிப்திய மண்ணுக்குப் பாசன நீர் கிடைக்காது மக்கள் துயருற்றார்கள். ஆர்க்கிமிடிஸ் புதிய பம்பு முறையைக் கண்டு பிடித்துத் , தண்ணீரை உயரே கொண்டுவர ஏற்பாடு செய்தார். மெக்கானிக்ஸ் என்று நாம் அழைக்கும் விஞ்ஞானத்தின் பகுதியில் அவர் கண்டு பிடித்த முறைகள் பல.

## போர்

இவர் வாழ்ந்த சைரகஸ் நாடு போரில் சிக்கியது. கார்த்தஜீனியர்கள், ரோமானியர்கள், கிரேக்கர்கள் அனைவரும் அந்த நாட்டின் மீது படையெடுத்தனர். அவர்களது துறைமுகம் தாக்கப்பட்டது. மன்னன் ஆர்க்கிமிடீசை அழைத்தான். எதிரிகளை முறியடிக்கப் பாதுகாப்பு மிஷின்களையும், எதிரியைத் தாக்கும் மிஷின்களையும் கண்டு பிடிக்குமாறு கேட்டுக்கொண்டான். நெம்புகோல் என்னும் அமைப்பில் கயிறுகளையும் சக்கரங்களையும் சேர்த்து ஆர்க்கிமிடிஸ் யந்திரம் ஒன்றை அமைத்தார். எதிரியின் போர்க் கப்பல் சைரகசின் துறைமுகத்தில் நின்று கொண்டிருக்கும். துறைமுகத்திலிருந்து நீண்டதோர் கொக்கி ஒன்று இரவில் கப்பலின் மீது எறியப்படும். நீண்ட கயிற்றின் நுனியில் அந்தக் கொக்கி இணைக்கப்பட்டிருக்கிறது. துறைமுகத்தில் உள்ளவர்களில் இரண்டு பேர் ஆர்க்கிமிடிசின் மிஷினிடம் நின்று எதையோ சுற்றுகிறார்கள். கடலில் நிற்கும் எதிரியின் கப்பல் திடீரென்று கரையை நோக்கி நகர்கிறது. துறைமுகத்தின் அருகே உள்ள கற்பாறை ஒன்றில் மோதுகிறது. கப்பல் உடைந்து அதில் உள்ள எதிரிகள் கடலில் வீழ்ந்து மாண்டு போயினர். எதிரியைத் தாக்க ஆர்க்கிமிடிஸ் செய்த பலதரப்பட்ட யந்திரங்களில் இதுவும் ஒன்று. இதுபோல் பல முறை எதிரிகள் தோற்றோடினார்கள். படைகளுடன் வருவார்கள். துறைமுகத்தருகே ஏதோ ஒரு கயிறு நீட்டப்பட்டால் போதும். ஆர்க்கிமிடிஸ் புதிய முறை ஒன்றைக் கையாளுகிறார் என்று தெரிந்து கொண்டு படையுடன் திரும்பி விடுவார்கள். ரோமானிய தளபதி மார்சலஸ் (Marcellus) தானும் இம்மாதிரி முறைகளைக் கையாள எண்ணினான். அவன் நாட்டிலே ஆர்க்கிமிடிஸ் இல்லையே. அவனுக்குத் தோல்வி தான்.

## ஆராய்ச்சி

ஆர்க்கிமிடீஸ் கண்டு பிடித்த போர்க் கருவி அநேகம். ஆனால்

அவர் தமது புதிய கருவிகளின் அமைப்புப் பற்றி எழுதித் தர மறுத்து விட்டார். அதுமட்டு மல்ல தனது புதிய கருவிகளுக்கு அவர் மதிப்பளிக்கவும் மறுத்து விட்டார். அவரது திறமையைப் பற்றி எண்ணும்போது ப்ளூ டார்ச் என்னும் பேரறிஞர் கூறு கிறார் 'அவர் தம் திறமையின் மூலம் மக்களுக்குப் பயன்படும் கருவிகளையே கண்டு பிடிக்க எண்ணினார். ஆகவே அவர் தாம் அமைத்த போர்க் கருவிகளைப் பற்றி அதிகம் சிந்திக்க மறுத்து விட்டார்.'

இப்படி எண்ணிய ஆர்க்கி மிடீஸ் விஞ்ஞான உலகிற்குத் தம் ஆராய்ச்சிகளைச் சேகரித்து வைத் தார். உருண்டை வடிவமான பொருள்கள், உருளை, வட்டத் தின் சுற்றளவு, தண்ணீரில் மிதக்கும் பொருள்கள் இவை களைப்பற்றி எல்லாம் அவர் ஆராய்ச்சிகள் செய்தார். அவை கள் இன்று விஞ்ஞான உலகிற்கு எவ்வளவோ பயனை அளிக்கின் றன. இன்றைய நாகரீக வாழ்வு ஆர்க்கிமிடிசுக்கு நிறையக் கட மைப்பட்டிருக்கிறது.

'இவரது கருவிகள் நமக்கு ஒரே வியப்பை அளிக்கின்றன. யாருமே செய்யாத, யாருமே நினைக்காத பல கருவிகளை அவர் செய்திருக்கிறார். எப்படி அவைகள் செய்யப்பட்டன என்று அவர் நம்மிடையே சொல்லும்போது நாமே அவை களைச்சுலபமாகச்செய்துவிடலாம் போல் தோன்றுகிறது. அவ்வளவு எளிய முறையில் தன் கருவி களைப்பற்றிய விவரங்களைக் கூறு கிறார்' இப்படி எழுதுகிறார் ப்ளூடார்ச்.

## முடிவு

உலகில் விஞ்ஞானிகள் பல ருக்கு வழி காட்டியவர் ஆர்க்கி மிடிஸ். அவருக்கு ஏற்பட்ட முடிவு மிகவும் பரிதாபகர மானது. சைரகஸ் நாட்டின்மீது மீண்டும் ரோமானியர்கள் மார்ச லஸ் தலைமையில் படையெடுத்து வந்தார்கள். கி. மு. 212-ல் ரோமானியர்கள் வெற்றி பெற் றனர். வெற்றியடைந்த மார் சலஸ் ஆர்க்கிமிடீசைக் காண விரும்பினான்.

தோல்வி அடைந்து தன் முன்னே தலை குனிந்து நின்ற வர்களிடையே ஏன் ஆர்க்கிமிடீ சைக் காணவில்லை என்று சிந்தித் தான். அறிஞர்களும் கலைஞர் களும் தன்முன் மண்டியிட்டு நிற் பார்கள் என்று எதிர்பார்த்தான் அந்த ரோமானியன்.

ஆர்க்கிமிடீசை அழைத்து வாருங்கள்—இப்படி உத்தரவிட் டான். அவனது உத்தரவு எங் கும் எதிரொலித்தது. 'ஆர்க்கி மிடீசைத் தேடிக் கண்டு பிடியுங் கள். சேனாதிபதி அவரைக் காண வேண்டுமென்கிறார்' என்ற உத் தரவு பிறப்பிக்கப்பட்டது. சிசிலி யின் எல்லாப் பகுதியிலும் ரோ மானிய வீரர்கள் புகுந்து தேடு கின்றனர்.

ஆர்க்கிமிடிஸ் தன் வீட்டில் அமர்ந்திருக்கிறார். இப்போது

அவர் வயோதிகர், கையில் எதையோ வைத்துக்கொண்டு கோடுகள் கிழித்துக் கொண்டிருக்கிறார்.

"உம்...எழுந்து வாரும் உம்மை எங்கள் சேனதிபதி பார்க்க வேண்டுமென்கிறார் இப்படி உறுமினன் அந்த வயோதிகன் முன் நின்ற ரோமானிய சிப்பாய். ஆர்க்கிமிடீஸ் அதைக் கவனித்ததாகத் தெரியவில்லை. மீண்டும் அந்தச் சிப்பாய் அதையே கூறுகிறன்.

"டேய் இங்கே வந்து என்னைத் தொந்தரவு செய்கிறய், போய்விடு எனக்கு வேலையிருக்கிறது" என்றார் அந்த மேதை.

சிப்பாய் யோசித்தான் இக்கிழவனைத் தன் முன்னே கொண்டுவர வேண்டுமென்பது சேனதிபதியின் உத்தரவு. அவரை எப்படியாவது கொண்டு செல்ல வேண்டும். தளபதியின் உத்தரவுக்குக் கீழ்ப்படிய மறுக்க இக்கிழவனுக்கு என்ன உரிமை இருக்கிறது என்று நினைத்தான் அந்தச் சிப்பாய். கொஞ்சம் முன்னே சென்றான். ஆர்க்கிமிடீசின் கையைப் பிடித்தான்.

அவருக்குக் கோபம் வந்துவிட்டது. என் வேலை முடியும் வரை நான் எங்கேயும் வரமுடியாது என்று கூறித் தன் கையை விடுவித்துக்கொண்டார். அவரது பேச்சு அந்தச் சிப்பாய்க்குக் கோபம் மூட்டியது. மீண்டும் ஒரு முறை முயற்சித்தான் பயன் இல்லை. அவன் கண்கள் கோவைப் பழங்கள் போல் சிவந்து போயின. தன் வாளை உருவினன் அந்தக் கொடியவன். அடுத்த விநாடி அவன் வாள் ஆர்க்கிமிடீசின் மார்பின் மீது பாய்ந்து விட்டது. ரோமானியனின் வாள் வீரம் அந்த மேதையின் குருதியால் கறைபட்டுப் போயிற்று. இன்றும் அந்த நிகழ்ச்சியைப் பற்றி எண்ணும் போது ரோமானிய இனத்தோர் தலை குனிந்து நிற்பார்கள். சிப்பாய்க்கு அந்த மேதையின் பெருமை பற்றி என்ன தெரியும்.

ஓடினன் தளபதியின் முன் வாளைக் காட்டினன். 'கொன்று விட்டேன் அந்தக் கொடியவன் ஆர்க்கிமிடீசை' என்று கூவினன் அந்தக் கோழை. இது கேட்ட மார்சலஸ் மனம் ஒடிந்து போனன். அக்கொலைகாரனின் இருந்த இடம் நோக்கி அவன் திரும்பவே இல்லை. ஆர்க்கிமிடிஸ் கொலை செய்யப்பட்டுக் கிடந்த இடத்துக்கு ஓடினன். 'மேதையே ஏந்தலே என்னை மன்னித்து விடும். கொடியவன் நான். உம்போன்ற பேரறிஞனை நானே வந்து பார்த்திருக்க வேண்டும். என் அடாத செயலுக்கு எனக்கு நீர் நல்ல பாடம் கற்பித்தீர்' என்று பிணத்தின் முன் கதறியழுதான். அரச மரியாதைகளுடன் ஆர்க்கிமிடிசின் உடல் அடக்கம் செய்யப்பட்டது. அங்கே கல்லறை ஒன்று கட்டப்பட்டது. தளபதி மார்சலஸ் ஆர்க்கிமிடீசின் உறவினர்களுக்குப்

பரிசளித்தான், பாராட்டிச் சென்ருன்.

சில நாட்களில் அந்தக் கல்லறையின் மீது புல் முளைத்து விட்டது. கி. மு. 75-ல் அங்கே வந்த ரோமானிய அறிஞன் சிசரோ அக்கல்லறையைக் கண்டு பிடித்தான், புதுப்பித்தான்.

"ஆர்க்கிமிடீசின் தன்மையை அறியாதவர்களா இந்த நாட்டில் வாழ்கிருர்கள். இவரது கல்லறையைக்கூடக் கவனியாது விட்டு விட்டார்களே! கிரேக்கத்தின் மேதையின் கல்லறையை ரோமானியன் தானு கண்டு பிடிக்க வேண்டும்?" என்று எழுதினுர் சிசரோ. ஆம். அவர்தான் அதைப் புதுப்பிக்க வேண்டும். ஏனெனில் ஆர்க்கிமிடீசைக் கொன்றதும் ஒரு ரோமானியன் தானே?

(தீப்பொறி)

---

## அறிஞர் வாயுறை

உடலுக்கு உணவாகத் தானியங்கள் பயன் படுவதுபோல் உள்ளத்திற்கு உயர்ந்த நூல்களே முக்கியமான ஆகாரமாகின்றன.

—எட்கார்,

உலகின் சிறந்த நூல்கள் அனைத்தும் எழுத்தாளனின் இரத்தக் கண்ணீரால் உருவானவை.

—மொசி.

அரிய புஸ்தகங்கள்; இனிய கலாசாலை; அரிய நூல் நிலையம்; இனிய அகில கல்லூரி. அதன் இனிமையை ருசித்தவன் புதிய சக்தியைப் பெறுகிருன்.

—அன்னேன்.

அறிவாளிக்கு அறுசுவையுண்டியை விட அறிவைத்தூண்டும் நூல்களே அளவில்லா ஆனந்தம் அளிக்கிறது.

—எட்கார்.

காதலுக்காகவே மாந்தர் வாழ்வது தவறு. சுயநலமற்ற எந்த மனிதனும் அல்லது மங்கையும் பிறர் நன்மைக்காகக் காதல் நோயை வென்று விடுவார்.

—தாயுமானவர்.

நூறு செல்வந்தரை விடத் தியாகசிந்தையுள்ள ஒரே ஏழைத் தேச பக்தனுல் நாட்டுக்கு அதிக நன்மை உண்டாகின்றது.

—அனுனிமஸ்.

# செங்கற்பட்டு ஜில்லா

# ஆரம்ப ஆசிரியர்கள் யூனியன்

---

## ஜில்லா போர்டு தனி அலுவலரின் துணைவரிடம் தூது

ஷை யூனியன் நிர்வாகக்குழு 2-12-53 காலை 10 மணிக்கு சைதாப்பேட்டையில் யூனியன் தலைவர் திரு. சி. பாலசுப்பிரமணியம் தலைமையில் கூடி, புதுக் கல்வித்திட்ட நடைமுறையில் உள்ள கஷ்டங்களை ஆராய்ந்து, பிற்பகல் 2 மணிக்கு ஜில்லா போர்டு அதிகாரி அவர்களின் துணை அலுவர் அவர்களைச் சந்தித்து, கீழ்க்கண்டவாறு விளக்கம் கூறி, பருலேகர் கமிட்டியின் அறிக்கையிலுள்ள சாதகபாதகங்களை அறிந்து அரசியலாருக்கு அறிவிக்க டிசம்பர், ஜனவரியில் மாநாடு நடத்த இருப்பதையும் தெரிவித்தது.

(1) ஆசிரியர்கள் குறைந்த பட்சம் ரூ. 1000-க்கு இன்ஷ்யூரன்ஸ் செய்து கொள்ள வசதி.

(2) எஸ்டாபிளிஷ்மெண்டு ரிஜிஸ்தர் தயாரித்துக் கொடுத்தல்.

(3) விடுபட்ட வெயிட்டேஜ் கொடுத்தல்.

(4) P. F.-ல் கடன் வசதி அளித்தல்.

(5) P. F. நமூனு நாளது வரை நிலுவையிலுள்ளதைக் கொடுத்தல்.

(6) ஊருத வெள்ளைக் காகிதத்தில் ரெஜிஸ்தர்கள், நமூனுக்கள் தருதல்.

(7) தொழிற் பயிற்சி ஆசிரியர்கள் ஊதியத்தைக் குறைக்காதிருத்தல்.

(8) மரணமடைந்த ஆசிரியர் குடும்பத்திற்கு உதவ ஒரு திட்டம் ஏற்படுத்துதல்.

(9) அஞ்சல், சாதல் வார் தொகையை அதிகரித்தல்.

(10) பெருக்குச் சாமான்கள் வாங்க பெருக்குபவர்கள் நின்ற தேதியிலிருந்து பெருக்குத் தொகை கொடுத்தல்.

(11) வெளியூர்களில் இருந்து வர அனுமதி கொடுத்தல்.

(12) பியூதாக்கள் இருத்தல்.

(13) ஜில்லா போர்டாரே குடிதண்ணீர்க் குடம் சப்ளை செய்தல்.

(14) போஸ்டல் வேலையை ஆசிரியருக்கு அளிக்கச் சிபார்சு செய்தல்.

(15) ஜில்லா ஆசிரியர்க்குச் சாரணக் குழுவில் சாரணர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர் பிரதிநிதிகளாக இருத்தல்.

முதலான கோரிக்கைகளையும் எடுத்து விளக்கமாக உரைத்தது.

தனி அலுவலர் அவர்கள் விளக்கமாகக் கேட்ட விஷயங்களை எழுதிக் கொடுக்கும்படியும், சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பி வைப்பதாகவும், 5–ம் வகுப்பு பொதுச் சோதனை இருக்க வேண்டுவது அவசியம் என்றும், ஆசிரியர்களுக்கு நன்மையும், வருவாயைப் பெருக்கத் தாம் விரும்புவதாகவும், தூது கோஷ்டியார் எடுத்துக் கூறிய விஷயங்களுக்குத் தன்னாலான உதவி செய்வதாகவும் அலுவலரின் துணைவர் கூறினார்.

புதிய கல்வித்திட்டம் நிறைவேற்றுவதில் உண்டாகும் சிரமங்கள் :—

(1) நீண்ட நேரம் (காலை 3 மணி, மாலை 3 மணி நேரம்) கடினமான பாடங்களை நடத்துவதால் ஆசிரியர்களுக்கு அதிக சிரமத்தையும், மனச் சோர்வையும் தருகிறது. இவ்வகையில் அரசாங்கத்தார் எதிர்பார்க்குமளவு ஆசிரியர்களால் உழைக்க முடியவில்லை, என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

(2) காலை போதித்த ஆசிரியருக்கு மாலை உழைப்பு இல்லாமலிருப்பது நலம்.

(3) பெற்றோர்களுக்கு மக்கள் இரு வேளையும் பள்ளிக்கு அனுப்பாமலிருப்பதை முன்னிட்டுத் தெருப்பள்ளிகள் அதிகரித்து மக்கள் அங்கு சேர்ந்து நாள் பூராவும் படிப்பதால் இப் பள்ளியில் வருகை குறைவதற்கு ஏதுவாக இருக்கிறது.

(4) மாலை வேளைகளில் வரவேண்டிய பிள்ளைகளைக் காலையில் படித்த பிள்ளைகள் அழைத்துக்கொண்டு விளையாட வெளியில் சென்று விடுவதால் பெரும்பாலும் மாலை வருகை அதிகம் குறைகிறது.

(5) பள்ளி நேரத்திற்கு வெளியே நடக்கும் பயிற்சிகள் திட்டம் வெற்றிபெற ஆசிரியர்களால் நடத்த முடியவில்லை. 1. சாரண இயக்கம் 2. செஞ்சிலுவைச் சங்கம் 3. கிராமச் சீர் அமைப்பு சம்பந்த

மான வேலைகள் முதலியவைகளை கவனித்துக் நடத்த அவகாசமில்லாமை.

(6) கைத்தொழிலில் ஈடுபடாத பெற்றோர்களின் குழந்தைகளை கைத்தொழிலில் ஈடுபடச் செய்வது மிகவும் கஷ்டமாய் இருக்கிறது. காரணங்கள் :—(1) தொழிலாளிகளிடத்தில் பிள்ளைகளை ஒப்படைப்பதைப் பெற்றோர் விரும்பாமை. (2) தொழில் சட்டப்படி 15 வயதுக்குக் குறைந்த பிள்ளைகளுக்குத் தொழிற்கல்வி கற்றுக் கொடுக்க தொழிலாளர் மறுப்பு. (3) தொழிலாளிகளின் பிள்ளைகளின் வருகையை விரும்பாமையை யொட்டி ஆசிரியர்கள் அவ்வேலையைச் செய்ய காலமில்லாமை. வற்புறுத்தி நடத்தினால் மாணவர்களின் வருகை குறைவுக்குக் காரணமாயிருக்கிறது.

(7) ஆலோசனைக்குழு:—கிராமங்களில் ஏற்படுத்திய ஆலோசனைக் குழு அரசாங்கம் எதிர்பார்க்கு மளவு ஒத்துழைக்கவில்லை. நடைமுறையில் நடத்தும் குழு ஏட்டளவில்தான் நடைபெறுகிறது.

(8) கைத்தொழிலில் ஈடுபடும் பிள்ளைகளின் பெற்றோர்களைச் சந்தித்து தினசரி குறிப்பு வைப்பதில் தகுந்த தகவல் கிடைக்காமல் இருப்பதாலும், ஆசிரியர்களுக்கு விசாரிக்க அவகாசம் கிடையாது. பெற்றோர்களை ஆசிரியர்கள் போகும்போது சந்திப்பது கஷ்டமாய் இருக்கிறது.

(9) புதிய கல்வித் திட்டப்படி ஆசிரியர்கள் சங்க தினம் தவிர 240 நாட்கள் வேலை நாட்களாக இருக்கின்றன. கோடை விடுமுறையை மேமாதம் 1-ந் தேதியிலிருந்து கணக்கிட்டு கோடை விடுமுறை விடக் கோருகிறோம். அடுத்த ஆண்டிற்குச் சனி, ஞாயிறு விடுமுறையாக விட்டு 220 நாட்கள் வேலை நாட்களாகக் கணக்கிட்டு "விடுதி ஜாபிதா" (Leave list) தயாரித்து அனுப்புவதை அங்கீகரித்து அதன்படி விடக் கோருகிறோம்.

(10) தற்கால நிலைமைக்குத் தக்கபடி 20 பிள்ளைகளுக்கு ஒரு ஆசிரியர் வீதம் பள்ளி ஆசிரியர்களை இருக்க அனுமதித்தல்.

**மாணவர் வருகையை உயர்த்த வழி :—1.** கட்டாயப்படிப்பு :— தொழிலாளிகள் ஏழைகள் அவர்கள் உழைப்புக்கு, தங்கள் குழந்தைகள் உதவி புரிகின்றனர். ஆதலால், பள்ளிக்கு அனுப்பச் சொல்வதை ஏற்றுக்கொள்வதில்லை. எனவே கட்டாயப் படிப்பு அவசியம். துருக்கி செய்த வழியைப் பின்பற்றவேண்டும். கட்டாயம் அல்லாது வருகையை உயர்த்துவது முடியாத காரியம்.

(2) தொழிற்சாலை முதல், கிராம சபை வரை தொடக்கப்பள்ளி படித்துத்தேர்ந்து உறுதிமொழிப் பத்திரம் கொண்டுவந்தால்அன்றிச் சேர்த்துக்கொள்ள முடியாது என்ற விதியை ஏற்படுத்த வேண்டும்.

(3) ஆசிரியர்களை மட்டும் வற்புறுத்துவதில் பிரயோசனமில்லை கிராம பஞ்சாயத்து மெம்பர்கள் முதல் சட்டசபை உறுப்பினர் முதலானவர்கள் பெற்றோர்களை அணுகிப் பிள்ளைகளை அனுப்ப ஏற்பாடு செய்தல். கிராமங்கள் தோறும் தேசத்தலைவர்கள் பிரசாரம் செய்ய வேண்டும்.

(4) பகல் உணவும், பலகை புத்தகங்களும் அரசியலார் கொடுத்துதவ வேண்டும்.

**திட்டத்திலுள்ள முக்கியமான குறை :—**

(1) தன்னரசு வந்த பிறகு படிப்பின் நோக்கம் வேறாகியுள்ளது. இக் கொள்கைக்கு ஏற்ப நாட்டின் வரவும், செலவும் மாறுபாடு அடைய வேண்டும். முந்தியிருந்த விகிதாசாரச் செலவில் கல்வி முன்னேற்றம் எங்ஙனம் அடையும்? ஆகவே, பணச் செலவுகள் அதே நிலையில் இருத்தல் கூடாது.

ஆசிரியர்களுடனே வறுமையும் பிறந்துள்ளது. பணமில்லை என்ற காரணம் பசிப்பிணியை அகற்றாது. முதலில் ஆசிரியர்கள் கவலையின்றி வாழ்க்கை நடத்த வேண்டும்.

(2) தற்போது பலவந்தப்படுத்தியுள்ள ஏற்பாட்டால் பள்ளிப் படிப்பு குறைவாகத்தான் உள்ளது. பாட திட்டப்படி முழுமையும் நடத்திவிட முடியாது. மற்றவேலைகளும் சரிவர செய்யக் கூடாத சூழ்நிலையே உள்ளது. எனவே காலையில் வேலை செய்த ஆசிரியர்கள் மாலையிலும், மாலையில் வேலை செய்த ஆசிரியர்கள் காலையிலும் புதிய கல்வித்திட்ட சம்மந்தமான இதர வேலைகளைக் கவனிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்?

ஆசிரியர்களுக்குக் குடும்ப வறுமை நிலை தன் மனத்தே தோன்றா வண்ணம் வழி வகை செய்தும் சுமக்கத்தக்க பொறுப்பை ஏற்படுத்தியும் தொண்டாற்ற விரும்பும் முறையில் திட்டமிட்டாலன்றி ஊதியத்தை ஏராளமாக உயர்த்திக் கொடுத்தாலும் இபபோதிருக்கும் திட்டத்தை அப்படியே நடத்தும்படி செய்தால் அது நடை முறையில் ஏட்டளவில் இருக்குமே ஒழிய பலன் ஏதும் காண முடியாது என்பது நிச்சயம்.

| | |
|---|---|
| கோவூர்:<br>பூந்தமல்லி வழி | **சி. பாலசுப்பிரமணியம்,**<br>தலைவர்<br>செங்கற்பட்டு ஜில்லா ஆ. ஆ. யூனியன். |

# சில புள்ளி விவரங்கள்

(தென்னுப்பிரிகா—டர்பன் திரு. ச. மு. பிள்ளை அவர்கள்)

## ஐரோப்பிய நாடுகளின் விஸ்தீரணமும் ஜனத்தொகையும்

| நாடு | விஸ்தீரணம் சதுரமைல் | ஜனத்தொகை |
|---|---|---|
| ஜெர்மனி (ஸ்லோவேகியா உள்பட) | 258,856 | 85,698,988 |
| போலந்து | 150,470 | 34,775,698 |
| கிரேட் பிரிட்டன் (வட ஐயர்லாந்து உள்பட) | 95,030 | 46,217,197 |
| ஐரே (ஐர்லாந்து) | 26,600 | 2,968,420 |
| பிரான்ஸ் | 212,659 | 41,905,968 |
| இத்தலி (அல்பேனியா உள்பட) | 130,393 | 43,996,726 |
| பெல்ஜியம் | 11,775 | 8,361,220 |
| பல்கேரியா | 39,825 | 6,077,939 |
| டென்மார்க் | 16,575 | 3,706,749 |
| எஸ்தோனியா | 18,353 | 1,126,413 |
| பின்லாந்து | 134,557 | 3,667,067 |
| க்ரீஸ் | 50,184 | 6,204,684 |
| ஹங்கேரி (ருதேனியா உள்பட) | 40,530 | 11,137,993 |
| ஹாலந்து | 12,704 | 8,639,595 |
| லாட்வியா | 25,395 | 1,950,502 |
| லிதூனியா | 20,400 | 2,397,008 |
| நார்வே | 124,556 | 2,814,194 |
| போர்த்துகல் | 35,490 | 6,825,883 |
| ருமேனியா | 113,881 | 19,535,398 |
| ருஷ்யா | 8,095,728 | 165,847,100 |
| ஸ்பெயின் | 190,050 | 24,583,096 |
| ஸ்வீடன் | 173,347 | 6,284,722 |
| ஸ்விட்ஜர்லாந்து | 15,944 | 4,200,000 |
| துருக்கி | 294,416 | 16,158,018 |
| யூகோஸ்லேவியா | 95,558 | 13,934,038 |
| டான்ஜிக் | 754 | 407,000 |

# Service Register

## CIRCULAR NO. 2-53 DATED 11-9-1953

SUB :—Ely Schools-Aided – Issue of T. S. Rs.– submission of application and particulars instructions issued.

It has been observed in the past few months that applications for the issue of Teachers' service registers are invariably returned to the managers for want of details in the applications. Hence the following instructions are brought to their notice.

(2) Every teacher (whether a trained or an untrained whether a craft teacher or a techer manager) working in an aided school shall get a Service register opened as soon as he joins the school if has not done already.

(3) The application shall be made *within a month* from the date of joining duty. If this period is exceeded grant will be assessed from the date of receipt of this application in the D. I's Office unless the delay is condoned by the competent authority.

(4) The application shall be in the prescribed form (i. e. Edl. B. 157) obtainable from this Office. Along with this application the following shall be enclosed.

(a) A chalan for annas twelve issued by a treasury in this state.

(b) A declaration from the teacher in the form given in Annexure No. 1 to this circular.

(c) A certificate from the manager to the effect that the date of birth, the general, professional, educational certificates Nos. noted in the application have been verified with the records produced by the teacher.

(d) A list of prominent marks of identification. This may be taken from the marks noted in the T. T. C. or S. S. L. C. No. of the teacher certified as true extract from the T. T. C. or S. S. L. C. No. of the teacher or if the teacher is an untrained or trained-but failed one a certificate of identification marks from a registered medical practitioner may be enclosed.

(e) The original T. T. C. in the case of fully certificated teachers or the relieving certificate issued by the training school in the case of trained but-failed teachers or the general educational certificate in the case of untrained teachers.

(f) A letter transmitting the above particulars.

(5) Each one of the items 4 b, c, and d, above may be on seperate sheet of paper.

## INSTRUCTION FOR FILLING IN THE FORM EDL. B. 157.

ITEMS 1 :—As in the certificates.

ITEM 3 :—To be in words.

ITEMS 4 :—As in the certificate.

ITEMS 8 & 9 :—Certificate No. to be invariably noted under each. If untrained or trained - but - failed the fact to be noted. (vide N. B. at the end of the printed form).

ITEM 10 :—Along with the years of training the name of the institution also to be given; then the year of passing.

ITEMS 11:—In the case of teachers trained under the new scheme this need not be filled but the year of passing may be noted.

**ITEMS 12** :—Correct particulars to be noted. *The date of joining the school must be entered here.* After this entry is made the period in months or days (to the date of application) must be entered in brackets.

**ITEMS 13** :—Here the name of the institution in which the teacher is now-working and the date from which he is working shall be noted.

In the certificate to be signed by the teacher in the printed form for the number "8" the number "12" may be inserted.

The certificate must be signed by the teacher and dated.

## ANNEXURE 1.

Declaration to be given by the teacher.

I..............................teacher in the........... ..............................hereby declare that I have not applied for the issue of a T. S. R. either in this range or in any other at any time. This is the first occasion I am applying for one.

*Signature of the teacher with date.*

## CERTIFICATE TO BE GIVEN BY THE MANAGER

I certify that the date of birth and the details regarding the general and professional qualifications entered against items 3, 8 & 9 of the application form have been verified with the entries made in the respective certificates and are found to be correct.

*Signature of the Manager or Correspondent with date*

## LIST OF IDENTIFICATION MARKS

List of Identification marks of Sri....................... (please give two marks vissible clearly and prominently.)

1. ...................
2. ...................

"True extract from the T. T. C. No. or S. S. L. C. No. of Sri.............................".

*Signature of Manager with date.*

OR

(In the case of certificate from a Registered Medical Practitioner the following form is suggested.)

Sri/Smt/Kmr.....................................teacher in .............................Elementary School,.................. ..................bears the following identification marks.

1. ......................

2. ......................

*Signature of the Doctor with his register number etc. and date.*

CIRCULAR NO. 2 (a)/53 DATED 12-9-1953.

Sub :—Elementary Schools – Aided – Issue of T. S. Rs. submission of application for condonation for the delay – Instruction given.

If application for the issue of a T. S. R. on behalf of any teacher is not made within one month from the date of joining duty (vide para 3 of Circular No. 2/53 dated 11-9-1953) application for condonation of the delay shall be submitted in the form given below along with the application for T. S. R. This should be in triplicate.

*Deputy Inspector of Schools,..............Range.*

# APPLICATION FOR CONDONATION OF BELATED SUBMISSION OF APPLICATION FOR THE ISSUE OF T. S. R. ON BEHALF OF.............

..............................

---

1. Name of the Teacher.
2. Name of the School in which employed.
3. Date of joining the school mentioned in Col. 2.
4. Date of application for the issue of T. S. R.
5. Date on which the cost of T.S.R. was remitted into the treasury in the 1st instance.
6. Date on which the application for issue of T S.R. was received by the Deputy Inspector of Schools.
7. Period of delay to be condoned (grace period of one month to be excluded.)
8. Reason & explanation for the delay noted in Col. 7 (Ignorance of rule cannot be accepted as a satisfactory reason.)

N. B. :—Explanation of the Manager or Correspondent for the belated submission of the application should be obtained and submitted)

*Signature of the Manager or Correspondent.*

9. Recommendations of the Deputy Inspector of School for sanction of condonation.

Deputy Inspector of Schools,........Range.

# ஆசிரிய மானேஜர்கள், மானேஜர்கள் சங்கம்

## செய்யாறு தாலுக்கா (வட ஆற்காடு)

இச் சங்கம் 20-12-53 அன்று ரேஞ்சு கல்வித் தலைவர் ஸ்ரீ. D. ராகவன், B.A., B.T. அவர்களின் தலைமையில் கூட்டம் கூடியது.

அடியிற் கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டன:

1. மாதாந்திர கிராண்டு :—ஒவ்வொரு மாத கிராண்டையும் அதற் கடுத்தமாத 15 தேதிக்குள் பட்டுவாடா செய்யப்படும் என்று சர்க்கார் அவர்கள் உத்திரவு பிறப்பித்துள்ளதற்கு இச் சங்கம் மிக்க மகிழ்ச்சியுடன் பாராட்டுகிறது.

2. 1953 ஆம் வருஷத்தில் வேலை செய்துள்ள எல்லா பாடசாலை களின் (Untrained) அன்டிரையிண்டு ஆசிரியர்களுக்கும் நிய மனத் தேதி முதல் உடனடியாக தவிர்ப்பு (Exemption) கொடுத்து 1953 Final, இன்ஸ்டால் மெண்டுடன் சேர்த்து கிராண்டு வழங்க வேணுமாய் வட்ட மாவட்ட கல்வித் தலைவர் களை இச் சங்கம் கேட்டுக் கொள்ளுகிறது.

3. அன்டிரையிண்டு ஆசிரியர்களுக்கு தவிர்ப்பு பெறுவதற்கு முன் னதாக; முன் அனுமதி (பர்மிஷன்) பெருதல் என்பதை ரேஞ்சு கல்வித் தலைவர் அவர்களிடம் அதிகாரம் கொடுக்க வேணுமாய் இச்சங்கம் கேட்டுக்கொள்ளுகிறது.

4. சர்க்கார், போர்டு, எயிடெட் என்ற ஸ்தாபன ஆசிரியர்களுக்கு ஒவ்வொரு விதமான சம்பள வித்தியாசங்களிருப்பதால் எயி டெட் பாடசாலைகள் மிகவும் பாதிக்கப்படுகின்றன. ஆகையால் ஜில்லா போர்டு பாடசாலை ஆசிரியர்களின் சம்பள விகிதமே எயிடெட் பாடசாலை ஆசிரியர்களுக்கும் கொடுத்தாக வேணு மாய் இச் சங்கம் வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறது.

5. தற்காலிக அங்கீகாரம் பெற்று தொடர்ச்சியாக நடந்து மூன்று வருஷ காலம் பூர்த்தியான உடனே, அவ்வித பாடசாலைகளுக்கு நிரந்தரமான அங்கீகாரம் கொடுத்தாக வேணுமாய் இச் சங்கம் கேட்டுக்கொள்ளுகிறது.

**V. M. கோவிந்தராஜன்,**

*காரியதரிசி.*

## ஆசிரிய மானேஜர்கள், மானேஜர்கள் சங்கம்
### (சேலம் ஜில்லா — 15-12-53)

சேலம் ஜில்லா எயிடெட் ஆரம்பப் பாடசாலைகளின் மானேஜர், ஆசிரிய மானேஜர்கள் சங்க சார்பாக அதன் தலைவர் திரு. N. ராம ராவ் B. A; காரியதரிசிகள் திரு. S. R. பொன்னுசாமி அய்யா, திரு. S. R. அனந்தநாராயணன் ஆகிய மூவரும் இன்று சேலத்தில் கல்வி இலாகா டைரக்டர் அவர்களைப் பேட்டி கண்டு கீழ்க்கண்டவை களை எடுத்துக் கூறினர். ஆசிரியர்களை புதிதாக நியமனம் செய்யு முன் கல்வி இலாகாவின் அனுமதி பெற்றுத்தான் செய்ய வேண்டு மென்பது நடைமுறையில் பல அசௌகரியங்களைக் கொடுப்பதால் மானேஜ்மெண்டே சராசரி ஆசிரியருக்குத் தகுந்தவாறு நியமித்துக் கொள்ளும் சுதந்திரம் இருக்க வேண்டியதின் அவசியம் கூறப்பட் டது. நிர்வாகக் கிராண்டு கணக்கிடுவதில் சேர்த்துக்கொள்ளும் செலவினங்களைப் பற்றிய தகவலை மானேஜர்களுக்கு அறிவிக்க வேண்டுவதுடன், ஆசிரியர்களுக்கு கொடுக்கப் படும் சம்பளச் செலவில் தற்பொழுது கிராண்டுக்கு மேல் கொடுக்கப் படுவதில் ரூபாய் மூன்று மட்டும் கணக்கில் எடுத்துக்கொள்ளாமல் ஆசிரியர்கட்கு கிராண்டுக்கு மேல் மானேஜ்மெண்டால் கொடுக்கப் படும் சம்பளத் தொகை முழுவதையும் சம்பளச் செலவுக் கணக்கில் சேர்த்துக்கொள்ளுமாறு கூறப்பட்டது. டைரக்டர் அவர்கள் பொறுமையாகக் கேட்டு இவைகளை கவனிப்பதாகக் கூறினார்.

**S. R. அனந்தநாருயணன்,**

*காரியதரிசி.*

## இந்த விஷயம் தெரியுமா!

### ராஜாஜியின் மற்ருெரு அசகாய வேலை அம்பலம்

ராஜாஜியின் கல்வித் திட்டத்தை விசாரிக்க ஒரு கமிட்டி போடப்பட்டதல்லவா? இக் கமிட்டிக்கு தலைவர் ஸ்ரீ. ஆர். வி. பாரு லேகர்; இவர் யாரென சில விவரங்களைக் கூறுகிறேம். பிறகு இவர்தான் திட்டத்தை பாராட்டியிருக்கிறுர் என்ற செய்தியை நீங் கள் சரிவரப் புரியலாம்.

ஸ்ரீ. பாருலேகர் "அரை நாள் படிப்பு போதும்" என்ற கொள் கையை கிளர்ச்சியாக பல்லாண்டுகள் நடத்தி வருகிறவர். இது சம்பந்தமாக அவர் **"Half-a-day Off"** என ஒரு புஸ்தகமே

எழுதியிருக்கிறார். இந்த புஸ்தகம் பம்பாயில் பிரசுரமாயிருக்கிறது. அதில் பிள்ளைகள் அரைநாள் படித்தாலே போதும் என்பது இவரது வாதம்.

இந்த நடுநிலைமை வாதிதான் ராஜாஜியின் அரைநாள் படிப்பு— அரை நாள் ஆடுமாடு மேய்க்கிற திட்டத்தை விசாரிக்க வந்தது.

ஆகவே இனி மற்றவற்றை நீங்களே புரிந்து கொள்ளலாம்.

இப் புஸ்தகம் வேண்டுவோர் பம்பாயிலுள்ள எந்தப் புஸ்தகக் கடைக்கு எழுதினாலும் வாங்கலாம். ஏனென்றால் கட்டுக் கட்டாக கஸ்ரியானின் ஜீரணத்துக்காக அங்கு கட்டி வைத்திருக்கிறார்கள். சிரிக்காதீர்கள் ! உண்மைதான் !

(பேரிகை.)

---

## அறிஞர் வாயுறை

செல்வத்தைப் பிறருக்காக நல் வழியில் வாரி இறைப்பவனைப் போல் வேறு எவர்க்கும் செல்வம் அதிமாகத் தேவையில்லை.

—ரிக்டர்.

தன்னை அடக்கப் பழகிக்கொண்டவன் புறத்தேயுள்ள எதற்கும் வசப்பட்டவனல்ல; அத்தகையவனே நன்கு வாழத் தெரிந்தவன்.

-விவேகானந்தர்.

சொன்ன சொல் தவறாதவன் தேவர்களுக்கு ஒப்பானவன். அவனைப் பலர் அண்டிக் கொண்டிருப்பார்கள்.

—எட்வி.

தாழ்மை என்பது கனவானுக்கும், சுய மதிப்பு என்பது ஏழை மனிதனுக்கும் ஏற்ற அணிகலனாகும்.

—எட்கார்.

உலகில் இன்பத்தைப் பரப்ப நினைக்கின்றவன் தான் சிறிது கசப்பை அனுபவிக்க ஆயத்தமாயிருக்க வேண்டும்.

—ராபின்.

# வெற்றிலை போடுங்கள்

பற்களைப் பீடித்திருக்கும் சகல வியாதிகளையும் போக்கும் சஞ்சீவி மருந்து இவைகள் என்று விளம்பரப்படுத்தப்படும் பற்பசைகளை உபயோகித்து ஏமாந்தவர்கள் நம்மில் பலர். பணத்திற்குப் பணம் நஷ்டம்; பற்களுக்கும் கெடுதல் அநேகம். அநாவசியமாக ஏராளமான பணம் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதியாவதுதான் மிச்சம். காசு அதிகச் செலவில்லாமல் பற்களைப் பாதுகாப்பதற்கும், ஆரோக்கியத்தை வளர்ப்பதற்கும் ஒரு வழி இருக்கிறது. சுலபமான வழி. அதிகச் செலவில்லை. ஆரோக்கியத்துக்கு ஆரோக்கியமும் அழகுக்கு அழகு.

'வெற்றிலையைப் போட்டுக் கண்ட கண்ட இடங்களில் துப்புகிறார்கள் சார் இந்த அநாகரிகம் பிடித்தவர்கள்' என்று பல தடவை சொல்லக் கேட்டிருக்கிறோம். என்ன சொன்னாலும் அவர்கள் வெற்றிலை போட்டுக் கொள்வதை நிறுத்தவும் இல்லை, துப்புவதை விட்டபாடும் இல்லை. வெற்றிலை போடும் பழக்கம் கீழ் நாட்டு மக்களிடையே பல நூற்றாண்டுகளாகப்பழக்கத்திலிருந்து வருகிறது. பல்லை வெள்ளையாக வைத்துக் கொள்வதற்காகவும், கண்ட இடங்களில் துப்பாமல் இருப்பதற்காகவும் இப்பொழுது நம் நாட்டில் வெற்றிலை உபயோகிக்கும் பழக்கம் குறைந்து வருகிறது. குறைந்து வருவது ஒரு சுபசகுணம் இல்லை. உடல் நலம் குறைந்து வருகிறது; வாய் நாற்றம் பெருகி வருகிறது; பல்களும் வேண்டிய அளவு பிடுங்கப்பட்டு வருகின்றன; பல் வைத்தியர்களும் பெருகி வருகிறார்கள். ஏனைய நாடுகளைக் காட்டிலும் நம் நாட்டில் பல் வியாதி குறைவு என்பதை ஞாபகப்படுத்திக்கொள்ள வேண்டும்.

வெற்றிலை போடாத இவர்கள் பல்லைச் சுத்தமாக, வெண்மையாக வைத்துக் கொள்வதற்காக வெளி நாடுகளில் இருந்து பெரிய தடபுடலான விளம்பரங்கள் பெற்ற பல் பசைகளைக் கொண்டு, 'உயர்தரமான' பிரஷ்களால் பல் விளக்கி வருகிறார்கள். அவர்கள் கண்ட பலன் வெகு சீக்கிரம் பல் வலி வந்து உடனே டாக்டரிடம் போய் டாக்டர் மூலம் பல்லைப் பிடுங்கி 'நகல்' பல் வைத்துக் கொண்டது தான். இப்பொழுது வரும் பல் பசைகளில் 'குளோரோபில்' சேர்ப்பதாகவும் அதனால் வாய் நாற்றம் போகும் என்றும் விளம்பரம் செய்யப்படுகிறது. 'குளோரோபில்' சேர்ந்த பல் பசை இப்பொழுது ஏராளமான விற்பனை... நம் பல் சுத்தமாக இருப்பதற்கும், வாய் நாற்றம் இல்லாமல் இருப்பதற்காகவும் ஒவ்வொரு வருஷமும் கோடிக் கணக்கான

ரூபாய்கள் வெளி நாடுகளுக்கு, பல்பசை, பல்பொடி, பிரஷ்கள் வாங்குவதற்காகப் போய்க் கொண்டிருக்கின்றன.

வாய் நாற்றம் இருப்பவர்களிடம் சாதாரணமாக மற்றவர்கள், 'நீங்கள் வெற்றிலை போடுங்கள்; வாய் நாற்றம் போகும்' என்று சொல்வதை நாம் அறிவோம். அவர்களுக்கு வெற்றிலையிலே இயற்கையான 'குளோரோபில்' இருக்கிறது என்பதை அறிந்து அவர்கள் சொல்லவில்லை. நீண்ட காலப் பழக்கத்தில் வெற்றிலை சாப்பிடுவது இருந்து வருவது ஒன்றேதான்.

வெற்றிலையிலுள்ள சத்து பற்றிச் சொல்லிவிட்டு நான் விடை பெற்றுக் கொள்கிறேன்.

| சத்து விபரம் | வெற்றிலை | முட்டை கோஸ் |
|---|---|---|
| புரொட்டின் | 3·07 | 1·75 |
| கொழுப்பு | 0·08 | 0·11 |
| தாதுப்பொருள் | 2·25 | 0·61 |
| எரிபொருள் | 6·14 | 6·38 |
| கால்சியம் | 0.227 | 0·034 |
| இரும்பு | 5·74 | 0·076 |
| 100 கிராமில் உள்ள காலோரி | 44·0 | 33·5 |
| வைட்டமின் A | 9·635 | 2000 |
| „ C | 3·8 | 124·2 |

நிறையச் சத்து இருப்பதாக நாம் வாங்கிச் சாப்பிடும் முட்டைக் கோஸ் கீரையைக் காட்டிலும் எல்லா வகையினும் அதிகமாகச் சத்துப்பொருள் இருக்கிறது வெற்றிலையில்.

வெற்றிலைச் சாறு உடம்பில் சேருவதால் கபம், சீதளம், காணுக் கடியின் துர்க்குணம், திரிதோஷகோபம் இவைகள் ஒழியும் என்று குணபாடம் கூறுகிறது.

இதை எல்லாம் பார்த்துவிட்டு 'சிலர் நாள் பூராவும் வெற்றிலையை மென்று கொண்டிருப்பார்களே', அவர்களைப் போல நாமும் மெல்லலாம் என்று நினைத்து விடாதீர்கள். தினம் இரண்டு மூன்று முறை வெற்றிலை போடலாம். வெற்றிலை போட்ட கொஞ்ச நேரத்தில் நன்றாக வாயைக் கொப்பளிக்க வேண்டும். வாய் கொப்பளிக்காவிட்டால் பல் இடுக்குகளில் பாக்குத் துண்டு மாட்டிக்கொள்ளும். குச்சி எடுத்து குத்துவீர்கள். பிறகு பல் வலி—இத்யாதி பல் வைத்தியருக்கு யோகம்! உங்கள் வாயும் பொக்கைவாய் ஆகும்! ஜாக்கிரதை! (சக்தி)

# உலகத்தில் பெரியது!

உலகில் உயர்ந்த மலை இந்தியாவின் 'இமயம்'; பெரிதும் அகண்டு பரந்த பாலைவனம் ஆப்ரிக்காவின் 'சகாரா'; நீண்டு செல்லும் ஜீவ நதி வட அமெரிக்காவில் உள்ள வற்றாத 'மிஸௌரி' 'மிஸிஸிபி' உலகின் உன்னத கடற்கரை 'ரெடியோ ஜெனிரோ' என்றெல்லாம் சொல்கிறோமே, அந்தப் பட்டியலிலே சேர்ந்துள்ள இன்னும் சில...

* * *

உலகத்திலேயே மிக உயரமான கட்டிடம் எது தெரியுமா? நியூயார்க்கில் உள்ள 'எம்பயர் ஸ்டேட் கட்டிடம்'தான். இந்தக் கட்டிடம் தரை மட்டத்திற்குக் கீழே இரண்டு அடுக்குகளும், வீதியின் மேலே வான் நோக்கி உயர்ந்து 102 மாடிகளுமாக நிற்கின்றது; ஆம்; 102 மாடிகள்தான்! நூற்றிரண்டாவது மாடி மீது இருந்து கொண்டு வீதியில் விரைந்து செல்லும் 'கார்'களைப் பார்த்தால் நண்டுகள் நகர்வதுபோல் இருக்குமாம்!

* * *

உலகிலேயே மிகப்பெரிய துறைமுகம் நியூயார்க் துறைமுகம். முன்னூற்று ஏழு மைல் நீண்டு செல்லும் இந்தத் துறைமுகத்திலே 180 பாலங்கள் இருக்கின்றன!

* * *

உலகில் பெரிய பல்கலைக் கழகம்—அதுவும் அமெரிக்காவில்தான்—கலிபோர்னியா' மாகாணத்தில் இருக்கிறது. இதன் மொத்தப் பரப்பு 10,404 ஏக்கர்கள். இதில் வகுப்பு நடக்கும் கட்டிடங்கள் வியாபித்துள்ள இடப்பரப்பு 41 ஏக்கர்கள். இந்த நிலப்பரப்பில் 540 கட்டிடங்கள் இருக்கின்றன. சுமார் 45 ஆயிரம் மாணவர்கள் கல்வி கற்கின்றனர். அவர்களுக்காக பல துறையைச் சேர்ந்த 3235 ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த பிரம்மாண்டமான பல்கலைக் கழகத்திற்கு, ஓராண்டு செலவு எவ்வளவு தெரியுமா? சுமார் 20 கோடி ரூபாய்!

* * *

உலகிலேயே பவளம் அதிகமாகக் கிடைக்கும் இடம், 'ஆஸ்திரேலியாவின் மகா பிரவாள நிலையம்' என வழங்கும், ஆஸ்திரேலிய கடற்கரை வெளியில்தான்! இங்கே 1250 மைல்களுக்கு மேல் பவளத் தீவுகள் கரையை ஒட்டி நீண்டு செல்கின்றன!

* * *

உலகத்திலேயே சிறந்த பெரியகடை நியூயார்க் நகரில் உள்ள 'மேசீஸ்' கடைதான். இந்தக் கடையில் பிளாஸ்டிக் பொத்தான்

முதல் ஆகாய விமானம் வரை அனைத்தும் கிடைக்கும்! ஏன்? சக்கரம் வைத்த 'ரெடி மேட்' வீடுகூட கிடைக்கும்! இங்கு தினந் தினம் நாற்பத்தைந்து லட்சம் ரூபாயிலிருந்து ஐம்பது லட்சம் வரை வியாபாரம் நடை பெறுகிறது! ஒரு கடைத் தெருவையே தன்னுள் அடக்கி வைத்திருக்கும் இந்த கடைக்கு விளம்பரத்திற்காக மட்டும் வருடத்தில் 150 லட்ச ரூபாய் செலவிடுகிறார்களாம்!

* * *

உலகத்திலேயே பெரிய ஹோட்டல் ஜெர்மனியைச் சேர்ந்த 'அஸ்டர்' குடும்பத்தாரின் 'வால்டார்ப் ஆஸ்டோரியா' என்பது. இதுவும் அமெரிக்காவில்தான் இருக்கிறது. நாற்பத்தேழு மாடிகள் கொண்ட இந்த ஓட்டல் உலகத்திலேயேதலை சிறந்து விளங்குகிறது!

* * *

உலகில் மிகப் பெரிய தியேட்டர் நியூயார்க்கில் உள்ளது. 'ரேடியோ சிட்டி மியூசிக் ஹால்' என்ற அந்த தியேட்டருக்கு 64 வாயில்கள் இருக்கின்றன! அந்த அழகிய சித்திர வேலை மிகுந்த ஹாலில், 6200 பேர் உட்கார வசதி யிருக்கிறது!

* * *

அதெல்லாம் இருக்கட்டும்; உலகத்திலேயே மிக நீளமான வாக்கியம் யார் எழுதி இருக்கிறது தெரியுமா? 'மார்ஸேல்ஸ்' நகரின் மாணிக்கம் விக்டர் ஹியூகோதான். அவர் எழுதிய 'ஏழை படும் பாடு' என்னும் புத்தகத்தில் தான் உலகிலேயே நீளமான ஆங்கில வாக்கியம் வருகிறது. அந்த வாக்கியத்தில் 823 வார்த்தைகள் இருக்கின்றன! காமாவும் செமிக் கோலனும் போட்டு வாக்கியத்தை முடிக்காமலே இரண்டு பக்கத்தைக் கடந்து மூன்றுவது பக்கத்தில் கொண்டுபோய் முடிக்கிறார்!

* * *

உலகத்திலேயே நாம் வேறெங்கும் பார்க்க முடியாத விசித்திரமான மூன்று ஏரிகளை, தற்போது விடுதலை பெற்றுள்ள இந்தோனேஷியாவில் காணலாம். இந்தோனேஷியாவைச் சேர்ந்த 'ப்ளோரஸ்' என்னும் தீவில்தான் இந்த மூன்று ஏரிகளும் இருக்கின்றன. ஒன்று பச்சை நிறம், மற்றொன்றின் நீல நிறம், பிறிதொன்று சிவப்பு! இயற்கையின் விசித்திரமான வர்ண ஜாலங்கள்!

* * *

உலகத்திலேயே அதிக மதிப்பு வாய்ந்த தபால் தலை ஒன்று இருக்கிறது. இப்போது அதை யாரோ ஊர்பேர் தெரியாத ஒரு

கலெக்டர் 1,03,000 ரூபாய்க்கு வாங்கிக் கொண்டு போய்விட்டாராம் இது 'பிரிட்டிஷ் கியான'வைச் சேர்ந்த பழைய ஒரு 'சென்ட்' தபால் தலை! இதை ஒரு பள்ளிக்கூடப் பையன், 'மெக்கின்னன்' என்ற அந்த ஊர் கலெக்டருக்கு நான்கு ரூபாய்க்கு விற்று விட்டானும். இப்படி கைமாறிக் கொண்டே அந்த தபால் தலை பிரெஞ்சு சர்க்காரிடம் வந்து சேர்ந்தது. அதை முதல் உலக மகா யுத்தத்திற்குப் பின் அவர்கள் ஏலத்தில் விட்டார்கள். அப்போது அந்த தபால் தலை எவ்வளவு விலை போயிற்று தெரியுமா? ஒரு லட்சம் ரூபாய்! வாங்கியவர் ஆர்தர் ஹிண்ட் என்ற ஒரு அமெரிக்கர். அவர் இறந்தபின் மறுபடியும் அதை விற்று விட்டார்கள். இப்போது அந்த மதிப்பு வாய்ந்த தபால் தலை, யாரோ ஊர்பேர் தெரியாத ஒரு கலெக்டரிடம் இருக்கின்றதாம்!

*　　　　*　　　　*

இத்தனை உலகப் பிரசித்திபெற்ற விஷயங்களும் மேலை நாடுகளில் மட்டும்தான் இருக்கின்றன என்று கருதிவிட வேண்டாம். நம் நாட்டிலும் நிறைய இருக்கின்றன. அவற்றுள் ஒன்று—வட இந்தியாவில், ஓ. டி. ரெயில்வேயைச் சேர்ந்த 'சோன்பூர்' எனும் ஸ்டேஷன் பிளாட்பாரம் உலகிலேயே மிகப் பெரியதாகும். இந்தப் பிளாட்பாரத்தின் நீளம் 2415 அடிகள்!

---

## அறிஞர் வாயுறை

பணத்தை விடப் பணத்தினுல் விளையும் பயன்களே மிக மதிப்புடையவை. இதை உணர்ந்த எவனும் தனக்கு மிஞ்சிய பணத்தை, தனக்குத் தானே சேர்த்து வைத்துக் கொள்ள மாட்டான்.

—அன்னேன்.

அறிஞனின் சொல்லைக் கேட்காதவன் கூட அழகியின் சொல்லைக் கேட்பது கூடும். ஆகவே அழகியின் வாழ்க்கையிலும்; சொற்களிலும் உயர்ந்த லட்சியங்கள் பிரதிபலிக்க வேண்டும்.

—மொசி.

கயவனைப் பக்தனுக்கவும், பக்தனைக் கயவனுக்கவும் நூல்களே பெரிதும் காரணமாயிருக்கின்றன.

—யங்.

காதலை மனிதன் தனது மனேசக்திக்குக் கீழ்ப்படுத்த வேண்டும். அப்படி கீழ்ப் படுத்தாதவனே காதலால் துன்பமடைகிறுன்.

—ராபின்

(16-ம் பக்கத் தொடர்ச்சி)

டெபாசிட்டைக்கூட பெறமுடியாமல் படுதோல்வி அடைவது நிச்சயம்'' என்று காங்கிரஸ் எம். எல். ஏ. ஆகிய திருவாளர் கோசல்ராம், டிசம்பர் 17-ம் தேதியன்று சென்னை சட்டசபையில் இடிமுழக்கம் புரிந்திருக்கிருர். காங்கிரஸ் உறுப்பினராக இருந்தும் தோழர் கோசல்ராம் இவ்வளவு பட்டவர்த்தனமாகப் பேசியிருப்பது காங்கிரஸ் வட்டாரத்தில் பெரிய பரபரப்பை உண்டாக்கியிருக்கிறது.

* * *

அமெரிக்காவும் பாகிஸ்தானும் செய்து கொள்ளப் போவதாகச் சொல்லப்படும் இராணுவ ஒப்பந்தத்துக்கு எதிராகப் பொதுமக்களின் கருத்தை ஒன்று திரட்ட வேண்டுமென்று, அகில இந்திய காங்கிரஸ் குழுவின் செயலாளர், மாநிலக் காங்கிரஸ் குழுக்களுக்கு ஓர் சுற்றறிக்கை அனுப்பி இருக்கிருர் என்று தெரிய வருகிறது.

* * *

வேலூர் நகராட்சி மன்றம், சென்னை திரு ஒற்றியூர் ஊராட்சி மன்றம் ஆகிய இரண்டும், தத்தமது எல்லைக்குள் நிலைநாட்டப்பட இருக்கும் காந்தியடிகளின் சிலையைத் திறந்து வைக்கும்படி திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்களைக் கேட்டுக் கொண்டிருக்கின்றன.

* * *

சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரி தொடங்கப்பட்டு இரு நூறு ஆண்டுகள் ஆகின்றன. அந்த ஆஸ்பத்திரியின் இரண்டாவது நூற்றுண்டு விழா டிசம்பர் 19-ம் நாளன்று, சென்னையில் மிகச் சிறப்பாக நடத்தப்பட்டது. சென்னை கவர்னர் விழாவைத் தொடங்கி வைத்து விரிவுரை ஆற்றுகையில் அந்த மருந்தகம் செய்துவரும் தொண்டுகளை மிகவும் பாராட்டினுர். ஆசியாக் கண்டத்தில் உள்ள தலைசிறந்த ஆஸ்பத்திரிகளில் ஜெனரல் ஆஸ்பத்திரி முக்கியமானது என்பதை விழாவில் கலந்துகொண்ட பலரும் சுட்டிக் காட்டிச் சொற்பொழிவாற்றினர்.

* * *

மத்திய அரசாங்கத்தில் கனம் ஆச்சாரியார் உள்நாட்டுத்துறை அமைச்சராகப் பணியாற்றிய காலத்தில் அவரால் அங்கு கொண்டு வந்து நிறைவேற்றப் பட்டதும், பத்திரிகைகளின் எழுத்துரிமையை மட்டுப்படுத்தும் தன்மை படைத்ததுமாகிய பத்திரிகைச் சட்டத்தின் ஆயுளை மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீடிப்பது என்று இந்திய அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

* * *

இலங்கையில் உள்ள இந்தியர்களுடைய பிரஜா உரிமைப் பிரச்சினைகளைப்பற்றி இந்தியாவின் முதலமைச்சர் பண்டித நேருவுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக இலங்கையின் முதலமைச்சர் சர் ஜான் கொத்தல

வாலா, கல்வி அமைச்சர் பண்டா ஆகிய இருவரும் ஜனவரி 16–ம் நாளன்று டில்லிக்கு வர இருக்கிறார்கள்.

* * *

கோவை மாவட்டத்தின் அமராவதி அணைக்கட்டுத் திட்ட வேலை டிசம்பர் 10–ம் நாளன்று தொடங்கப்பட்டிருக்கிறது. அந்த மாவட்டத்தின் குறுக்கே ஓடுகிற அமராவதி ஆற்றைத் தடுத்து 3275 அடி நீளமுள்ள அணைக் கட்டு ஒன்றைக் கட்டுவது என்றும், அப்படிக் கட்டப்படுகிற அணைக்கட்டின் விளைவாக உருவாகிற நீர்த்தேக்கத்தின் கன அளவு 300 கோடி கன அடியாக இருக்கவேண்டும் என்றும் சென்னை அரசாங்கத்தால் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இந்த அணைக்கட்டுத் திட்டம் முற்றிலும் கட்டி முடிக்கப்பட்டால் அதன் மொத்த செலவு 27 கோடியே 23 லட்சம் ஆகும் என்றும், இந்த நீர்த் தேக்கத்தின் விளைவாக 7500 ஏக்கர் நன்செய் நிலத்திற்கும், 7500 ஏக்கர் புன்செய் நிலத்திற்கும் நீர்ப்பாசன வசதி கிடைக்கும் என்றும் பொறி இயல் வல்லுநர்கள் அறிவிக்கிறார்கள்.

* * *

டில்லியில் உள்ள தென்னிந்தியர்கள், அங்கே உள்ள அவர்களுடைய பள்ளிக்கூடம் ஒன்றிற்கு நிதி சேர்ப்பதற்காக, டிசம்பர் மாதத் தொடக்கத்தில், ஒரு வார காலம், தென் இந்தியக் கலைவாணர்களை பலரை அழைத்து, நாடகம் — நடனம் — இசை முதலிய இன்சுவை நிகழ்ச்சிகள் பலவற்றைச் சிறப்புற நடத்தினர். அந்த விழாவில் தன் நாடகம் ஒன்றை நடத்திக் காட்டிய நகைச் சுவை அரசர் என். எஸ். கிருஷ்ணன், தென் இந்திய மக்களுக்கு வட இந்தியக் கலைகள், கலைவாணர்கள், படங்கள் ஆகியவற்றின்மீதுள்ள அளவு பற்றோ பரிவோ பாசமோ வட இந்திய மக்களுக்கு தென் இந்தியக் கலைகள், கலைவாணர்கள், படங்கள் ஆகியவற்றின் மீது இல்லையே என்பதை மிகுந்த வருத்தத்துடன் குறிப்பிட்டார். “தென் இந்தியாவில் உள்ள எத்தனையோ தியேட்டர்களில் தினந்தோறும் எத்தனையோ ஹிந்திப் படங்கள் தவறாமல் காட்டப்பட்டு வருகின்றன. ஆனால் அது போல வட இந்தியாவில் எந்தத் தியேட்டரிலாவது தமிழ் அல்லது தெலுங்குப் படம் காட்டப் படுகிறதா என்று பார்த்தால் ஒரே ஒரு படம்கூட காட்டப் படுவதில்லை. வட இந்தியாவில் தப்பித்தவறி எங்கேயாவது ஒரு தென்னிந்திய மொழிப்படம் காட்டப்படுமானால், அந்தப் பகுதி, தென்னிந்தியர்கள் வசிக்கிற பகுதியாக இருக்கும். அதுவும் ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டும்தான் அப்படி காட்டப் படும். வட இந்திய மொழிப் படங்களைத் தென் இந்தியர்கள் ஆவலுடன் கண்டு களிப்பது போல, தென் இந்திய மொழிப் படங்களை வட இந்தியர்கள் பார்ப்பது கிடையாது” என்று குறிப்பிட்டார் கலைவாணர் கிருஷ்ணன்,

11 JAN 1956
MADRAS

# கர்வம்

## பின் வீழ்ச்சி

கர்வம் என்ற பேய் லட்சக் கணக்கான மக்களை வீழ்ச்சியடையச் செய்கிறது. வானுலகில் சஞ்சரித்த லூசிபர் என்னும் தேவ தூதன் பேயானதற்குக் காரணம், அவன் தன்னுடைய அழகைக் குறித்துக் கர்வம் கொண்டான் என்று பைபிள் கூறுகிறது. அநேகர் தங்களுக்கு அபாரத் திறமைகள் இருப்பதாக மமதை கொள்கிறார்கள். ஒரு அறிஞர் பின்வரும் புத்தி மதியைச் சொல்கிறார்.

"எவனுகிலும் தன்னைப்பற்றி எண்ண வேண்டியதற்கு மிஞ்சி எண்ணிக் கொள்ளாமல், நிதானமாய் எண்ணிக் கொள்ளக்கடவன்."

தங்கள் உண்மையான மதிப்பு எவ்வளவு தான் என்று நிதானிப்பது பொதுவாக மனிதருக்குக் கஷ்டமாகத்தான் இருக்கும். என்றாலும் ஒவ்வொருவரும் தீர யோசித்து, தங்கள் உண்மை மதிப்பைஅறிந்துகொள்வது அவசியம். நாம் எல்லாரிலும் தாழ்ந்தவர்கள் என்ற எண்ணத்திற்கும் இடையில் நின்று, நிதான பாதையிலே செல்ல வேண்டும்.

குழந்தை பொய் சொன்னாலும், திருடினாலும் பெற்றோருக்குக் கடுங்கோபம் வந்து விடுகிறது. ஆனால் அவனிடத்திலே கர்வம் தோன்றும் போது, அவர் அதைக் குற்றமாக எண்ணுவதில்லை. சில சமயம் அதை ஊக்கி விடுகிறார்கள்.

ஒரு சிறு குழந்தையைக் கண்டதும், "ஓ, நீ எவ்வளவு அழகாக இருக்கிறாய்?" என்று பலர் சொல்வதுண்டு. இந்த முகஸ்துதியே சில குழந்தைகளின் மனத்திலே தற்பெருமையையும் கர்வத்தையும் வளர்த்து விடுகிறது. ஒரு குழந்தைக்குக் கேசம் சுருட்டையாக இருக்குமானால், அதைப்பற்றி மெச்சிப் பேச வேண்டாம். சுருளான கேசத்தைப் போல, நீண்ட கேசமும் அழகாகத் தான் இருக்கிறது என்று அப்படிப்பட்ட குழந்தையின் மனதிலே படும்படி செய்ய வேண்டும். சிறு வயதில் குழந்தை உள்ளத்தில் எத்தகைய பண்புகள் உரம் பெற்று உருவாகின்றன என்பதை நாம் நன்கு அறிந்து கொள்ள வேண்டும். பின்னால் பெரியவர்கள் ஆகும் போது, துன்பமும் மனக் கிலேசமும் ஏற்படக் கூடிய ரீதியிலே நாம் இப்பொழுது அவர்கள் மனதிலே துர் ஆசைகளையும் துர்ப் பெருமைகளையும் வளர்த்து விடக் கூடாது. கர்வம் பாவம் என்றும், அது ஏன் பாவம், அது எப்படிப் பலருடைய வீழ்ச்சிக்குக் காரணமாக இருந்தது என்றும் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டும்.

(நல்வழி)

Edited, Printed and Published, by P. Veeraraghavan at the 'Venkatesan Press' 94/95, New St. Mannady Madras—1.